Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஆடி 16 வெள்ளிக்கிழமை (01.08.2014) பக்கங்கள் 20 ஓசை – 304

## இலங்கைக்கான பயணம் வெற்றி என்கிறார் ரமபோஷ



இலங்கைக்கான தமது பய ...ம் வெற்றிகரமாக அமைந்தது ... தென்னாபிரிக்காவின் துணை ...பர் சிறில் ரமபோஷ தெரிவித ...ளார்.


...கப்டவுனில் உள்ள தென்னா... தேசிய சட்டமன்றத்தில் ... 23ஆம் திகதி நிகழ்த்திய, ...வு செலவுத் திட்ட வாக்கெடுப்பு மீதான உரையின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஒன்றாக இணைந்து பணியாற்றுவது மற்றும் பேச்சுக்களின் மூலம், மட்டுமே, பிரச்சினைகளைத் தீர்த்து, அமைதியையும் செழுமையையும் ஆபிரிக்காவிலும் அதற்கு அப்பாலும் ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கை

19 ஆம் பக்கம் பார்க்க

## நல்லூர் ஆலய சூழலில் தடையற்ற மின்சாரம்

### மின்பிறப்பாக்கியை வழங்கினார் அமைச்சர் டக்ளஸ்



நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்சவத்தை முன்னிட்டு ஆலய சூழலுக்கான தடையற்ற மின்விநியோகம் இலங்கை மின்சார சபையினால் மேற்கொள்ளப்படுகின்றது.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியின் பயனாக இன்றுமுதல்

19 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை தமிழ் இளைஞன் பிரான்ஸில் சடலமாக மீட்பு

(கொழும்பு)

இலங்கைத்தமிழ் இளைஞன் ஒருவரது சடலம் பிரான்ஸில் ஆற்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

இராஜதுரை லஜீவன் (வயது-23) என்பவரது சடலமே நேற்று முன்தினம் பிரான்ஸ் தலைநகர் பாரிசின் புறநகர் பகுதியான நியுலிப்லே சன்ஸ் பகுதியிலுள்ள ஆற்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளது. இது கொலையா, அல்லது தற்கொலையா என பிரான்ஸ் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

# அமெரிக்காவின் செயற்பாடுகள் தேசிய நல்லிணக்கத்தை பாதிக்கும்

### அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

...லங்கையில் ஒரு இனத்தை ...து பிரதேசத்தை மையப் ...தி அமெரிக்கா செயற்படு ...ல் அது நாட்டின் தேசிய ...லிணக்கத்தைப் பாதிக்கு ... அரசாங்கம் தெரிவித் ...து.

...மெரிக்காவின் நிதி உதவியுடன் ஒரு குறிப்பிட்ட பகுதியைச் சேர்ந்த, குறிப்பிட்ட இனக் குழுவைச் சேர்ந்த ஊடகவியலாளர்களுக்கு மட்டும் பயிற்சிகள் வழங்கப்படுவதன் உள் நோக்கம் என்னவென வெளிவிவகார அமைச்சு அமெரிக்காவிடம் கேள்வி எழுப்பி உள்ளது. இலங்கையில் ஊடகவியலாளர்கள் துன்புறுத்தப்படுகின்றனர் எனத் தனது அறிக்கையில் சுட்டிக் காட்டி உள்ள அமெரிக்கத் தூதரகம் அதேவேளை அவ்வாறான சம்பவங்கள் குறித்து அரசாங்கத்துடன் எந்தத் தகவல்களையும் பகிர்ந்து கொள்ளவில்லையே என்றும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. மேலும் அமெரிக்காவின் நிதி உதவியுடன் ஒரு குறிப்பிட்ட பகுதியைச் சேர்ந்த, குறிப்பிட்ட இனக் குழுவைச் சேர்ந்த ஊடகவியலாளர்களுக்கு மட்டும்

19 ஆம் பக்கம் பார்க்க

## ...னைவியை வெட்டிக்கொன்ற ...ணவனும் சடலமாக மீட்பு

...தடும்பத்தகராறு காரண... மனைவியை வெட்டிக் ...ன்ற கணவன் தானும் தூக் ...தொங்கிய சம்பவம் ஒன்று ...யா மகாரம்பைக்குளம் ...யில் நேற்று முன்தினம் ... 11.30 மணியளவில் இடம் ...வுள்ளது என வவுனியா ...லிஸார் தெரிவித்தனர்.

...ரம்பைக்குளத்தைச்சேர்ந்த ...லையா இராசேந்திரம் (வயது ...ன்ற 5 பிள்ளைகளின் தந்தையே அரபு நாடொன்றில் பணியாற்றிவிட்டு வந்த தனது மனைவியான இ. அமுதாவை (வயது-38) இரவு 11.30 மணியளவில் நித்திரையில் இருந்த சமயம் கோடரியால் தலையில் வெட்டியுள்ளார்.

இந் நிலையில் அதனை தடுக்க வந்த மனைவியின் தந்தையான வீ. வெள்ளைச்சாமி மற்றும் தாயான வெ. கிருஸ்ண

19 ஆம் பக்கம் பார்க்க

## ஊடக சுதந்திரம் வேண்டி யாழ். நகரில் ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

ஊடகவியலாளர்களின் செயற்பாடுகளை முடக்கும் வகையில் பொய்க்குற்றச் சாட்டுக்களை முன்வைக்கும் சதி முயற்சியை கண்டித்து யாழ். பஸ்நிலைய முன்றலில் ஊடகவியலாளர்கள் நேற்று நண்பகல் கண்டனப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில் பெருமளவிலான ஊடகவியலாளர்கள் கறுப்பு அங்கிகளுடன் பதாகைகள் ஏந்தியவாறு போராட்டத்தில் குதித்த

19 ஆம் பக்கம் பார்க்க




## ஒக்ரோபர் மாத இறுதிவரை வட,கிழக்கில் மழை இல்லை

### வளிமண்டலவியல் திணைக்களம் அறிவிப்பு

எதிர்வரும் ஒக்ரோபர் மாத இறுதி வரைக்கும், வடக்கு, கிழக்கு, வடமேல் மாகாணங்களிலும், தென் மாகாணத்தின் சில பகுதிகளிலும் மழை பெய்ய வாய்ப்பில்லை என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, வளிமண்டலவியல் திணைக்கள அதிகாரியான, பபோதனி கருணபால தகவல் வெளியிடுகையில்,

இலங்கை ஃஎல் நினோவினால் பாதிக்கப்பட்டுள்ளதாக இதுவரை கண்டறியப்படவில்லை.


19 ஆம் பக்கம் பார்க்க

## கிளி.வலய கல்விப்பணிப்பாளர் வாகன விபத்தில் படுகாயம்

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கந்தசாமி முருகவேள் பயணித்த வாகனம் விபத்துக்குள்ளாகியதில் அவர் படுகாயமடைந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுப் பிற்பகல் 2.50 மணிக்கு இடம் பெற்ற இந்த விபத்தின் போதே வலயக் கல்விப்பணிப்பாளர் காயமடைந்து வைத்

19 ஆம் பக்கம் பார்க்க




உள்ளே → தரம் 5 புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்





வருகின்ற வருமானம் போதாதா?

20,000/= - 38,000/= க்கும் மேற்பட்ட சம்பளத்துக்கு நிரந்தரமான தொழிற்சாலைகளான ஜேம், பிஸ்கட், சொக்லேட், ஐஸ்கிறீம், கிளவுஸ், சிமெந்து, சீட், டயர் ஆகிய நூர் உற்பத்திக்கு பொருட்கள் பெக்கிங் பழுதுபார்த்தல், ஸ்டோர்ஸ் ஆகிய பிரிவுக்கு 18 - 55 வயதான ஆண், பெண் தேவை. சாப்பாடு, பாதுகாப்பான தங்குமிட வசதி உண்டு. சிங்களம் கட்டாயம் இல்லை. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா முன்னுரிமை. தம்பதிகள், நண்பர்கள் ஒரே இடத்தில் குழுக்களாக வருகின்ற தினமே சேர்த்துக்கொள்ளப்படுவர். (0775964299) (C/3735)

# கொடியேற்றம்

(வரணி)

கரம்பன் வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் நடைபெறவுள்ளது.


இவ் உற்சவத்தில் இன்று காலை 9 மணிக்கு கொடியேற்றமும் எதிர்வரும் 9 ஆம் திகதி காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் 10 ஆம் திகதி காலை 10 மணிக்கு .தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது. (150)

# அபிவிருத்தியும் அரசியல் உரிமையும் எமது இரு கண்களுக்கு ஒப்பானவை

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் அபிவிருத்தியை மட்டுமல்லாது மக்களுக்கான அரசியல் உரிமைகளும் வென்றெடுக்கப்பட வேண்டுமென்பதே எமது முக்கிய நோக்கமாகும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு பகுதி மக்களுடனான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மக்களது நலன்சார்ந்த செயற்திட்டங்களை நியாயத்தினதும் நீதியானதும் அடிப்படையில் அரசின் கொள்கைத் திட்டங்களுக்கு அமைவாக செயற்படுத்தி



வருகின்றோம்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் தவறுகள் ஏற்படும் பட்சத்தில் அவற்றை தீர்த்து வைப்பதற்கு நாம் தயாராகவே இருக்கின்றோம்.

ஒவ்வொரு மனிதனதும் அடிப்படை உரிமைகள் என்பது அவர்களுக்கே உரித்தானவை.

கடந்தகால அரசியல் தலைமைகளின் தவறான வழிநடத்தல்களினால் எமது மக்கள் முள்ளிவாய்க்கால் வரை செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டிருந்தது.

இந்தநிலையில் நடைமுறைச்சாத்தியமான வழிமுறையில் தான் எமது மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என்பதை நாம் நீண்டகாலமாக வலியுறுத்தி வருகின்றோம்.

மருதங்கேணிப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் ஏற்கனவே நாம் பல்வேறுபட்ட அபிவிருத்திச் செயற்றிட்டங்களை முன்னெடுத்துள்ளோம்.

எமது நோக்கம் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மீளப்புனரமைத்து அபிவிருத்தி செய்வது மட்டுமல்ல. அதற்கும் மேலாக அரசியல் உரிமைகளையும் வென்றெடுப்பதேயாகுமென்பதுடன் அபிவிருத்தியும் அரசியலும் எமது இரு கண்கள் என்றும் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில் எதிர்காலத்தில் எமது திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மக்கள் முழுமையான ஆதரவும் ஒத்துழைப்பும் தரும் பட்சத்திலேயே சாத்தியமாகும்.

யாழ்.மாவட்டத்தின் புல பகுதிகள் சுனாமியால் மட்டுமல்லாது யுத்தத்தினாலும் பல்வேறு பாதிப்புக்களையும் அழிவுகளையும் சந்தித்திருந்த நிலையில் இவற்றை அபிவிருத்தியால் கட்டியெழுப்ப வேண்டியது முக்கிய கடப்பாடாகும்.

இதன்பொருட்டே நாம் இணக்க அரசியல் ஊடாகவும் அரசுடனான நல்லுறவையும் கொண்டு அபிவிருத்திகளையும் முன்னெடுத்து வருகின்றோம்.

முக்கியமாக மக்களது நீதியான நியாயமான கோரிக்கைகள் தொடர்பில் ஆராய்ந்து திட்டங்களை வகுத்து அவற்றை துறைசார்ந்தோர் ஊடாக நடைமுறைப்படுத்தியும் வருகின்றோம் என்றும் தெரிவித்தார்.

இதன்போது ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் உதயன், மருதங்கேணி பிரதேச செயலர் திருலிங்கநாதன், ஈ.பி.டி.பியின் சர்வதேச இணைப்பாளர் மித்திரன், ஈ.பி.டி.பி.யின் வடமராட்சி இணைப்பாளர் ரங்கேஸ்வரன் ஆகியோர் உடனிருந்தனர்.

## வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணையம் (வ-து)

### பதவி வெற்றிடங்கள்

எழுதுனர்

மேற்படி பணி நிலைக்கு தகுதியுள்ள விண்ணப்பதாரியிடமிருந்து விண்ணப்பங்கள் கோராப்படுகின்றது.

சம்பளத் திட்டம்- 302/13
9950-11700
85X10-90X10

காலத்திற்குக் காலம் சுற்றுநிருபங்களிற்கு அமைவாக வழங்கப்படும் அனைத்துப்படிகளும் வழங்கப்படும்.

தகமைகள்.

01) அ.கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத் திட்டத்தில் இலிகிதர் பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது

02 ஆண்டுகால அனுபவம் / கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத் திட்டத்தில் இலிகிதர் பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 4 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ.கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரம்/ க.பொ.த.சாதாரண தரம் / தே.க.பொ.த. பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது எண்கணிதம்/ வர்த்தக எண்கணிதம் / தூயகணிதம் / கணிதமுடன் சிங்களம் / தமிழ்மொழி என்பவற்றை உள்ளடக்கி 05 திறமைச்சித்தியுடன் கூடிய ஆறு பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவுச் சங்கமொன்றில் இலிகிதர் பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது இரண்டு ஆண்டுகால அனுபவம்.

02) 01. வயது 18 தொடக்கம் 35 இற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது கணிப்பிடப்படும்.

02. சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது சங்கப் பணியாளர்கள் தங்களது சங்கத்தினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.

03). சேவைத் தகமைகளுக்குரிய சான்றிதழ்களின் நிழற்பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

05) விண்ணப்ப முடிவுத் திகதி 15.08.2014

குறிப்பு- விண்ணப்பங்கள் தலைவர், வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணையம், A9 வீதி, கிளிநொச்சி. எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

திரு. சி. முத்துக்குமார்
தலைவர்,
வடமாகாண ப.தெ.வ.அ.கூ.நிறு.பேரிணையம்
A9 வீதி, கிளிநொச்சி

(C/3753)


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2550 திகதி 30-07-2014

ஆங்கில எழுத்து: X

வெற்றி எண்கள்: 22 23 29 52

போனஸ் இல: 43

ஜக்பொட் பரிசு ரூ.11,756,400/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 228497 | 20/- | 4,569,940/- |
| 2 இல | 16417 | 100/- | 1,641,700/- |
| 3 இல | 341 | 1,000/- | 341,000/- |
| 4 இல | 02 | 1,000,000/- | 2,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 9150 | 40/- | 366,000/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 653 | 1,000/- | 653,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 15 | 10,000/- | 150,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 11,756,400/- | - |
| 1 இல + போனஸ் இல | 10940 | 100/- | 1,094,000/- |
| 2 இல + போனஸ் இல | 518 | 500/- | 259,000/- |
| 3 இல + போனஸ் இல | 05 | 100,000/- | 500,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 433 | 200/- | 86,600/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 17 | 1,500/- | 25,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 266988 | | 11,686,740/- |

பச்சை நிற டிக்கட்டுகள் 2014.08.02 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ.12,380,650/-

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

(C/3753)


# யாழில் வீதி விபத்தில் 26 பேர் பலி; அரை ஆண்டு கால விபரீதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கடந்த வருட முதல் 6 மாத காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு முதல் 6 மாத காலப்பகுதியில் விபத்துக்களால் ஏற்பட்ட மரணங்கள் அதிகரித்திருப்பதாக யாழ். போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்தனர்.

வீதி விபத்தின் மூலம் கடந்த ஆண்டு முதல் அரையாண்டில் 26 பேர் மரணமாகியுள்ளனர். இந்த ஆண்டில் 34 பேர் மரணமாகியுள்ளனர். இதேவேளை பாரிய காயங்களை ஏற்படுத்திய 64 விபத்துக்கள் கடந்த ஆண்டிலும் இந்த வருட 6 மாதகாலத்தில் 48 விபத்துக்களும் இடம்பெற்றுள்ளன.

அத்துடன் சிறுகாயங்களுடனான 108 விபத்துக்கள் கடந்த ஆண்டு முதல் 6 மாதகாலத்தில் ஏற்பட்டதுடன் இந்த வருட 6 மாதகாலத்தில் 108 பேரும் சிறு காயமடைந்துள்ளனர்.

அந்த வகையில் கடந்த ஆண்டில் 38 விபத்துக்களும் இந்த ஆண்டில் 12 விபத் துக்களும் இடம்பெற்றுள்ளன.

இதேவேளை போக்குவரத்து பொலிஸாரின் உடனடித் தண்டம் மற்றும் நீதிமன்ற தண்டம் என்பவற்றின் ஊடாக கடந்த காலப்பகுதியில் 19,589 வழக்குகள் மூலம் 89,55120,00 ரூபா அறவிடப்பட்டதாகவும் இந்த ஆண்டின் 6 மாதகாலப்பகுதியில் 14,965 வழக்குகள் மூலம் 75,21590,00 ரூபா அறவிடப்பட்டிருந்தது.

அவை பிரதேச சபை, மாநகரசபை, நகரசபை என பல்வேறு அபிவிருத்திகளுக்கு பயன்படும் எனவும் யாழ்.போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்தனர்.

# மீண்டும் டெங்கு

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆடி மாதம் மட்டும் யாழ்.போதனா வைத்தியசாலையில் டெங்கு நோய்த் தாக்கத்திற்குள்ளாகிய 46 பேர் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டதாக அவ்வைத்தியசாலையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த எண்ணிக்கை இந்த வருடத்தில் நேற்று வரை 412 பேர் இவ்வாறு யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாக அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். (பா)


## டயானா பிளாஸ்ரிக்

*றீசைக்கிள் (மீள் சுழற்சி)*

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.

(C/3395)

# சிறார்களின் இயல்பான திறனை ஆசிரியர்கள் வளர்க்கவேண்டும்

## வலிகாமம் வலய ஆசிரிய ஆலோசகர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

முன்பள்ளி சிறார்களிடத்திலே இருக்கின்ற இயல்பான திறன்களை இனங்கண்டு அத்திறன்களை பெற்றோரும், ஆசிரியர்களும் இணைந்து வளர்த்தெடுக்க வேண்டும் என வலிகாம கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் என்.பி.ஸ்ரீந்திரன் தெரிவித்தார்.

கோண்டாவில் மேற்கு குழந்தைகள் உலகமுன்பள்ளி விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

சிறார்களின் திறன்கள் விளையாட்டுக்கள், அழகியற் செயற்பாடுகள் மூலம் வளர்த்தெடுக்கப்படவேண்டும் மென குழந்தைக் கல்வியியலாளர்கள் கூறுகின்றனர்.

இதற்கேற்ற சூழலைப் பள்ளியிலும், இல்லங்களிலும் ஆசிரியர்களும், பெற்றோர்களும் ஏற்படுத்திக் கொடுப்பது அவசியமாகும். முன்பள்ளிக் கல்விச் செயற்பாட்டில் ஈடுபடும் ஆசிரியர்கள் குழந்தையின் மனதை நன்கு புரிந்து கொள்ளக்கூடியவர்களாக இருக்க வேண்டும்.

ஆகவேதான் பாடசாலையிலும், இல்லங்களிலும் குழந்தைகளுக்கு தகுந்த நல்ல சூழலை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

எனவே, நல்லசூழல், நல்ல தொடர்புகள் குழந்தைகளுக்கு அமையும் போது அக்குழந்தைகள் வீட்டிற்கும், நாட்டிற்கும் நற்பிரஜைகளாக வளர்கின்றனர் என்பதை நாம் அனைவரும் உணர்ந்து சொற்படவேண்டும் எனத்தெரிவித்தார். (06)

# அரியாலை சனசமூக நிலையத்தின் கலைகலாசார நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

அரியாலை சனசமூக நிலையத்தின் 65 ஆவது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு நடைபெறவுள்ள சிறப்புக் கலைவிழா நிகழ்வு நாளை சனிக்கிழமை இரவு 7 மணிக்கு அரியாலை சனசமூக நிலைய அமரர் காசிப்பிள்ளை அரங்கில் திருமதி தவராசா கமலாதேவி தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கனகரத்தினம் மகாவித்தியாலய அதிபர் செல்லையா இளங்கோ திருமதி லதாவாணி இளங்கோ, சிறப்பு விருந்தினராக தலைவர் மகேஸ்வரன் பாஸ்கரன் (மகேஸ் கண்ணா), அரியாலை சனசமூகநிலைய நோர்வே கிளைத்தலைவர், திருமதி விஜிதா பாஸ்கரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

கலை நிகழ்வுகளாக முதுகலைமாணி திருமதி அனுசாந்தி சுகிர்தராஜின் நல்லைக்கலாமந்திர நடனாலய மாணவிகளின் நிருத்தியார்ப்பணம் நாட்டிய நிகழ்வும் எஸ்.ரி.குமரன் எஸ்.ரி.அருள்குமரன் ஆகியோரின் நெறியாள்கையில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவர்கள் அளிக்கும் "சங்கிலியன்" வரலாற்று நாடக ஆற்றுகையும் விழாவின் பிரமாண்டமான நிகழ்வாக யாழ்முன்னணிக் கலைஞர்களுடன் பிரபல பாடகர்கள் இணைந்து வழங்கும் ஜெப்னா றிதிம்ஸ் ஸ்ரார் இசைக்குழுவினரின் இசைச்சங்கம நிகழ்வும் இடம் பெறவுள்ளன.

மேலும் நிகழ்வில் சனசமூக நிலையத்தினரால் நடாத்தப்பட்ட கலைப் போட்டியில் முதலாமிடம் பெற்றவர்களின் நிகழ்வும் நிலைய வளர்ச்சியில் பங்குகொண்டவர்களில் குழந்தைவேல பத்மநாதன், சபாபதிப்பிள்ளை பாலசிங்கம், வீரபாகு ஐயாத்துரை, சங்கரப்பிள்ளை பொன்னுத்துரை, சுப்பிரமணியம் மனோகரன் ஆகியோருக்கான கௌரவிப்பு நிகழ்வும் இடம் பெறவுள்ளன. (63)

# பேருந்துதரிப்பிடம் அமைக்கப்படுமா? கேள்வி எழுப்பும் பொதுமக்கள்

(கொடிகாமம்)

கொடிகாமம் சந்தியில் அமைந்துள்ள கொடிகாமம் நகர பேருந்து தரிப்பிடம் உரிய வசதிகள் இன்றி உள்ளதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர். ஏ9 வீதிக்கு அருகாமையில் உள்ள இந்தப் பேருந்து தரிப்பிடத்தை தினமும் ஏராளமான பயணிகள் பயன்படுத்துகின்றனர்.

வடமராட்சி, தென்மராட்சி போன்ற பகுதிகளில் உள்ள பொது மக்கள், அரச அலுவலர்கள் தினமும் இப் பேருந்துதரிப்பிடத்தை பயன்படுத்துவதோடு, வெளிமாவட்டங்களுக்கு பயணம் செய்யும் பொதுமக்களும் இதனையே பயன்படுத்துகின்றன.

இப் பேருந்துதரிப்பிடத்தில் சிறுவர்கள், முதியவர்கள் இருந்து செல்லக்கூடிய இருக்கை வசதிகள் எவையும் இல்லை. மழை, வெய்யில் காலங்களில் பாதுகாப்பாக நிற்ககூடிய கொட்டகை வசதிகளும் இல்லை. இதனால் மழைகாலங்களில் பயணிகள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கின்றனர். எனவே பொதுமக்களின் நன்மைகருதி கொடிகாமம் மக்கள் பேருந்துதரிப்பிடம் உரியமுறையில் திருத்தம் செய்யப்படவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



யாழ்.செம்மணி வீதியில் நேற்றுக் காலை பிக்கப் வாகனம் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து பனைமரத்துடன் மோதியது... (51)

# மாவைக்குத் தலைமையாம்...! மக்களின் கதி 'அரோகரா'...!!




மாவை சேனாதிராஜாவைத் தமிழரசுக்கட்சியின் தலைமைப்பதவிக்கு சிபாரிசு செய்திருக்கிறார் முதலமைச்சர் எங்கள் தங்கம் சிவசிவா விக்கினேஸ்வரன்.

தமிழர்களின் கடந்த காலம், நிகழ்காலம் மட்டுமில்ல, எதிர்காலமும் பாழாகப்போகுது.

சத்தியமாகச் சொல்லுறன் தமிழரசுக் கட்சி தலையெடுத்து, அதுக்கு மாவை தலைவராக வந்தால் தமிழற்ற சரித்திரமே முழுஞ்ச மாதிரித்தான். இதை நான் ஒரு தயக்கமும் இல்லாமல் தீர்க்கதரிசனமாக அடிச்சுச் சொல்லுவன்.

மாவை அரசியலுக்கு வந்த காலத்தில இருந்து நானும் எல்லாத்தையும் பார்த்துக்கொண்டுதானிருக்கிறன்.

நாப்பது வருசமாக மாவையும் முழங்காத முழக்கமில்லை.

பேசாத பேச்சில்லை. சந்திக்காத ஆட்களில்லை. பிடிக்காத காலில்லை. குடுக்காத வாக்குறுதிகளில்லை.

ஏதோ எல்லாத்தையும் வெட்டிப்புடுங்குகிற மாதிரி மேடையில பேசுவாரே தவிர, ஒரு வாழைப்பழத்துக்கு ஒழுங்காகத் தோலை உரிக்கவே தெரியாத கேஸ்தான் மாவை.

இல்லாட்டிக்கு, இந்த நாப்பது வருச அரசியல் பணியில மாவை சாதிச்சது என்ன?

மாவையினால் எங்கட தமிழ்ச்சனங்கள் பெற்ற நன்மைகள் என்ன?

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு மாவை செய்த பங்களிப்புகள் என்ன?

போராட்டத்திலயோ போர்க்காலத்திலயோ மாவை செய்த முக்கியமான காரியங்கள் என்ன?

போருக்குப் பிந்தி, பாதிக்கப்பட்ட சனங்களுக்கு மாவை செய்த தொண்டுகள் என்ன?

இப்பிடியே மாவையைப் பார்த்து ஆரும் ஆயிரம் கேள்விகளைக் கேட்கலாம்.

ஒரு கேள்விக்குக் கூட மாவையினால் ஒழுங்காகப் பதில் சொல்ல முடியாது.

ஆனால், இந்த நாப்பது வருச அரசியல்ல மாவையும் அவற்றை குடும்பமும் நல்ல வாழ்க்கை வாழ்ந்திருக்கு.

தமிழரசுக்கட்சி மாவைக்கும் அவற்றை அடிப்பொடிகள் நாலைஞ்சு பேருக்கும் சோறு போட்டிருக்கு. பிளேன்ரி ஊத்தியிருக்கு. ஐஸ்கிறீம் குடுத்திருக்கு. பாராளுமன்றத்தில் கதிரையைக் குடுத்திருக்கு. அந்தக் கதிரையால ஏகப்பட்ட வசதிகளும் சலுகைகளும் கிடைச்சிருக்கு.

மாவையின்ரை பெடியள் தேர்தல் காலத்தில லண்டனில இருந்து வந்து தேர்தற்பணியைச் செய்யக் கூடிய மாதிரி ஒரு வாழ்க்கையை மாவை பெற்றிருக்கிறார்.

இதைத்தவிர, மாவை தன்ரை வயசுக்கும் அரசியல்ல இருந்த காலத்துக்கும் என்ன பயனை இந்தத் தமிழ்ச்சனத்துக்கும் தமிழ்ச் சமூகத்துக்கும் அவர் அடிக்கடி வாய்கூசாமல் உச்சரிக்கிற தமிழீழத்துக்கும் செய்திருக்கிறார் எண்டு சொல்லட்டும் பாப்பம்.

இதை அவற்றை அடிப்பொடிகளில ஆராவது ஒருத்தன் வந்து முன்னுக்கு நிண்டு சொல்லி நெஞ்சை நிமித்தட்டும் பாக்கலாம்.

உண்மையில மனச்சாட்சி இருந்தால் மாவை அரசியல்லயே இருந்திருக்கப்படாது.

அப்பிடி இருக்கிறதாக இருந்தாலும் இந்த மாதிரிப் பேய்க்கதைகளை எல்லாம் கதைக்கிறது பொருத்தமில்லை.

வட்டுக்கோட்டைத் தீர்மானம் இப்ப சிரிப்புக்கிடமான சங்கதியாகிட்டுது.

தமிழீழம் எண்டு ஆரும் இப்ப சொன்னால் அதை நினைச்சு, அதைப்பற்றிச் சொல்லிறவற்றை அறிவைப் பார்ந்துச் சிரிக்கத்தான் வேணும்.

13 ஆவது சரத்தையே நிறைவேற்றி வைக்க முடியாமல் இருக்கேக்க, தமிழீழத்தைப் பற்றிக் கதைச்சால் ஆருக்குத்தான் சிரிப்பு வராது.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்குப் போகமாட்டம்.

வலிவடக்கில் பெரும் போராட்டம் நடக்கும்.

சர்வதேச சமூகத்துக்குச் சொல்லி இலங்கை அரசுக்கு நல்ல பாடம் படிப்பிப்பம் எண்டமாதிரியெல்லாம் மாவை இப்பவும் புலுடா விட்டுக்கொண்டிருக்கிறார்.

இல்லாவிட்டால் பழக்கதோசத்தில ஏதோ புலம்பிக்கொண்டிருக்கிறார்.

மாவைக்குத் தெரியும் இதெல்லாம் பச்சைப்பொய்யெண்டு.

ஆனாலும் பொய்சொல்லிப் பழகின வாய் உண்மையைச் சொல்லக் கூசும்.

இல்லாவிட்டால், கடவுள்தான் இனித் தமிழ் மக்களைக் காப்பாற்ற வேணும் எண்டு சொல்லி, எஸ்.ஜே.வி. செல்வநாயகமே தமிழரசுக்கட்சியைக் கைவிட்டபிறகும் அதைத் தூக்கி வைச்சுக்கொண்டு பிலாக்கணம் பாடுவாரா மாவை?

செல்வநாயகத்தின்ரை காலத்துக்குப் பிறகு என்ன புதுமைகளைச் சேர்த்திருக்கினம் எண்டு ஆரும் சொல்லுங்கோ பார்ப்பம்.

ஏதாவது புதிய தந்திரோபாயங்கள்... ஏதாவது புதிய சரக்குகள்...

முந்தி இருந்த ஆட்களை விட இப்ப இருக்கிற ஆட்கள் அழுகின வெங்காயங்கள்....

இந்தக் கோலத்திலதான் மாவை தமிழரசுக்கட்சிக்குப் போக்கஸ் லைற்றைப்போடப்போறாராம்...!

செத்துப்போன அந்தப் பிணத்துக்கு (தமிழரசுக்கட்சிக்கு – பழைய ஏ40, மைனர் கார்களைப் புதுப்பிக்கிறமாதிரி) அலங்காரம் பண்ணி ஊர்வலம் விடுகிறதிலதான் தமிழ்க் கூட்டமைப்பில கனபேருக்குக் கொள்ளை விருப்பம்.

ஆனால், அதெல்லாம் சரிப்பட்டு வராது.

அதாவது தமிழரசுக் கட்சியை வைச்சும் மாவையை வைச்சும் நிமித்தலாம் எண்டால்.. தமிழற்றை அரசியல் தலைவிதி சுடுகாட்டிலதான் போய் முடியும்.

**மாவைக் கந்தா! மாவையிட்ட இருந்து எங்களைக் காப்பாற்று!!**

வாழ்க்கையில் எப்போதும், சமாதானத்தையும் சகிப்புத்தன்மையையும் நமது இலட்சியமாக கொள்ள வேண்டும். - பாரதியார்.

தினப்பதிப்பு தினமுரசு THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## தியாகத்திற்குத் தயாராகும் மாவையார்...

தமிழரசுக் கட்சியின் தலைவராக திரு மாவை சேனாதிராசா நியமிக்கப்படப் போவதாக ஒரு செய்தி முன்னோட்டம் விடப்பட்டிருக்கிறது. இதற்கு முன்னர் வடக்கு முதலமைச்சர் திரு விக்னேஸ்வரனைத் தான் அப்பதவிக்கு நியமிக்க தற்போதைய தலைவர் திரு சம்பந்தன் உத்தேசிப்பதாக செய்தி கசியவிடப்பட்டிருந்தது.

பின்னர் விக்னேஸ்வரன் அவர்கள் அந்தச் செய்தியை மறுத்து மாவைதான் அப்பதவிக்கு பொருத்தமானவர் என்று வெளிப்படுத்தியிருந்த பெருந்தன்மைச் செய்தியும் வந்திருந்தது. எந்தவகையில் மாவையாருக்கு கட்சித் தலைமைப் பதவி பொருத்தம் என பதை முதலமைச்சர் சொல்லாத போதும், ஆராய்ந்தால் பல சுவாரஷ்யங்கள் வெளிப்படுகின்றன.

தமிழரசுக் கட்சி சார்பாக வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராக வருவதற்கு மாவை விரும்பியிருந்தார் என்பது சகலரும் அறிந்ததுதான். வேட்பாளராக யாரைத் தேர்வு செய்வது என்பதற்காக நடந்த தமிழரசுக் கட்சிக் கூட்டத்தில் தலைவர் இரா.சம்பந்தன் மாவையாரின் முன்னிலையிலேயே பின்வருமாறு கூறியிருந்தார்:

"வடக்கு முதலமைச்சர் என்பது இன்றைய சூழ்நிலையில் மிகமிக முக்கியமானதொரு பதவி. தமிழர் பிரச்சினையில் சர்வதேசம் வெகு உன்னிப்பாக கவனம் செலுத்துகின்ற இத்தருணத்தில், வடக்கின் முதலமைச்சராக வரப்போகிறவர் ஆளுமை மிக்கவராகவும், சர்வதேச சட்டப் பரிச்சயம் மிக்கவராகவும், சர்வதேசத் தலைவர்களுடன் ஊடாடும் திறன்வாய்ந்தவராகவும் இருக்க வேண்டும்" என்று அடித்துப் பேசியிருந்தார்.

அதனடிப்படையிலேயே தான் அப்பதவிக்குப் பொருத்தமானவரில்லை என மாவை தாமாகவே ஒப்புக்கொள்ள வைக்கப்பட்டார். முதலமைச்சர் போன்ற ஆளுமை தேவைப்படும் பதவிகளுக்குப் பொருத்தமற்ற சேனாதிராசா அவர்கள் தமிழரசுக் கட்சித் தலைமைப் பதவிக்குத்தான் பொருத்தமானவர் என்று திரு சம்பந்தனும் திரு விக்னேஸ்வரனும் தீர்மானிக்கிறார்கள் என்றால்... யோசிக்க வேண்டிய விஷயம்தான்.

இதனிடையே, இலங்கையின் பிரபலமான அரசியலமைப்புச் சட்ட நிபுணத்துவ வழக்கறிஞர் ஒருவர் இவ்வாறு சொல்லியிருந்தார்: "இலங்கையிலுள்ள அரசியலமைப்புச் சட்ட விதிகள், ஒரு கட்சியின் செயலாளராகப் பதவியில் இருப்பவரை ஏறக்குறைய ஒரு முடிமன்னருக்கு ஒப்பானவராக ஆக்குகின்றன."

அதாவது, இலங்கையின் அரசியற் சட்ட விதிகளின்படி, கட்சியின் செயலாளரே, அந்தக் கட்சி சம்பந்தப்பட்ட வரையில் வானளாவிய அதிகாரங்களை உடையவராவார். இதன்படி, தற்போது தமிழரசுக் கட்சியின் செயலாளராக இருக்கும் திரு மாவை சேனாதிராசா அவர்களை கட்சியின் தலைவராக்கிவிட எடுக்கப்படும் முயற்சிகளின் பின்னால் உள்ள சூட்சுமம் புரிந்துகொள்ளக் கூடியதுதான்.

"சர்வதேசம் எங்களை வெகு உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டிருக்கும் இந்தக் கட்டத்தில், தமிழ்க் கட்சியொன்றின் செயலாளராக இருப்பவர், சர்வதேசத்தால் விரும்பப்படும் ஆளுமை மிக்கவராக இருத்தல் வேண்டும்" என்று தலைவர் சம்பந்தன் தன் விழிகளை உருட்டி அழுத்தி உரைத்தாரென்றால், அந்தப் பதவிக்கு திரு சுமந்திரன் தான் பொருத்தமானவர் என்பதை உடனடியாக ஒப்புக்கொண்டுவிடக் கூடியவர்தான் மாவை.

தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியைப் பிடுங்கிவிடாத வரையில், "கட்சியினதும் தமிழ் மக்களினதும் நலன் கருதி(?!)" எந்த விட்டுக்கொடுப்புக்கும் தயாரானவர்தான் அந்நாளைய இளைஞர் தளபதி. அதற்காக, எந்தவொரு தியாகமோ சிறையோ போராட்டக் கஷ்டங்களோ இல்லாமலே இன்று "தமிழ்த் தேசிய அதிர்ஷ்டத்தால்" தலைவர்களாக வந்துவிட்டவர்கள், பழம்பெரும் தளபதியைத் தொடர்ந்து தியாகமே செய்துகொண்டிருக்கும்படி கேட்பதா?

- ஆசிரியர்.

# ஏற்றுமதி வருமானம் அரையாண்டில் மும்மடங்காக அதிகரிப்பு

(கொழும்பு)

2014 ஆம் ஆண்டின் அரைப் பகுதிக்கான இலங்கையின் ஏற்றுமதித்துறை வருமானம் மும்மடங்காக அதிகரித்து சாதனை படைத்துள்ளது. முதல் தரமாக இடம்பெற்ற இச்சாதனை வெற்றி 2014 ஆம் ஆண்டின் ஜனவரி முதல் யூன் வரையில் இடம் பெற்றதாகும்.

இவ் அதிகரிப்பினையடுத்து இறுதியாக வெளிவந்த அறிக்கைகளின் படி நாட்டு வர்த்தக இலக்காக 20 பில்லியன் அமெரிக்க டொலர்கள் இனங்காணப்பட்டுள்ளது. வர்த்தக தொழில்நுட்ப முதலீட்டாளர்களுக்கு தெரியப்படுத்துவதன் மூலம் இவ்விலக்கினை இலகுவாக எட்ட முடியும் என கைத்தொழில்துறை மற்றும் வணிக அமைச்சர் றிசாட் பதியுதீன் கொழும்பில் இடம்பெற்ற மாநாடடின் போது தெரிவித்துள்ளார்.

பொருளாதார அபிவிருத்தி சபையின் தலைவர் பந்துல எகோடகே கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் றிசாட் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

2010 ஆம் ஆண்டிலிருந்து மாகாண அளவிலான ஏற்றுமதி வருமானம் 5410.4 மில்லியன் அமெரிக்க டொலர்கள் (5.4 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இப்பெறுமதியிலிருந்து 2014 ஆம் ஆண்டில் 45 சதவீத வளர்ச்சியடைந்து 3741 மில்லியன் அமெரிக்க டொலர்களால் அதிகரித்துள்ளது.

இவ் ஐந்து வருட காலகட்டத்தில் எல்லாவிதமான ஏற்றுமதிப்பொருட்களையும் சேர்த்து 100 சதவீத வளர்ச்சியினை எட்டியுள்ளது. விவசாய பொருள் ஏற்றுமதி (70%), கைத்தொழில் ஏற்றுமதி (69%), மீன் பிடித்துறை ஏற்றுமதி (65%), ஆடை ஏற்றுமதி (57%), மற்றும் தேயிலை ஏற்றுமதி (56%), இவ்வாறான மொத்த ஏற்றுமதி 100 சதவீத முழுவளர்ச்சியை பெற்றுள்ளது.

மீன்பிடி 24 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து 140.22 மில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டியுள்ளது. விவசாய உற்பத்தி 22 சதவீத வளர்ச்சியால் 1303.2 மில்லியன் அமெரிக்க டொலர்களையும், ஆடை உற்பத்தி 20.40 சதவீத வளர்ச்சியால் 2400.5 மில்லியன் அமெரிக்க டொலர்களினையும் எட்ட வழிவகுத்துள்ளது. ஏனைய பொருட்கள் ஏற்றுமதி 17 சதவீத வளர்ச்சியைப் பெற்றுள்ளது.

ஒவ்வொரு பிரதேசங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படும் பொருட்கள் பிரதேச மற்றும் நாட்டு ரீதியில் முக்கிய வளர்ச்சியினை எட்டியுள்ளன. அவ்வகையில் ஆபிரிக்கா (41%), ஐரோப்பா (19%), மத்திய கிழக்கு நாடுகள் (19%), அமெரிக்கா (17%), பிறிக்ஸ் நாடுகள் (14%), லத்தின் அமெரிக்கா (12%) தென்ஆசியா (11%) வளர்ச்சியினை எட்டி நாட்டு ஏற்றுமதி வளர்ச்சியில் முக்கிய பங்கு வகித்துள்ளது.

முக்கிய முதல் ஐந்து ஏற்றுமதி வர்த்தக நாடுகளாக அமெரிக்கா, லண்டன், இத்தாலி, இந்தியா, மற்றும் ஜேர்மனி ஆகியனவாகும். மாதாந்த ரீதியிலும் ஒவ்வொரு ஏற்றுமதி முக்கிய வளர்ச்சி நிலைகளைப் பெற்றுள்ளது. முதல் மூன்று மாதங்களில் ஏற்பட்ட வளர்ச்சியை விடவும் தற்போது அவ் வளர்ச்சி மும்மடங்காக அதிகரித்தமை குறிப்பிடலாம். இதன் பயனாக இவ்வளர்ச்சி வீதங்கள் மென் மேலும் அதிகரித்து 2020 ஆம் ஆண்டளவில் 20 பில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டுவதே எமது இலக்காகும் என்றார்.

# ஆடை வடிவமைப்பில் கிடைத்தது முதல் தர விருது

(கொழும்பு)

இலங்கையின் முதல் தர ஆடை வடிவமைப்பு மையங்களில் ஒன்றாக விளங்கும் "பருத்தி சேகரிப்பு மற்றும் தோல் சேகரிப்பு" நிலையத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் நில்லோபர் அன்வெறலி இம்முறைக்கான தொழில்முறை மற்றும் பெண்கள் வாழ்க்கை சார்பான சிறப்பு வகையான விருதினைப் பெற்றுள்ளார்.

இந்த வாரம் இடம்பெற்ற இவ்விருது வழங்கும் விழாவில் பொருத்தமாக திறமைகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு வர்த்தக துறையில் திறமையான பெண் என்ற ரீதியில் இவர் முடிசூட்டப்பட்டுள்ளார்.

இவ்விருது வழங்கும் விழாவில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டுள்ளார். தொழில் வர்த்தக முறையில் மைல்கற்களாக குறிப்பிடத்தக்க பெருமைமிக்க முறையில் விளங்கும் பெண்களை சமூகத்துக்கு எடுத்துக்காட்டும் நோக்கிலேயே இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

வர்த்தகத்துறையில் முன்ணனி வகிக்கும் பெண்கள் ஒன்றிணைந்தே இவ்விருது வழங்கும் நிகழ்வை ஏற்பாடு செய்தனர்.

# இளைஞர், யுவதிகளை ஏமாற்ற முயற்சி செய்கிறார் ரணில்

## அமைச்சர் விமல் குற்றச்சாட்டு

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில விக்ரமசிங்க இளைஞர், யுவதிகளை ஏமாற்ற முயற்சி செய்து வருகின்றார்.

தனியார் பகுதி நேர வகுப்புகளுக்குச் சென்று மாணவர்களை தம்பி, தங்கை என அழைத்து வாக்குகளை சேகரித்து வருவதாக அமைச்சர் விமல் வீரவன்ச குற்றஞ்சாட்டியுள்ளார்.

கடுவெல பிரதேசத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2001 ஆம் ஆண்டு நாட்டு மக்கள் ரணில் விக்ரமசிங்கவிடம் ஏமாந்தனர், ஆனால் அவரது அரசாங்கம் இரண்டு ஆண்டுகளில் கவிழ்ந்தது.

ரணில், சந்தைகளுக்குச்சென்று காய்கறிகளை தடவிப்பார்க்கின்றார், அவர் மீண்டும் இளைஞர், யுவதிகளுக்கு தங்கச் சங்கிலி, வளையல், ப்ரேஸ்லட் கனவை நினைவூட்டி ஏமாற்ற முயன்று வருகிறார்.

இன்றைய அரசாங்கத்திடம் சில குறைபாடுகள் இருக்கின்றது என்பதை அனைவரும் அறிவார்கள்.

நாடு முன்னோக்கிச்செல்லாமல் இருக்கும் இடத்திலேயே இருக்கும் நிலைமையை மாற்ற வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வடமத்திய மாகாணத்தில் 2788 கிராமங்கள் அபிவிருத்தி

(கொழும்பு)

வடமத்திய மாகாணத்தில் 2788 கிராமங்களை அபிவிருத்தி செய்ய பொருளாதார அபிவிருத்தி அமைச்சு 5791 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

வடமத்திய மாகாணத்தின் அநுராதபுரம் மற்றும் பொலன்நறுவை மாவட்டங்களில் வீட்டுக்கு வீடு மற்றும் கிராமத்துக்கு கிராமம் தேசிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு இந்த நிதி பயன்படுத்தப்படும்.

வடமத்திய மாகாணத்தில் 30 பிரதேச செயலகப் பிரிவில் உள்ள 997 கிராம சேவகர் பிரிவில் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப் படவுள்ளன. இரண்டு மாவட்டங்களிலும் உள்ள 348,926 குடும்பங்களைச் சேர்ந்த 1337141 பேர் நன்மையடையவுள்ளனர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோரின் பணிப்புரையின் கீழ் முன்னெடுக்கப்பட்டிருக்கும் இந்த அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் இரு மாவட்டங்களிலும் 2788 கிராமங்கள் நன்மையடையவுள்ளன.

# ஏன் ரி.என்.ஏ உருவாக்கப்பட்டது? மற்றும் எல்.ரீ.ரீ.ஈ எப்படி அதன் கட்டுப்பாட்டைப் பெற்றது? -1



**உண்மையான பொறுப்புக்கூறலையும் மற்றும் நல்லிணக்கத்தையும் நாம் வரவேற்கிறோம் என தார்மீக அறநெறியின் உயர்தளத்தின் உச்சியில் நின்று அறைகூவல் விடுப்பதாக காட்டிக் கொள்ளும் ரி.என்.ஏ அரசியல் பண்டிதர்கள்கூட, அவர்களால் போலித்தனமாக வலியுறுத்தப்பட்ட எல்.ரீ.ரீ.ஈ யின் குற்றங்களைப் பற்றி சுயபரிசோதனை மேற்கொள்ளவோ அல்லது அதில் கவனம் செலுத்தவோ தங்களுக்கு ஒருபோதும் நேர்மையான ஆர்வம் கிடையாது என்கிற உண்மையை மறைப்பதற்காகவே இவ்வாறு கூறுகிறார்கள்.**

## டி.பி.எஸ் ஜெயராஜ் கட்டுரையிலிருந்து

**ஐ.நா.** மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் நடத்தும் விசாரணையின் முன்பாக ஆதாரங்களை வழங்கி உண்மை, பொறுப்புக்கூறல், மற்றும் நல்லிணக்கம் என்பனவற்றை முன்னேற்றுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (ரி.என்.ஏ) தலைமையேற்க வேண்டும் என்று கூறப்பட்டிருந்த ஆலோசனையானது சர்ச்சையை கிளப்பியுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் (எல்.ரீ.ரீ.ஈ) வெளிநாட்டு செயற்பாட்டாளர்கள், அவர்களின் ஆதரவாளர்கள் இந்த ஆலோசனையையிட்டு ஆத்திரம் அடைந்துள்ளார்கள்.

புலிகள் இப்போது மனித உரிமைகள் எனும் தாரக மந்திரத்தை இசைத்து வருகிறார்கள் என்று சொல்லப்படுவதற்கு மாறாக எல்.ரீ.ரீ.ஈ மற்றும் எல்.ரீ.ரீ.ஈ சார்பு சக்திகளின் இந்த பிரதிபலிப்பு, புலிகள் தன்மீதுள்ள கோடுகளை மாற்றவில்லை என்பதை வெளிக்காட்டுகிறது.

ஐ.நா. விசாரணையில் "உண்மை, முழுவதுமான உண்மை மற்றும் உண்மையை தவிர வேறெதுவும் அல்ல" வெளிவர வேண்டும், அதன்மூலம் உருவாகும் உண்மையான பொறுப்புக்கூறலையும் மற்றும் நல்லிணக்கத்தையும் நாம் வரவேற்கிறோம் என தார்மீக அறநெறியின் உயர்தளத்தின் உச்சியில் நின்று அறைகூவல் விடுப்பதாக காட்டிக் கொள்ளும் ரி.என்.ஏ அரசியல் பண்டிதர்கள்கூட, அவர்களால் போலித்தனமாக வலியுறுத்தப்பட்ட எல்.ரீ.ரீ.ஈ யின் குற்றங்களைப் பற்றி சுய-பரிசோதனை மேற்கொள்ளவோ அல்லது அதில் கவனம் செலுத்தவோ தங்களுக்கு ஒருபோதும் நேர்மையான ஆர்வம் கிடையாது என்கிற உண்மையை மறைப்பதற்காகவே இவ்வாறு கூறுகிறார்கள். மிகவும் சுவாரஸ்யமானதாகவும் மற்றும் உண்மையாகவும் உள்ள விடயம் என்னவென்றால் ஏராள-மான இலங்கையர்களும் மற்றும் இலங்கை வம்சாவளி மக்களும் எல்.ரீ.ரீ.ஈ - ரி.என்.ஏ ஆகியோரின் இந்தப் போலித்தனத்தை முன்கூட்டியே கணித்திருந்தார்கள். எல்.ரீ.ரீ.ஈ மற்றும் ரி.என்.ஏ இடையில் உள்ள தொடர்புகளைப் பற்றி அவர்கள் பேசியதுடன், இத்தகைய தொடர்புகள் இருப்பதனால் ஐ.நா. விசாரணையில் எல்.ரீ.ரீ.ஈ.யை வெளிப்படுத்துவது ரி.என்.ஏக்கு சாத்தியமல்ல என்றும் தெரிவித்திருந்தார்கள்.

அதில் மேலும் நுணுகி காணத்தக்கதாக இருந்தது, 2009ஆம் ஆண்டுக்குப் பிறகு ரி.என்.ஏ யின் நடத்தை பல வட்டாரங்களிலும், புலிகள் ஐந்து வருடங்களுக்கு முன்பு இராணுவ ரீதியாக தோற்கடிக்கப்பட்டிருந்தாலும், ரி.என்.ஏ இன்னமும் அவர்களது கைப்பாவையாகவும் மற்றும் எடுபிடியாகவுமே இருக்கிறார்கள் என்பதையே.

ஆரம்பத்தில் ரி.என்.ஏ ஒரு புலிகளின் உருவாக்கம் அல்ல என்கிற பிரசித்தமான நம்பிக்கைக்கு மாறாக, அது எல்.ரீ.ரீ.ஈ யின் எச்சரிக்கையான மறைமுக பின்துணையுடன் சுயாதீனமாக உருவாக்கப்பட்டது. அதன்பின் எல்.ரீ.ரீ.ஈ அதனை கண்காணித்து தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தோற்றத்தை தூண்டிய காரணி ஒக்ரோபர் 10, 2000இல் நடந்த பாராளுமன்ற தேர்தல். தேர்தல் முடிவுகள் பொதுவாகத் தமிழர்களிடத்தில் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியது. பழம்பெரும் அரசியல்வாதியான ஆர்.சம்பந்தன் உட்பட அரசியல் ரீதியாக உணர்வு மிக்க திருகோணமலை மாவட்டத்திலிருந்து ஒரு தமிழர்கூட தெரிவாகவில்லை. மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து தமிழர் விடுதலைக் கூட்டணியை (ரி.யு.எல்.எப்) சேர்ந்த இரண்டு தமிழர்கள் தெரிவானார்கள். ஆளும் பொதுஜன முன்னணியில் இருந்து மற்றொரு தமிழர் தெரிவு செய்யப்பட்டார்.

அம்பாறை மாவட்டத்திலிருந்து ஈ.பி.டி.பி. ஆதரவு வழங்கிய சுயேச்சையான ஒரு தமிழர் தெரிவானார். ஆறு ஆசனங்கள் உள்ள வன்னி மாவட்டத்தில் பிஏ மற்றும் ஐ.தே.க. என்பனவற்றிலிருந்து இரண்டு சிங்களவர்களும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசை சேர்ந்த ஒரு முஸ்லிமும், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தை சேர்ந்த (ரெலோ) இரண்டு தமிழர்களும் மற்றும் தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகத்தை (புளொட்) சேர்ந்த ஒரு தமிழரும் தெரிவானார்கள்.

ஒன்பது ஆசனங்கள் உள்ள யாழ்ப்பாண மாவட்டத்தில் போனஸ் ஆசனம் உட்பட நான்கு ஆச்னங்களை ஈ.பி.டி.பி. கைப்பற்றியது. ரி.யு.எல்.எப் மூன்றை வென்றது. தமிழ் காங்கிரஸ் ஒன்றையும் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஒன்றையும் வென்றன.

யாழ்ப்பாணத்தில் 42 வருடங்களுக்குப் பின்பு ஐ.தே.க. வெற்றி பெற்றது. 1952இல் சேர். பொன்னம்பலம் இராமநாதனின் மருமகன் சுப்பையாபிள்ளை நடேசன் ஐ.தே.க. சார்பில் வெற்றி பெற்றிருந்தார். இப்பொழுது தியாகராஜா மகேஸ்வரன் வெற்றி பெற்றிருந்தார்.

2000ஆம் ஆண்டு தேர்தலில் வடக்கு - கிழக்கில் இருந்து தமிழர்களின் பிரதிநிதித்துவம் குறைந்ததாக காணப்பட்டது. மேலும் தேசிய கட்சிகள் மற்றும் அரச சார்பான தமிழ் கட்சிகள் சிறப்பான முடிவுகளைப் பெற்றிருந்தன.

அரச சார்பற்ற தமிழ் அரசியற் கட்சிகள் தோல்வியடைந்ததுக்கான காரணம் அவற்றின் ஒற்றுமையின்மை, மற்றும் கற்பனை அல்லது எழுச்சியூட்டும் அரசியல் நிகழ்ச்சி நிரலின் குறைபாடு எனப் பார்க்கப்பட்டது.

இன ரீதியாக பல படி முறைகளைக் கொண்ட கிழக்கின் ஆபத்தான நிலைமை கடுமையாக உணரப்பட்டது. நிலைமையை ஆய்வு செய்யும் ஒரு கருத்தரங்கு கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்டது. முன்னாள் டெய்லி மிரர் பத்திரிகையின் பத்தி எழுத்தாளர் தராகி எனப்படும் தர்மலிங்கம் சிவராம் அதற்கு தலைமை தாங்கினார்.

எதிர்க்கட்சியில் உள்ள பல்வேறு தமிழ் அரசியல்கட்சிகள், வாக்குகள் சிதறுவதை தடுப்பதற்காக ஒரே குடையின் அமைப்பின்கீழ் ஒன்றுபட வேண்டும் என இந்த கருத்தரங்கில் தீர்மானிக்கப்பட்டது. அத்தகைய அமைப்பு பரந்தளவில் எல்.ரீ.ரீ.ஈக்கு ஆதரவளிக்க வேண்டும் என்றும் அங்கு உணர்த்தப்பட்டது.

இந்த தீர்மானத்துக்கு முதலாவதாக எல்.ரீ.ரீ.ஈ யின் அனுமதியையும் மற்றும் அவர்களின் உள்ளார்ந்த ஆதரவையும் பெறவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. இதில் எதிர்க் கட்சியில் உள்ள தமிழ் அரசியல்வாதிகளை கொலை செய்வதில்லை என்ற பாதுகாப்பையும் உத்தரவாதத்தையும் எல்.ரீ.ரீ.ஈயிடமிருந்து பெறுவது அவசியமாக இருந்தது.

இதற்குப் பதிலாக தமிழ் கட்சிகள் புலிகளின் உயர்ந்த நிலையை ஏற்றுக் கொள்வதுடன் எந்த பேச்சு வார்த்தையிலும் தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகளாக அவர்களை ஒப்புக்கொள்வது என்றும் தீர்மானிக்கப் பட்டது.

இரண்டாவதாக ஈபிஆர்எல்எப், புளொட், மற்றும் ரெலோ போன்ற கட்சிகள் ஆயுதங்களைக் கை விடுவதுடன், எல்.ரீ.ரீ.ஈயை வேட்டையாடுவதில் அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதில்லை என்றும் அறிவிக்க வேண்டும். அவர்களுடன் தொடர்புடைய ராசிக் குழு (ஈபிஆர்எல்எப்), மோகன் குழு (புளொட்) ரஞ்சன் குழு(ரெலோ) போன்றவற்றுடன் இந்த இயக்கங்கள் தீவிர தொடர்பைக் கொண்டிருந்தன. இவை அனைத்தும் கிழக்கிலேயே இருந்தன.

மூன்றாவதாக ரி.யு.எல்.எப் மற்றும் தமிழ் காங்கிரஸ் கட்சிகள் முன்னாள் போரா-ளிக் குழுக்களுடன் சேர்ந்து ஒரு பொது அமைப்பாக வேலை செய்வதற்கு சம்மதிக்க வேண்டும். முன்னாள் போராளிகளின் கரங்கள் இரத்தக் கறை பூண்டதாக இருப்பதால் அவர்களுடன் இணைய இரு கட்சிகளும் தயக்கம் காட்டின.

எல்.ரீ.ரீ.ஈயினர் இந்த பேச்சுவார்த்தை நடவடிக்கைகளில் நேரடியாக பங்கேற்கவில்லை. ஆனால் முன்னாள் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற் பொறுப்பாளராக இருந்த கரிகாலன் தொடர்புபட்டிருந்தார்.

பேச்சுக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே ஆரையம்பதி பிரதேச சபை தலை வர் ரெலோவை சேர்ந்த றொபேட்டை எல்.ரீ.ரீ.ஈ கொலை செய்தது (இந்த றொபேட் வேறு நபர், யாழ்ப்பாணத்தில் வைத்து 2002இல் எல்.ரீ.ரீ.ஈ கொலை செய்த ஈபிஆர்எல்எப் பினை சேர்ந்த றொபேட் அல்ல இவர்). இதன் விளைவாக ரெலோ ஒற்றுமை பேச்சுக்களில் இருந்து வெளியேற விரும்பியதால் இந்தக் கொலை ஒரு பாரிய பின்னடைவை ஏற்படுத்தியது. எனினும் குழு தனது முயற்சிகளை முன்னெடுத்து கிழக்கு எல்.ரீ.ரீ.ஈ தலைமையிடம் முறையீடு செய்தது. அப்போது கிழக்கு பிராந்திய இராணுவ தளபதியாக இருந்தவர் வேறு யாருமல்ல, கேணல் கருணா என்கிற விநாயகமூர்த்தி முரளீதரன்தான். அந்தக் கொலை அரசியல் பிரிவு மற்றும் புலனாய்வு பிரிவு என்பனவற்றுக்கு இடையே ஏற்பட்ட தொடர்பாடல் இடைவெளி காரணமாக தவறுதலாக நடைபெற்ற ஒன்று என எல்.ரீ.ரீ.ஈ விளக்கமளித்தது.

அதை தொடர்ந்து ரெலோ மற்றும் ஈபிஆர்எல்எப் என்பவற்றை சேர்ந்த முன்னணி நபர்கள் இரகசியமாக கரிகாலனை சந்தித்து விடயங்களை கலந்துரையாடினார்கள். அவர்களுக்கு உறுதிமொழி வழங்கப்பட்டது. அதே போல ரி.யு.எல்.எப் பிரமுகர்களும் எல்.ரீ.ரீ.ஈ தலைவர்களைச் சந்தித்து கலந்துரையாடினார்கள்.

இந்த கலந்துரையாடல்கள் தொடர்ந்த போது சமாந்தரமான திடீர் நிகழ்வாக துண்டுப் பிரசுரங்கள் விநியோகிப்பது மற்றும் ஊடகங்களுக்கு அறிக்கை விடுவது போன்ற செயல்கள் இதுவரை கேட்டிராத அமைப்புகளான சங்கிலியன் படை, குளக்கோட்டான் படை, மற்றும் பண்டாரவன்னியன் படை போன்றவற்றால் நடத்தப்பட்டு வந்தன.

இந்த துண்டுப்பிரசுரங்கள் மற்றும் அறிக்கைகள் யாவும் தமிழர்களின் ஒற்றுமையை வலியுறுத்தியதுடன் இதற்கு ஒத்துழைக்காதவர்கள்மீது தண்டனை செயற்படுத்தப்படும் என்றும் அச்சுறுத்தின.

கடைசிக்கு முந்திய கட்டங்களில் எல்.ரீ.ரீ.ஈ மறைமுகமாக இதில் தலையீடு செய்தது. ரி.யு.எல்.எப், தமிழ் காங்கிரஸ், ரெலோ மற்றும் ஈபிஆர்எல்எப் என்பனவற்றின் சில தலைவர்கள் தொலைபேசி மூலமாக தொடர்பு கொள்ளப்பட்டு இணையும்படி வலியுறுத்தப்பட்டார்கள். பேச்சு வார்த்தையில் ஈடுபட்ட கட்சிகளை எல்.ரீ.ரீ.ஈ ஒருமுகப்படுத்தி பேச்சுக்களை வெற்றிகரமாக முடித்து வைத்தது.

ரி.யு.எல்.எப், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ஈபிஆர்எல்எப், மற்றும் ரெலோ என்பனவற்றுக்கு இடையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு (ரி.என்.ஏ) என்கிற ஒரு கூட்டணியை உருவாக்கும் வேலை ஒப்பந்தம் ஒன்று இறுதி செய்யப்பட்டது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கம் பற்றி ஒக்ரோபர் 22, 2001இல் ஒரு செய்தி அறிக்கை மூலம் அறிவிக்கப்பட்டது. ரி.என்.ஏயும் பிறந்தது.

(மிகுதி நாளைய தினமுரசில்)

# சட்டத்திற்கு மதிப்பளித்து கட்சிகள் செயற்பட வேண்டும்

## தேர்தல்கள் ஆணையாளர் அறிவுறுத்து

(கொழும்பு)

ஊவா மாகாண சபை தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கலின் போது சட்டத்திற்கு மதிப்பளித்து செயற்படும்படி வேட்பாளர்களை அறிவுறுத்துமாறு தேர்தல்கள் ஆணையாளர்கள் கட்சி செயலாளர்களுக்கு அறிவித்துள்ளார்.

குறிப்பாக எதிர்வரும் 5 ஆம் திகதி உயர்தரப்பரீட்சைகள் ஆரம்பமாகவுள்ள நிலையில் அதற்கு இடையூறு ஏற்படாத வண்ணம் வேட்பு மனுத் தாக்கல்கள் இடம்பெற வேண்டும் என ஆணையாளர் பணித்துள்ளார்.

பிரதான அரசியல் கட்சிகள் தமது வேட்பு மனுக்களை எதிர்வரும் 5 ஆம் 6 ஆம் திகதிகளில் தாக்கல் செய்யவுள்ளன.

கடந்த மாகாண சபைத் தேர்தல்களின் போது வேட்பு மனுத் தாக்கல்களின் பின்னர் பொது மக்களுக்கு இடையூறு ஏற்படும் வகையில் ஊர்வலங்கள் நடாத்தப்பட்டமை தொடர்பில் தேர்தல் கள் ஆணையாளருக்கு முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது

இவ்வாறான முறைப்பாடுகளைக் கருத்திற்கொண்டே தேர்தல்கள் ஆணையாளர் இந்த அறிவுறுத்தல்களை விடுத்துள்ளார்.

அரசியல் கட்சிகளின் செயலாளர்களுடன் ராஜகிரிய தேர்தல்கள் செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே தேர்தல்கள் ஆணையாளர் இந்த விடயங்களை தெரிவித்துள்ளார்.

இவைதவிர, குறைபாடுகள் இன்றி வேட்பு மனுக்களுக்கான ஆவணங்களை சமர்ப்பிக்குமாறும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய அடையாள அட்டை அல்லது அடையாள அற்ற தரப்பினருக்கு தேர்தலின் போது அனுமதிக்கப்படும் விசேட அடையாள அட்டையொன்றை பெற்றுக் கொள்வதற்காக எதிர்வரும் 6 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

# கடன் பெறுகை குறித்து எச்சரிக்கிறது ஐ.எம்.எவ்.

வெளிநாட்டு கடன் பெறுகை தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது. அரசாங்கம் மற்றும் வங்கிகள் வெளிநாட்டு கடன் பெறுகைகள் தொடர்பில் எச்சரிகையுடன் செயற்பட வேணடியது அவசியமானது எனவும் தெரிவித்துள்ளது.

கடன் பெறுகைகளின் போது பணவீக்கம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியமானது என குறிப்பிட்டுள்ளது. குறிப்பாக வர்த்தக அடிப்படையிலான கடன் பெறுகைகள் பாதகத்தன்மையினை ஏற்படுத்தும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

அரசாங்கத்தின் தற்போதைய நிதிக் கொள்கைகள் பண வீக்கத்தை வரையறுக்கும் வகையிலேயே அமைந்துள்ளன என சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது.

எனினும், பண வீக்க நிலைமைகள் குறித்து உன்னிப்பாக அவதானித்து தொடர்ந்தும் தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டுமெனத் தெரிவித்துள்ளது.

# இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் 175 ஆவது ஆண்டு விழா



(கொழும்பு)

இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் 175 ஆவது ஆண்டு நிறைவுவிழா, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இலங்கை வர்த்தக சம்மேளனத்தில் 100 வருடங்களுக்கு மேல் அங்கத்துவம் பெற்றுள்ள நிறுவனங்களுக்கு ஜனாதிபதி நினைவுச்சின்னம் வழங்கினார்.

இந்த நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க உள்ளிட்ட அரசியல்வாதிகளும் தூதுவராலயங்களின் முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டனர்.

# துப்பாக்கிச் சூட்டில் முடிந்த குடும்பத் தகராறு

(கொழும்பு)

அக்கரைப்பற்று வெள்ள பாதுகாப்பு வீதிப் பகுதியில் இடமபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இரண்டு குழுக்களுக்கிடையில் நேற்றுமுன்தினம் இரவு 9.15 அளவில் இடம்பெற்ற மோதலின் போது, இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றுள்ளது.

துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்தவர் அக்கரைப்பற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட தன் பின்னர், மேலதிக சிகிச்சைகளுக்காக அம்பாறை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுளளார்.

குடும்பத் தகராறினால் இந்த மோதல் ஏற்பட்டிருக்கலாம் என பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# சிறிய பிரச்சினைகளை பெரிதுபடுத்தும் அமெ. தூதரகத்தின் நடவடிக்கை

## கவலையடையும் பாதுகாப்பு அமைச்சு

(கொழும்பு)

குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கப்படாத நிலைமை இலங்கையில் தொடர்ந்தும் நீடித்து வருவதாக அமெரிக்கத் தூதரகம் அண்மையில் குற்றம் சுமத்தியிருந்தது. எனினும் அமெரிக்காவின் இந்தக் குற்றச்சாட்டு ஏற்புடையதல்ல என பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் ருவான் வனிகசூரிய தெரிவித்துள்ளார்.

சிறிய பிரச்சினைகளை பூதாகாரமாக்கும் முனைப்புக்களில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் ஈடுபட்டு வருகின்றமை வருத்தமளிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

2009 ஆம் ஆண்டு மே மாதம் யுத்தம் நிறைவுக்குக் கொண்டு வரப்பட்டதன் பின்னர் நாட்டில் பாரியளவில் அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த கள நிலைவரங்களைக் கருத்திற் கொள்ளாது அமெரிக்கா குற்றம் சுமத்தி வருகின்றமை இரு தரப்பு உறவுகளிலும் விரிசல் ஏற்பட வழியமைக்கும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். அரசியல் சாசனத்தின் அடிப்படையில் நாட்டின அனைத்து இன, மத, சமூகங்களும் சுதந்திரத்தை அனுபவித்து வருவதாகவும் அனைத்து தரப்பினரதும் உரிமைகளை உறுதி செய்வதில் அரசாங்கம் தொடர்ந்தும் கரிசனை கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். மேலும் புலிகளின் முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வு அளித்து சமூகத்துடன் மீள இணைக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

உள்நாட்டு பொறிமுறைமை ஒன்றின் மூலமாகவே நீடித்து நிலைக்கக் கூடிய வகையிலான சமாதானத்தை எட்ட முடியும் என்பது இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடு எனவும் ருவான் வனிகசூரிய மேலும் தெரிவித்துள்ளார்.

# ஜப்பான் வெளியுறவு அமைச்சின் பாராட்டு விருது இலங்கைக்கு

2014 ஆம் நிதியாண்டிற்கான வெளியுறவு அமைச்சர்களின் பாராட்டு பெறும் பட்டியல் கடந்த 24 ஆம் திகதி ஜப்பான் வெளியுறவு அமைச்சகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வாறு வெளியிடப்பட்ட 2014 ஆம் ஆண்டிற்கான பாராட்டு பட்டியலில் இலங்கையைச் சேர்நத ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஜப்பான் இலங்கை தொழில்நுட்ப கலாசார சங்கத்தின் (JASTECA) துணைப்பணிப்பாளர் மற்றும் இலங்கை தனியார் துறைகளின் மூத்த நிர்வாகத்துறையாளர் லால் டி அல்விஸ் பாராட்டு பெறும் பட்டியலில் கௌரவிக்கப் படவுள்ளதாக ஜப்பான் வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது. இந்த பட்டியல் ஒவ்வொரு வெளியுறவு அமைச்சர்களினதும் அடைவு மட்டம் தனிப்பட்ட ரீதியிலும் குழு ரீதியிலும் அவரவர்களால் சர்வதேச அளவில் பெற்றுக் கொண்ட சாதனைகள், அடைவு மட்டங்களை வைத்து நிர்ணயிக்கப்படும்.

ஜப்பானுக்கும் மற்றைய நாடுகளுக்குமிடையேயான நட்புறவினை பாராட்டும் பொருட்டு அவர்களின் இத்தகைய பங்களிப்பு அளப்பரியதொன்றாகும்.

இலங்கையர்களுக்கான தொழில்நுட்ப பயிற்சி வாய்ப்புககளை ஆசிய கலாசார சங்கங்களினூடாக வழங்கும் பொருட்டு 1965 இல் ஆரம்பிக்கப்பட்ட நிறுவனத்தில் அல்விஸ் முன்னோடியாக செயற்பட்டு தனது உயரிய சேவைகளை வழங்கியுள்ளார்.

அல்விஸ் தனது முன்னோடியான டயஸ் அபயசிங்கவுடன் இணைந்து நிர்மாண வேலைகளில் ஈடுபாட்டுடன் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது. இச்சேவை யின் மூலம் ஜப்பான் இலங்கை தொழில்நுட்ப கலாசார சங்க முன்னேற்றமடைந்தது என்றால் மிகையாகாது.

# கொழும்பு வைத்தியசாலையில் 2 வைத்திய குழுக்கள் மோதல்

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் இரண்டு வைத்தியக் குழுக்களுக்கிடையே நேற்றுமுன்தினம் பிற்பகல் மோதல் ஏற்பட்டுள்ளது.

வெளியிலிருந்து வருகை தந்த வைத்தியர்கள் குழுவுக்கும், வைத்தியசாலையில் கடமைபுரியும் வைத்தியர்களுக்கும் இடையே இந்த மோதல் ஏற்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலையில் பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டதை அடுத்து, இந்த மோதல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

தேசிய வைத்தியசாலை வளாகத்திற்குள் வைத்தியர்கள் சிலர் கூட்டம் ஒன்றை நடாத்தியதாக வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் அனில் ஜெயசிங்க கூறினார்.

இதன்போது, வெளியிலிருந்து வருகைதந்த வைத்தியர்கள், கூட்டத்திற்கு இடையூறு ஏற்படுத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

# இத்தாலியிலிருந்து கொண்டுவரப்பட்ட புனித பண்டத்தை திருடியவர் கைது

இத்தாலியில் இருந்து கொண்டு வரப்பட்டு, கந்தானை சென். செபஸ்தியார் தேவாலயத்தில் வைக்கப்பட்டிருந்த புனித செபஸ்தியாரின் புனித பண்டத்தை திருடியவரை கைது செய்துள்ளதாகவும் அவரிடமிருந்து அந்தப் புனித பண்டத்தை மீட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் மோப்பநாயின் உதவியுடன் நேற்று அதிகாலை 4 மணியளவிலேயே சந்தேகநபரை கைதுசெய்து அவரிடமிருந்து புனித பண்டத்தை மீட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் புனித பண்டம் இத்தாலி, பாதுவா நகரிலிருந்து கடந்த ஜனவரி மாதம், கந்தாணை சென் செபஸ்தியார் தேவாலயத்திற்கு கொண்டுவரப்பட்டதென ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

# பரீட்சையின் உயர்பெறுபேற்றுக்கு

# சுயகற்றலே மிக அவசியமானது

## வடமராட்சி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் தெரிவிப்பு

(வடமராட்சி)

மாணவர்களின் கல்வியில் கட்டாயத்திணிப்பிற்கு இடமளிக்கப்படக் கூடாது. அவர்களுக்கு சுயசிந்தனைக்கும் களமமைக்கப்படவேண்டும். முன்பள்ளிக் கல்வியிலேயே இது கண்காணிககப்பட வேண்டும். அப்போது தான் அவர்கள் நாட்டிற்கு உகந்த சிறந்த பிரஜைகளாக உருவாகி நாட்டை வழி நாடாத்திச் செல்ல முடியும் என வடமராட்சி வலய நிர்வாகப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.ஏ.ஸ்ரீதரன் தெரிவித்தார்.

வடமராட்சி நெல்லியடி வர்த்தகவங்கிகளின் அருணுலு சிறுவர் சேமிப்புக்களுக்கணக்குகளைப் பேணிவரும் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவித்து பரிசில் வழங்கிய விழாவிலே பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

வடமராட்சிப் பிரதேசம் கல்வியில் முன்னணியில் திகழ்ந்த பிரதேசம். யுத்த அனர்த்தங்களினால் இப்பிரதேசத்தின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன. தற்போது இக்கல்வி நடவடிக்கைகள் படிப்படியாக உயர்வடைந்துவருகின்றன. கடந்த வருடம் 5 ஆம் ஆண்டு புலமைபபரிசில் பரீட்சையில் 172 மாணவர்கள் சித்திபெற்றனர். இவ்வாண்டு 245 மாணவர்கள் சித்திபெற்றுள்ளனர்.

இவ்வாறே ஒவ்வொரு செயற்பாடுகளிலும் உயர்ச்சி பெற்று வருகின்றனர்.

மாணவர்கள் 5 ஆம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து விட்டால் மட்டும் போது மெனக்கருதக் கூடாது. க.பொ.த. சாதாரணத்தரப பரீட்சை, க.பொ. உயர்தரப்பரீட்சைகளிலும் அவர்கள் முன்னிலையில் திகழவேண்டும். நல்ல மாணவர்களால் தான் நன்றாக கற்க முடியும். மாணவர்களின் சிந்தனைகள், பழக்க வழக்கங்கள், உயர் வானவையாக இருக்க வேண்டும் என்றார். (01)

## வீதி புனரமைப்பு

(மானிப்பாய்)

உடுவில் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட உடுவில் டச்சு வீதி, சண்டிலிப்பாய் வீதி என்பன புனரமைக்கப்பட்டு வருகின்றன.

எனினும் இந்த வீதிகளின் இருமருங்கிலும் உள்ள வெள்ள வாயக்கால்களை மூடி வீதி அமைக்கப்படுவதால் மழைகாலங்களில் நெருக்கடி நிலை ஏற்படும் என்று அப்பகுதிமக்கள் தெரிவிக்கின்றனர்.

வீதிகளைப் புனரமைக்கும் பணி ஆரம்பிக்கும் போது வீதியின் இருமருங்கிலுமுள்ள வெள்ள வாய்க்கால்கள் புனரமைப்பு செய்யப்பட்டு சிமெந்தினால் வடிகால்கள் அமைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதன்படி உடுவில் மகளிர் கல்லூரிக்கு அருகிலிருந்த வெள்ள வாய்க்காலை சிமெந்தினால் கட்டும் பணி ஆரம்பிக்கப்பட்டு இடையில் கைவிடப்பட்டுள்ளது. தற்போது வாய்க்காலை மூடி வீதி அமைக்கும் பணியை ஒப்பந்தகாரர்கள் மேற்கொண்டுவருகின்றனர்.

இந்த அபிவிருத்திக் குறைபாடுகள் குறித்து நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கையொப்பம் இட்டு வீதி அபிவிருத்தி அதிகார சபை உள்ளிட்ட திணைக்களங்களுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர். (48)


## முத்துமாரி அம்மனுக்கு வருடாந்த மஹோற்சவம்

இன்று மண்டைதீவு வேப்பந்திடல் ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலயப்பெருந்திருவிழா கொடியேற்றத்தோடு ஆரம்பித்து தொடர்ந்து பத்துத் தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

கடந்த 2012 ஆம் ஆண்டு இந்த ஆலயத்தில் புனருத்தாரணமும், மகாகும்பாபிஷேகமும் பொது மக்களால் சிறப்பாக நடாத்திமுடிக்கப்பட்டது. கடந்த வருடம் அலங்கார திருவிழா நடைபெற்ற பொழுதும இந்த வருடம் துவஸ்கம்பதாரணத் தோடு கொடியேற்றம் நடைபெற்று திருவிழா நடைபெறுவது சிறப்பானதென பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். (23)

## கொடியேற்றம்

பருத்தித்துறை மருதடி குருமணல் அருள்மிகு கந்தசுவாமி ஆலயவருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. இதில் 07 ஆம் திகதி வியாழக்கிழமை வேட்டைத்திருவிழாவும், 08 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சப்பறத்திருவிழாவும், 09 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும், 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்த்திருவிழாவும், 11 ஆம் திகதி திங்கட்கிழமை திருக்கல்யாணமும், பூங்காவனமும் இடம்பெறவுள்ளன. (01)



## நல்லையம்பதியிலே விழாக்கோலம் ஆரம்பம்

வரலாற்றுப் பிரசித்திபெற்ற நல்லூர் கந்தசுவாமி கோயிலில் இன்று கொடியேற்றம். எம்பெருமான் முருகனுக்கு நடைபெறுகின்ற ஜய வருடமஹோற்சவம் இன்று மு.ப. 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

கலியுக வரதனாம் கந்தனுக்கு இன்று தொடங்கி தொடர்ந்து 25 நாட்களுக்குத் திருவிழா நடைபெறும். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதவிதமான அலங்காரங்களுடன் அழகே உருவெடுத்தாற்போன்று கருணை மிகு கந்தன் வேற்பெருமானாக வீதிவலம் வருகின்ற அற்புதக்காட்சி வர்ணணைக்குள் அடங்காது.

ஸ்ரீ சங்கபோதி புவனேகபாகுவால் கட்டப்பெற்ற இந்த ஆலயத்தில் முருகன் வீதியுலா புறப்படும் போது கூறப்படும் கட்டியத்தில் அவனுடைய பெயரும் சொல்லப்படுகின்றது. இந்த நல்லூர் கந்தசுவாமி கோயிலில் மூலஸ்தானத்தில் இருக்கின்ற வேல் உரு தனித்துவமான சக்திவாய்ந்த வேலாகும் அதிசயமான அற்புதங்கள் செய்யும் அருட்சக்தி வேல் அடியார் பெருமக்களை ஈர்த்திழுக்கின்ற தனியான பெருமையையுடையது.

ஒரு நல்ல காரியத்தை எண்ணி அது நிறைவேறவேண்டும் என்று கந்தனை மனதில் நினைத்து வேண்டிக்கொண்டால் அக்காரியம எந்தவிதமான தடங்கலுமின்றி சுலபமாக நிறைவேறிவிடும். அது எம்பெருமான் முருகனுடைய அருள்மயமான ஆதிசக்திவேல் அதனுடைய தனித்துவமான கருணைத்திறம் எல்லையில்லாத அற்புத சக்திமிக்க அருள்வேல். இந்த நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோறசவ காலத்தில் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் ஈழ மணித்திருநாட்டின் நாலா பக்கங்களிலுமிருந்து இங்கு வந்து கூடுவர். மேலும் பத்தாம் திருவிழா மஞ்சம் மற்றும் பூச்சப்பறம், கைலாச வாகனம், தங்கரதம், பெரியசப்பறம், மாம்பழத் திருவிழா, தேர், தீர்த்தம், பூங்காவனம என்று இன்னோரன்ன பல விழாக்களையும் காண்பதற்காக அடியார் பெருமக்கள் வந்து குவிவார்கள்.


வீதியெங்கும் அலங்கரிக்கப்பட்டுப் புனித நகராகக் காணப்படும் நல்லூர் விழாக்கோலம் பூண்டு அழகாகவே காணப்படும். நல்லூர் முருகனின் பேரழகு பார்ப்பதற்குப் பூர்வஜென்ம புண்ணியஞ் செய்திருக்க வேண்டும். "சேலார் வயற்பொழில் செங்கோடனைச் சென்று கண்டு தொழ நாலாயிரம் கண் படைத்திலனே அந்த நான்முகனே" என்று அருணகிரிநாதர் பாடியிருப்பது முற்றிலும் உண்மையே!

முருகன அழகு காண இருகண்கள் போதாது. அப்பேர்ப்பட்ட அழகன் முருகனுக்கு நிகழும் உற்சவங்களைத் தினமும் சென்று கண்டு தொழுது நல்வாழ்வில் நற்கதியடைந்து உய்தி பெற்றுய்வோமாக.

"நல்லூர் கந்தனுக்கு அரோஹரா"

"தெய்வத்தமிழ்ச் சுடர்"
இராசையா ஸ்ரீதரன்.

## நல்லைக் கந்தனுக்கு இன்று கொடியேற்றம்



### அகிலமெல்லாம் அருள் பரவட்டும்

நல்லூரான் கொடியேற்றம் நல்லபடி ஏறட்டும்
அல்லலறுத் தானந்தம் அகிலமெலாம் பரவட்டும்
தொல்லை வினையகன்று தூயஒளி பரவட்டும்
வல்வினை அகன்றிடவே வடிவேலும் தோன்றட்டும்
அல்லும் பகலுமவன் அருளிங்கே நிலைக்கட்டும்
கல்லும் கனிந்திடவே கருணைமழை பொழியட்டும்
தில்லைக் கூத்தன்மகன் திருநாமம் ஒலிக்கட்டும்
பொல்லாப்பு இல்லாத புதுஉலகம் தோன்றட்டும்
செல்லக் குமரனின் சிறப்பை உலகறியட்டும்
சொல்லுக்குச் சொல்லவன் சுவைநாவில் ஊறட்டும்
முல்லையும் மல்லிகையும் அவனுடல்மேல் சொரியட்டும்
பல்வளமும் பாரிலவன் பரிவாலே சிறக்கட்டும்
மெல்லெனவே அவனாறு முகங்களும் தெரியட்டும்
துல்லியமாய் பன்னிரு கரங்களுமே துலங்கட்டும்
இல்மெலாம் அவனாட்சி இணையின்றி நடக்கட்டும்
எல்லையிலா அவனெளிலை எல்லோரும் காணட்டும்.

-ஆசுகவி
செ.சிவசுப்பிரமணியம்; மூளாய்-

### நல்லூரானை தொழு!

நல்லைநகர் கந்தனுக்கு நாட்டுங்கொடி இன்றேற்றம்
இல்லையெவ் இடர்பாடும் என்றாரும் - சொல்வாரோ
வருடாந்தம் கொடியேற்றி வருந்தோஷம் என்பதனால்
இருப்பைச் சொல் இந்தக்கொடி ஏறும்!

ஈழத்தமிழ் மன்னர்களில் இறுதிமன்னன் சங்கிலியன்
ஆழவழி வகுத்தவிடம் அழகார்ந்த - ஈழநல்லூர்
என்பதனால் அவன்புகழ் என்றைக்கும் நிலைத்திருக்க
தொன்மையுறு நல்லூரான் தொழு!

-நவாலியூர்க்கவிராயர்-

### முருகனிடம் யாவும் பெறலாம்!

நல்லூரில் கொடியேறினரில்
நாடு நலம் பெறுமென்று
நம்முன்னோர் சொன்ன வாக்கு
நாளும் பலிக்கட்டும்,

நல்லூரில் கொடியேறினால்,
நமக்கு எதுவேண்டுமோ அதை
நேர்த்தியாகப் பெறலாம்
நம்பிக்கையோடு வழிபடுங்கள்.

-கே.எஸ்.சிவஞானராஜா கொக்குவில்-

### கொடிகொண்டு நீ மயில் ஏறிவாமுருகா!

அடல் ஏறு என வந்த சூரர் அடங்க
அடைக்கலம் தந்த நல்லைநகர் காவலனே
நல்லதோர் வாழ்வு தர கொடியேறிவா!
எல்லைகள் கடந்தோர் துயர் அறஏறுகொடி
ஐயனே கைவேல் எங்கே கன்த்த குழை எங்கே
மையல் மனம் திருந்த மயில் ஏறிவா!
செவ்வேள் ஆனவனே எந்தன் செருக்கடங்க
திருகையில் வேல் ஏந்தி அருள்தர் வாமுருகா!


-மண்டைதீவு மகிழ்நன்-

### குறை தீர்க்க வாருமையா!

கொடியேறி நல்லூரில் கொற்றவை மைந்தனே! வாருமையா!
கொடியசூரன் பகைவென்ற குலவரசே கொடியேறி வாருமையா!
அடியார்கள் புடைசூழ அனுதினமும் வீதியுலா வாருமையா!
படியேறி வருகின்ற பக்தர்குறை நாளுமே! தீருமையா!

-கவிஞர் சரசாலையூரான்-

# கொமன்வெல்த் விளையாட்டு விழா



## பளுதூக்கலில் தங்கம் வென்ற மங்கை சிக்கினார் ஊக்க மருந்து சோதனையில்

பளுதூக்குதலில் தங்கம் வென்று புதிய சாதனை படைத்த நைஜீரிய வீராங்கனை சிகா அமலகா, ஊக்க மருந்து சோதனையில் சிக்கியுள்ளார்.

ஸ்கொட்லாந்தில் நடைபெற்று வரும் பொதுநல வாயப் போட்டியில் 53 கிலோ கிராம், எடைப்பிரிவில் பங்கேற்ற நைஜீரியாவின் 16 வயது வீராங்கனை சிமா அமலகாவே ஊக்கமருந்து சர்ச்சையில் சிக்கியுள்ளார்.

ஸ்னாட்ச் பிரிவில் 85 கிலோகிராமை தூக்கிய அமலகா கிளீன் அண்ட் ஜெர்க் பிரிவில் 111 கிலோ கிராம் என,மொத்தம் 196 கிலோ கிராம் எடையைத் தூக்கி வெற்றி பெற்றார். இதையடுத்து, பொதுநலவாய பளுதூக்குதல் வரலாற்றில், குறைந்த வயதில் தங்கம் வென்ற வீராங்கனை என்ற சாதனையைப் படைத்தார்.


பப்புவா நியூ கினியாவின் டிக்கா (193 கி.கி.) வெள்ளி, இந்தியாவின் சந்தோஷி (188 கி.கி.) வெண் கலத்தைக் கைப்பற்றி இருந்தனர். இதனிடையே, தங்கம் வென்ற அமலகா அதிக முறை சிறுநீர் கழித்ததாக தெரிகிறது. இதையடுத்து இவரிடம் நடாத்தப்பட்ட "ஏ" மாதிரி சோதனையில், தடை செய்யப்பட்ட ஊக்க மருந்து பயன்படுத்தியது உறுதியானது.

அமலகாவிடம் "பி" மாதிரி சோதனை நடாத்தப்பட்டது. இதுகுறித்து பொதுநலவாய கூட்டமைப்பு தலைமை அதிகாரி மைக் கூப்பர் கூறுகையில், ஊக்கமருந்து சோதனையில் சிக்கிய அமலகா, பொதுநலவாய போட்டியில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார். இது குறித்து அவருக்கு முறைப்படி கடிதம் அனுப்பியுள்ளோம் என்றார்.

அமலகா சிக்கியதை அடுத்து, இவர் வென்ற தங்கம், டிக்காவுக்கு தரப்படும். வெண்கலம் வென்ற இந்திய வீராங்கனை சந்தோஷிக்கு, வெள்ளி கிடைக்கும்.

இந்தப் போட்டியில் 4ஆவது இடத்தைப் பெற்ற மற்றொரு இந்திய வீராங்கனை சுவாதி சிங் (183 கி.கி.) வெண் கலப்பதக்கம் பெறுவார்.

## நீண்ட தூர ஓட்டத்தில் கலக்கும் கென்னா மங்கைகள்




(கிளாஸ்கோ)

கொமன்வெல்த் விளையாட்டில் நேற்று முன்தினம் நள்ளிரவு நடைபெற்ற பெண்களுக்கான 10 ஆயிரம் மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் கெய்னா மங்கை ஜாய்சி சேப்கிரு தங்கம் வென்று அசத்தியுள்ளார்.

நீண்ட தூரம் ஓடுவதில் கில்லாடிகளான கென்ய மங்கைகள் எதிர்பார்த்தது போலவே ஆதிக்கம் செலுத்தினர். மூன்று பதக்கங்களும் கென்யாவுக்கே கிட்டியது. முதலிடத்தை ஜாய்சி சேப்கிருவும் (32 நிமிடம் 09.35 வினாடி), 2ஆவது இடத்தை புளோரென்ஸ் கிப்லாகட்டும் (32 நிமிடம் 09.48 வினாடி), 3ஆவது இடத்தை எமிலி சேபெட்டும் (32 நிமிடம் 10.82 வினாடி) பிடித்தனர். பெண்களுக்கான 400 மீற்றர் ஓட்டத்தில் மூன்று பதக்கங்களும் ஜமேக்கா நாட்டினருக்கு சொந்தமாகியது. 50.67 வினாடிகளில் இலக்கை கடந்த ஜமேக்காவின் ஸ்டெபானி மெக்பியர்சன் தங்கப்பதக்கத்தை வசப்படுத்தினார்.

ஆண்களுக்கான 110 மீற்றர் தடை ஓட்டத்தில் ஜமேக்கா வீரர் ஆந்த்ரே ரைலி (13.32 வினாடி) தங்கப்பதக்கத்தை கைப்பற்றினார்.

### மகிழ்ச்சியின் நெகிழ்ச்சி...







## குத்துச் சண்டை போட்டியில் இறுதி வாய்ப்பை இழந்த இலங்கை

பொதுநலவாய விளையாட்டு போட்டிகளில் மகளிருக்கான குத்துச் சண்டை போட்டியின் 69 கிலோ கிராம் நிறைப் பிரிவில் இறுதிச் சுற்றுக்கு தகுதி பெறும் வாய்ப்பினை இலங்கையின் ஷிரோமாலி வீரரத்ன இழந்துள்ளார். இறுதிச் சுற்றுக்கு தகுதி பெறுவதற்கான போட்டியில் நைஜீரிய வீராங்கனை எடித் ஒஹோகியிடம் அவர் தோல்வி அடைந்தார்.

ஆடவருக்கான 97 கிலோகிராம் ப்ரீஸ்டைல் மல்யுத்தப் போட்டியில் கனடா தங்கப் பதக்கத்தை வெற்றிகொண்டுள்ளது. கனடாவின் அர்ஜுன் கில் முதலிடத்தைக் கைப்பற்றினார். இந்திய வீரர் சட்ஜாவாத் காடையன் வெள்ளிப் பதக்கத்தையும் வெற்றிகொண்டார். போட்டியில் காடையன் முன்னிலை பெற்றிருந்த போதிலும் இறுதி சில நிமிடங்களில் சிறந்த திறமையை வெளிப்படுத்திய கில் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

இதேவேளை பொதுநலவாய விளையாட்டு விழாவில் பதக்கப் பட்டியலில் இங்கிலாந்து அணி மீண்டும் முதலிடத்திற்கு முன்னேறியுள்ளது.

38 தங்கம், 35 வெள்ளி, 32 வெண்கலப் பதக்கங்கள் அடங்கலாக 105 மொத்தப் பதக்கங்களைப் பெற்றுள்ள இங்கிலாந்து முதலிடத்தைப் பெற்றுள்ளது.

35 தங்கம், 32 வெள்ளி, 39 வெண்கலப் பதக்கங்களைப் பெற்றுள்ள அவுஸ்ரேலியா இரண்டாவது இடத்தையும், 22 தங்கப் பதக்கங்களுடன் கனடா மூன்றாவது இடத்தையும் பிடித்துள்ளது.

ஸ்கொட்லாந்து, நியூசிலாந்து, இந்தியா, தென்னாபிரிக்கா, நைஜீரியா, கென்யா, ஜமேக்கா, வேல்ஸ், சிங்கப்பூர், மலேஷியா ஆகிய நாடுகள் பதக்கப் பட்டியலில் அடுத்தடுத்த இடங்களைப் பெற்றுள்ளன.

## பந்துவீச்சாளர்களுக்கு துடுப்பாட்ட பயிற்சி சாதிக்க வழிவகுக்கும்



(கொழும்பு)

இங்கிலாந்து, தென்னாபிரிக்க அணிகளின் பந்து வீச்சாளர்கள் அண்மைய காலங்களில் நடைபெற்ற டெஸ்ட் போட்டிகளில் துடுப்பாட்டத்தில் பிரகாசித்து வருகின்றனர். அதேபோன்றதொரு நிலைமையை எமது அணிக்குள்ளும் ஏற்படுத்த வேண்டும். எமது பந்து வீச்சாளர்களுக்கும் துடுப்பாட்ட பயிற்சிகள் வழங்கப்பட்டு அவர்களின் பங்களிப்பும் கிடைக்கும் பட்சத்தில் எம்மால் பெரியளவில் சாதிக்க முடியும் என இலங்கை அணிக் கப்டன் அஞ்சலோ மத்தியூஸ் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்க அணிக்கெதிரான இரண்டு போட்டிகள் கொண்ட தொடரை இலங்கை அணி 1-0 என இழந்தது. இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில்,

எமது சொந்த மண் என்ற விடயங்களை ஒதுக்கி வைத்து விட்டு நாம் போட்டிகளில் வெற்றி பெறவேண்டும் என்ற அடிப்படையில் தான் பங்கேற்றிருந்தோம். குறிப்பாக காலி மைதானத்தில் இடம்பெற்ற முதலாவது போட்டியில் நாம் தோல்வியடைந்திருந்தோம். அதற்கு முக்கிய காரணம் முதலாவது இனிங்ஸில் குறைவான ஓட்டங்களைப்பெற்றமையே ஆகும்.

தென்னாபிரிக்க, இங்கிலாந்து அணிகள் உலகின் சகல பாகங்களிலும் காணப்படும் கள சூழ்நிலைகளுக்கு அமைவாக விளையாடும் திறைமையை அண்மைக்காலமாக வெளிப்படுத்தி வருகின்றனர். அந்தவகையில் தான் தென்னாபிரிக்க அணி வீரர்களும் போராடியிருந்தார்கள். குறிப்பாக ஸ்ரெய்ன், இம்ரான் தாஹீர் ஆகியோர் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக துடுப்பெடுத்தாடியிருந்தனர்.

இரண்டாவது போட்டியில் ரங்கன ஹேரத், டில்ருவான் பெரேரா, அறிமுக வீரர் டிக்வெல்ல ஆகியோர் தமது முழுத்திறைமையையும் அர்ப்பணிப்புடன் வெளிப்படுத்தியிருந்தனர். அவர்களின் போராட்டம் பாராட்டுக்குரியது. அதேபோன்று சிரேஷ்ட வீரர்களான சங்கக்கார, மஹேல ஆகியோரும் துடுப்பாட்டத்தில் பிரகாசித்திருந்தனர்.

நாம் காலியில் நடைபெற்ற போட்டியில் விட்ட சில தவறுகளை நன்கு உணர்ந்து கொழும்பில் நடைபெற்ற போட்டியில் முன்னேற்றங்களைக் கண்டிருந்தோம். அதேபோன்று எதிர்காலத்திலும் சிறந்த திட்டமிடல்களுடன் சிறப்பான திறமைகளை வெளிப்படுத்துவோம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இலங்கை மண்ணில் சாதிப்போம்

### மிஸ்பா நம்பிக்கை

இலங்கை அணிக்கெதிரான டெஸ்ட் தொடர் சவால் நிறைந்ததொரு தொடராக இருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனாலும் நாங்கள் தொடரை வெல்ல முயற்சிப்போம். அதற்குரிய தகுதி எங்களிடம் உள்ளது என பாகிஸ்தான் அணிக் கப்டன் மிஸ்பா உல் ஹக் தெரிவித்துள்ளார். இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் எதிர்வரும் 6ஆம் திகதி காலியில் ஆரம்பமாகவுள்ளது. இது குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே மிஸ்பா மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், இங்கிலாந்து, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடரில் இலங்கை அணி சிறப்பாகச் செயற்பட்டது. சொந்த மண்ணில் இலங்கை அணி பலமாக விளங்குகின்றது. ஆனாலும் எங்கள் அணி சமபலம் கொண்டது. பந்து வீச்சு, துடுப்பாட்டம், களத்தடுப்பு என அனைத்து வகையிலும் வீரர்கள் சிறப்பான முறையில் செயற்பட்டு வருகின்றனர். இதன் மூலம் இலங்கை மண்ணில் சாதிக்க முடியும் என்று நம்புகின்றோம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## விளையாட்டுத் துளிகள்...

உலகின் அதிவேக ஓட்டப்பந்தய வீரரான ஜமேக்காவின் உசேன் போல்ட், கொமன்வெல்த் பேர்ட்டிகள் அசிங்கமாக நடப்பதாக கூறியதாக் முன்னணி நாளிதழில் செய்தி வெளியானது. இதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளார் போல்ட். 2012 லண்டன் ஒலிம்பிக் போட்டியை போல கொமன்வெல்த் சிறப்பாக நடாத்தப்படவில்லை என்று தான்கூறியதாகவும், ப்ரபரப்பை ஏற் படுத்த வேண்டுமென்பதற்காக தவறான தகவல்களை செய்தித்தாள்கள் பிரசுரிக்கக்கூடாது எனவும் அவர் கடுமையாக விமர்சித்துள்ளார்.

ஆர்ஜன்ரீனாவின் நட்சத்திர கால்பந்து வீரர் கார்லோஸ் டவேஸின் தந்தை சிகுண்டோ டவேசை மர்ம கும்பல் ஒன்று பியூனாஸ் ஏர்சில் கடத்திச் சென்று பணம் கேட்டு மிரட்டியுள்ளது. 8 மணி நேரத்துக்கு பின்னர் விடுவிக்கப்பட்ட அவர் நலமாக இருக்கிறார். 3 இலட்சம் கொடுத்து தந்தையை கார்லோஸ் மீட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சம்பியன்ஸ் லீக் ருவென்ரி-20 தொடரில் உள்ளூர் அணிக்காக விளையாடாமல் மும்பை இந்தியன்ஸ் அணிக்காக விளையாட மலிங்காவுக்கு இலங்கை கிரிக்கெட் சபை சம்மதித்துள்ளது. ஆனால் கடந்த முறை, தன்னுடைய விடயத்தில் கிரிக்கெட் சபையின் அதிகாரி ஒருவர் தனிப்பட்ட முன்விரோதம் மற்றும் பழிவாங்கல் காரணமாக தனக்கு மட்டும் அணி மாறி விளையாட அனுமதிக்கவில்லை என ஆதங்கப்பட்டுள்ளார் இலங்கையின் சங்கக்கரா.

### கொன்சலஸ் அடிகளார் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ண கால்பந்து

# பள்ளிமுனை சென். லூசியஸ் சம்பியன்





(வலைப்பாடு)

வலைப்பாடு புனித அன்னாள் ஆலயு பெருவிழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட மாபெரும் கால்பந்தாட்டத் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை மன்னார் பள்ளிமுனை சென். லூசியஸ் அணி கைப்பற்றிக் கொண்டது.

வலைப்பாடு புனித அன்னாள் ஆலய பெரு விழாவை முன்னிட்டு ஆலய நிர்வாகத்தினரும் பூநகரி கால்பந்தாட்ட உப லீக்கும் இணைந்து ஏற்பாடு செய்த மறைந்த அருட்தந்தை கொன்சலஸ் அடிகளார் ஞாபகார்த்தத வெற்றிக் கிண்ண கால்பந்துத் தொடர் வலைப்பாட்டில் நேற்று முன் தினம் நடைபெற்றது. இதில் கிளிநொச்சி, மன்னார் மாவட்டங் களைச் சேர்ந்த அழைக்கப்பட்ட 20 அணிகள் பங்கு கொண்டன.

இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் மன்னார் பள்ளிமுனை சென் லூசியஸ் அணியும் மன்னார் சாவட்கட்டு கில்லறி அணியும் மோதின. இரு அணிகளுமே ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் மோதிக் கொண்டன. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் பள்ளிமுனை சென். லூசியஸ் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இப்போட்டி நிகழ்வின் முதன்மை விருந்தினராக ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார், அருட்தந்தை அருட்திரு சில்வஸ்ரர்தாஸ் மற்றும் ஈ.பி.டி.பி வடக்குமாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன், கிளிநொச்சி மாவட்ட கால்பந்தாட்ட லீக்கின் உபதலைவர் அன்ரன் அன்பழகன், கிளிநொச்சி மாவட்ட கால்பந்தாட்ட லீக்கின் செயலாளர் நிமலதாசன் மற்றும் பூநகரி கால்பந்தாட்ட லீக்கின் உப தலைவர் ராஜ்குமார், வலைப்பாடு இரணைதீவு பிரதேசங்களைச் சேர்ந்த கால்பந்தாட்ட இரசிகர்கள், ஆர்வலர்கள் என பெரும் திரளானவர்கள் போட்டியைக் கண்டுகளித்தனர். (29)

## இன்றைய ஆட்டங்கள்

(கைதடி)

இலங்கை வங்கி, வர்த்தக வங்கி, மக்கள் வங்கி ஆகியவற்றின் ஆதரவுடன் யாழ். மாவட்ட தாச்சிச் சங்கம் 18ஆவது மாபெரும் தாச்சிச் சுற்றுப் போட்டிகளை நடாத்தி வருகின்றன.

மின்னொளியில் நடைபெற்று வரும் இப்போட்டித் தொடர் கைதடி விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் நடைபெற்று வருகின்றன. அந்த வகையில் இன்றைய தினம் நடைபெறவுள்ள போட்டிகளில்

தாவடி காளியம்பாள் எதிர் மயிலிட்டி கண்ணகி, கோண்டாவில் மறுமலர்ச்சி எதிர் மயிலிட்டி வள்ளுவர் ஆகிய அணிகள் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (48)

(ஆவரங்கால்)

ஆவரங்கால் மத்தி விளையாட்டுக்கழகம் நடாத்தும் மாவட்ட அணிகளுக்கிடையிலான மாபெரும் கரப்பந்தாட்டத் தொடரின் இன்று முதல் ஆவரங்கால் மத்தி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் அனுசரணையுடன் நடாத்தப்படவுள்ள இப்போட்டித் தொடர் ஏ, பி என இரு பிரிவுகளாக நடைபெறவுள்ளது. இன்றைய தினம் ஆறு போட்டிகள் நடைபெறவுள்ளன.

இதன் படி மாலை 4.00 அணிக்கு நடைபெறும் போட்டியில் நீர்வேலி ஐக்கிய எதிர் தோப்பு வாலிபர், மாலை 5.00 மணிக்கு நடைபெறும் போட்டியில் தொண்டமானாறு எதிர் ஆவரங்கால் இந்து இளைஞர், இரவு 6.00 மணிக்கு நடைபெறும் போட்டியில் தொண்டமானாறு அண்ணா எதிர் புத்தூர் சோமஸ்கந்தன், இரவு 7.00 மணிக்கு நடைபெறும் போட்டியில் புத்தூர் வளர்மதி எதிர் உடுப்பிட்டி சிவகுமரன், இரவு 8.00 மணிக்கு நடைபெறும் போட்டியில் மட்டுவில் ஐங்கரன் எதிர் மீசாலை சீமா, இரவு 9.00 மணிக்கு நடைபெறும் போட்டியில் அச்சுவேலி ஸ்டார் எதிர் தோப்பு கலைமகள் அணிகள் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டித் தொடரில் வெற்றியீட்டும் அணிகளுக்குப் பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும் எனப் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (93, 48)

# புதிய பாரதி தேசிய மட்ட போட்டிக்கு தகுதி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட ஜனாதிபதி தங்கக் கிண்ணக் கரப்பந்தாட்டத் தொடரின் சம்பியன் பட்டத்தை புதிய பாரதி அணி கைப்பற்றிக் கொண்டது.

ஜனாதிபதி தங்கக் கிண்ண கரப்பந்தாட்டத் தொடர் தற்போது மாவட்ட அணிகளுக்கிடையில் நடை பெற்று வருகின்றது. இதில் கிளிநொச்சி மாவட்ட அணிகளுக்கிடையிலான போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் கடந்த வாரம் கிளிநொச்சி புதிய பாரதி விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் புதிய பாரதி அணியும், கிளி. ஆதவன் அணியும் மோதின.

இரு அணிகளுமே ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் முட்டி மோதிக் கொண்டன. இதன் விளைவாக இரு அணிகளும் மாறி மாறி புள்ளிகளைப் பெற்றதுடன் ஆட்டமும் பெரும் விறுவிறுப்பாக நடைபெற்றது. இறுதியில் புதிய பாரதி அணி 3-2 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இதன் மூலம் புதிய பாரதி அணி தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (93)

விளையாட்டு செய்திகள்

# வவுனியா மாவட்ட விளையாட்டு விழா

(வவுனியா)

வவுனியா மாவட்ட விளையாட்டு விழா எதிர்வரும் 3ஆம் திகதி முதல் 5ஆம் திகதி வரை வவுனியா நகர சபை மைதானத்தில் நடைபெறவுள்ளது. விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடாத்தப்படவுள்ள இப்போட்டி நிகழ்வில் கால்பந்து, கயிறுழுத்தல், தடகளப் போட்டிகள் நடைபெறவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இப்போட்டி நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ள வீர,வீராங்கனைகளை உரிய நேரத்திற்கு வருகை தந்து நேர விரயத்தைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் போட்டி அமைப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

இப்போட்டி நிகழ்வில் இறுதி நாளில் பல முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டு வெற்றியீட்டியோருக்கு பரிசில்கள் வழங்கவுள்ளதாகவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (93)

## மூன்று நாள் பயிற்சி முகாம் அளவெட்டி அருணோதயாவில்


(அளவெட்டி)

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை வீர,வீராங்கனைகளுக்கான மூன்று நாள் மெய்வல்லுநர் பயிற்சி முகாம் எதிர்வரும் 3ஆம் திகதி முதல் 5ஆம் திகதி வரை அளவெட்டி அருணோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண விளையாட்டு விழாவில் வெற்றியீட்டி தேசிய மட்ட போட்டிக்குத் தகுதி பெற்றுள்ள வீர,வீராங்கனைகளுக்கான பயிற்சி முகாம், வடக்கு மாகாண விளையாட்டு பிரிவினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்த வகையில் வலிகாமம் கல்வி வலயத்திலிருந்து தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ள மெய்வல்லுநர் வீர,வீராங்கனைகளுக்கான மூன்று நாள் பயிற்சி முகாமே அளவெட்டி அருணோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இதில் மெய்வல்லுநர் போட்டி குறித்து செய்முறை விளக்கங்கள் அளிக்கப்பட்டு, தேசிய மட்டப் போட்டிகளில் பதக்கம் வெல்லும் வகையில் பயிற்சிகள் அளிக்கப்படும் என வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி உதவி கல்விப் பணிப் பாளர் தெரிவித்துள்ளார். (93)

## பதக்கம் வென்றவருக்கு பாராட்டு




தேசிய மட்ட சோட்டோகான் கராத்தே சுற்றுப் போட்டி அண்மையில் கொழும்பு சுகததாஸ உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. இப்போட்டியில் சி.எஸ்.ஐ. சேர்ந்த எஸ். றஜிதரன் கறுப்புப் பட்டிக்கான 50-65 உட்பட்ட நிறைப் பிரிவில் வெற்றிப் பதக்கம் வென்று சாதனை படைத்தார். இதனைப் பாராட்டும் வகையில் சி.எஸ்.டி நிறுவனத்தினால் பாராட்டு விழா நடாத்தப்பட்டது. இதில் கிளி, முல்லை சி.எஸ்.டி பொறுப்பதிகாரி கேணல் ரட்ணபிரிய மற்றும் கராத்தே ஆசிரியர் எஸ். விஜயராஜ் ஆகியோர் பதக்கம் வென்ற றஜிதரனுக்கு வாழ்த்துத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

## தென்னாபிரிக்க வீரர் கலிஸ் ஓய்வு

உலகின் தலை சிறந்த சகலதுறை வீரர்களில் ஒருவரான தென்னாபிரிக்கா கிரிக்கெட் அணியின் கலிஸ் தான் சர்வதேசப் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். ஏற்கனவே கடந்த வருடம் டெஸ்ட் போட்டிகளில் ஓய்வு பெற்று இருந்த இவர் 2015ஆம் ஆண்டு உலகக் கிண்ண தொடர் வரை ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் விளையாடும் நோக்கில் இருந்தார். இருப்பினும் அண்மைக்காலமாக ஒருநாள் சர்வதேசப் போட்டி அணியில் இவருக்கு இடம் வழங்கப்படவில்லை. உலகக்கிண்ணத்திற்கு தயார் செய்யும் நோக்கில் இலங்கை தொடரில் இவருக்கு இடம் வழங்கப்பட்டது. ஓட்டங்களைப் பெற கலிஸ் தடுமாறியதுடன் அணியில் இடத்தை தொடர்ந்து தக்க வைக்கக் கூடிய அளவில் ஓட்டங்களைப் பெறவும் இல்லை. இந்த நிலையில் தான் சகலவித சர்வதேசப் போட்டிகளிலும் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

39 வயதான கலிஸ் 166 டெஸ்ட் போட்டிகளில் 13,289 ஓட்டங்களை 45 சதங்களுடன் பெற்றுள்ளார். டெஸ்ட் போட்டிகளில் கூடுதலான சதங்களைப் பெற்றவர்களில் இரண்டாமிடத்தில் இவர் உள்ளார். 292 விக்கெட்களையும் டெஸ்ட் போட்டிகளில் கைப்பற்றியுள்ள இவர் 328 ஒரு நாள் சர்வதேசப் போட்டிகளில் 11579 ஓட்டங்களையும், 273 விக்கெட்களையும் கைப்பற்றியுள்ளார். 25 ட்வென்டி ட்வென்டி போட்டிகளில் 666 ஓட்டங்களையும் 12 விக்கெட்களையும் ஜக்ஸ் கலிஸ் கைப்பற்றியுளார்.

# நீங்கள் அத்தனை பேரும் உத்தமர்தானா சொல்லுங்கள்!



– சுகு ஸ்ரீதரன்

**போ**ராடிய பொடியள் போய்ச் சேர்ந்த பிறகு இப்போது திருடர்கள் ஆதிக்கம் பெற்றிருக்கிறார்கள்.

உள்ளூரில் நாளாந்தம் வன்முறைகள், பாலியல் கொடுமைகளில் ஈடுபடும் கும்பல்கள் பற்றி பேசவரவில்லை. அதனை இன்னொரு சந்தர்ப்பத்தில் பார்ப்போம்.

சமூகத்தை மக்களை ஏமாற்றி உசுப்பேத்தி பிழைப்பு நடத்தும் ஒரு கூட்டம் தொடர்ந்து இருந்துகொண்டு தான் வருகிறது.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வேண்டுமென்ற விருப்பமும் கிடையாது. தீர்வுக்கான சாத்தியங்கள் உருவானால் அதனை சீர்குலைத்துவிட வேண்டுமென்ற கரிசனையுடன் இவர்கள் செயற்படுகின்றார்கள்.

கடந்த 30 வருடங்களில் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான சந்தர்ப்பங்கள் தவறவிடப்பட்டதில் முதுகெலும்பு இல்லாத இந்த பிழைப்புவாதக் கூட்டமும் ஒரு காரணமாக இருந்தது.

தமிழர்களுக்கு பொறுப்புள்ள தன்னலமில்லாத தலைவர்கள் இருந்திருந்தால் இன்றளவில் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் பெருமளவுக்கு அவ்வாறு இருக்கவில்லை.

ஆளுமைமிக்க தலைவர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள்.

அல்லது துரோகிகள் என்ற முத்திரையுடன் தீண்டத்தகாதவர்களாக ஆக்கப்பட்டார்கள்.

இன்றளவும் ஆக்கபூர்வமாக செயற்பட முனைபவர்கள் விரும்பத்தகாதவர்களாக ஆக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அதற்கு சமூகமும் ஒரு முக்கிய காரணி. இந்தச் சமூகமும் துரதிஷ்ட வசமாக இந்தப் போக்கிரிகளைத் தான் தமது தலைவர்களாக தேர்ந்தெடுக்கிறது.

பிரச்சினை நீடித்து நிலவினால்தான் தமது பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்ப முடியும் அங்கு இருப்பவர்களின் விசா வதிவிட உரிமைகளை உறுதி செய்ய முடியும் என இச் சமூகத்தில் செல்வாக்குப் பெற்ற ஒரு பிரிவினர் கருதுகின்றனர்.

இங்கு வாழ்வு சீர்குலைந்து போவதே ஐரோப்பாவில் தமது சந்ததிகளுக்கு வாழ்க்கையை உருவாக்குமென இதன் ஆழ்மனம் கருதுகிறது.

எனவே பிரச்சினை தீர்வென்பது இதற்கு கசப்பான விடயம்.

ஆனால் மிகவும் வறிய மக்கள் பிரிவினர் இருக்கிறார்கள். இவர்களின் வாழ்க்கை தலைவிதி இங்குதான்.

ஆனால் இவர்களும் இந்த சீர்குலைவு கருத்தியலின் செல்வாக்குக்கு உட்படுகிறார்கள்.

ஆட்சியாளர்களும் அவர்களது பரிவாரங்களும் கூட இனப்பிரச்சினை நீடித்து நிலவுவதையே விரும்புகிறார்கள்.

அவர்களின் வாக்குவங்கி அரசியல் இருப்பு எல்லாமே பேரினவாத அரசியல் சார்ந்தது.

எனவே நாட்டில் பிரிவினை பேசும் அரசியல் எதிரிகள் தேவைப் படுகிறார்கள். அதாவது அனுகூல சத்துருக்கள் தேவைப்படுகிறார்கள்.

அதற்கு இந்த சீர்குலைவு சக்திகள் சமூகப் பிரிவினர் உதவுகிறார்கள்.

அதுதான் இன்று நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

இந்தச் சக்திகளுக்கு ஜனநாயகம், மனித உரிமை, சமூக பொருளாதார அபிவிருத்தி, முன்னேற்றம் இவை பற்றிய எந்த அக்கறையும் கிடையாது.

எனவே ஆக்கத்திற்கான இயக்கங்கள் தேவைப்படுகின்றன.

அது இனங்களின் உரிமைகளையும், சாமானிய மனிதர்களின் சமூக பொருளதார உரிமைகளையும், ஜனநாயக மனித உரிமைகளையும் முன்னெடுத்துச் செல்வதாக அமைய வேண்டும்.

இராணுவவாதம், நில ஆக்கிரமிப்பு, கலாசார ஆக்கிரமிப்பு பாரியளவில் நிகழ்கிறது.

தமிழ்த் தேசியம் தன்னுள் இருக்கும் மேட்டுக்குடித்தனம், சாதீயம், பிராந்தியவாதம் பற்றி கேள்வி கேட்கத் தயாராக இல்லை.

அது சமூகத்தில் வறியவர்களின் நிலைபற்றி பேசுவதில்லை.

இந்த இருபக்கத்து அரசியல் சித்து விளையாட்டுக்கள் பற்றிய விழிப்புணர்வுக்கான சக்திகள் சமுதாயத்தில் உருவாக வேண்டும்.

முக்கியமான பிரச்சினை என்னவென்றால் மக்கள் சுயாதீனமாக இயக்கங்கள் நடத்துவதற்கான இடைவெளிகள் இங்கில்லை.

மக்கள் கூடி நின்று தமது கோரிக்கைகளை வலியுறுத்துவதற்கான நிலைமைகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

அந்த உரிமைகள் பாதுகாக்கப்படல் வேண்டும்.

மக்களின் கோரிக்கைகள் அபிலாசைகளை வெளிப்படுத்துவதற்கான இடைவெளிகள் வேண்டும்.

இலங்கைக்கு பெருமைமிகு தொழிலாளர் வெகுஜன இயக்க போராட்ட வரலாறு இருக்கிறது. அந்த வரலாறு மீட்கப்பட வேண்டும்.

மக்கள் தமது பிரச்சினைகள் தொடர்பாக வீதிக்கு வருவதற்கான நிலைமைகள் ஊக்குவிக்கப்படல் வேண்டும்.

ஜனநாயகத்துக்கான சீர்திருத்தங்கள் அதிகார மட்டத்திலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஊடக சுதந்திரம் உண்மையான அர்த்தத்தில் பேணி பாதுகாக்கப்பட வேண்டும்.

ஆனால் ஊடகங்கள் பெருமாலும் ஊடகமுதலாளிகள் அதிகாரவர்க்க சக்திகளின் நலன்களை முன்னிறுத்தியே செயற்படுகின்றன.

எந்த தன்னலமும் இல்லாத ஊடகவியலாளர்கள் இருக்கவே செய்கிறார்கள்.

முன்னாள் திருடர்களும் ஊடகவியலாளர்களாக இருக்கிறார்கள்.

இவர்கள் சொல்வதை நம்புவதற்கு ஒரு கூட்டம் இருக்கிறது.

எமது மக்கள் இதிலிருந்து விடுபடுவதற்கு உப கண்ட அளவில், உலகளவில் ஊடகங்களை அவதானிக்க வேண்டும்.

சமூக வலைத்தளங்களில் ஈடுபாடு செலுத்த வேண்டும்.


அப்போதுதான் உலகம் எவ்வாறு நாம் எவ்வாறு என்பது புரியும்.

இலங்கையின் அதிகார மட்ட சீர்திருத்தம் சகல அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பதிலிருந்து அவசரகால- பயங்கரவாதத் தடைச்சட்டங்களை நீக்குவதிலிருந்து ஆரம்பிக்கப்படல் வேண்டும்.

இனவாதம் ஒழிக்கப்பட வேண்டும்.

இனபேதம் கடந்து சமூக அரசியல் சக்திகள் செயற்பட முன்வர வேண்டும்.

# மலச்சிக்கல்



Dr.சி.சகிலா
நீரிழிவு சிகிச்சை நிலையம்
யாழ் போதனா வைத்தியசாலை.

**எ**வ்வயதினரையும் பாதிக்கும் ஒரு பொதுவான பிரச்சினையாக மலச்சிக்கல் காணப்படுகின்றது. ஒருவர் தனது வழமைக்கு அதிகமான நாட்கள் மலங்கழிக்க முடியாமல் இருக்கும் போதோ அல்லது மிகக் கடினமான மலத்தை கழிக்கும்போதோ அல்லது முழுமையாக மலங்கழிக்க முடியாமல் இருக்கும் போதும் மலச்சிக்கல் எனக் கருதப்படுகின்றது.

இன்றைய நவீன வாழ்க்கை முறையே அதாவது போதியளவு நார்ச்சத்துள்ள உணவுகளை உட்கொள்ளாமை, போதியளவு நீர் குடிக்காமை, போதியளவு உடற்பயிற்சியின்மை மற்றும் மலங்கழிக்க வேண்டிய தேவை ஏற்படுமிடத்து அதனை பிற்போடுதல் போன்றவையே மலச்சிக்கலுக்கான முக்கிய காரணங்களாகும்.

உளவியல் பிரச்சினைகளும் மலச்சிக்கலை ஏற்படுத்தலாம். நீண்டகால மலச்சிக்கல் சில நோய்களிற்கான அறி-குறியாகவும் இருக்கலாம். உதாரணமாக பெருங்குடல் புற்றுநோய், நீரிழிவுநோய், பார்கின்சன் நோய் தைரொட்சின் குறை-பாடு, மன அழுத்தம், போன்றவை, சில மருந்து குழிகைகளின் பக்கவிளைவாகவும் மலச்சிக்கல் ஏற்படலாம்.

நீண்டகாலமாக மலச்சிக்கல் காணப்படுமிடத்து அதனால் வேறு பிரச்சினைகள் ஏற்படக்கூடும். மல அடைப்பு, திரவ மலக் கசிவு, மூலநோய் போன்றன அவற்றுள் சிலவாகும்.

இடைக்கிடையே குறுகிய கால மலச்சிக்கல் ஏற்படுமாயின் வாழ்க்கை முறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் அதிலிருந்து விடுபடலாம். அவை யாவன அதிக நார்ச்சத்துள்ள உணவுப் பொருட்களை (பழங்கள், மரக்கறி, கீரைவகை) சேர்த்தல், போதியளவு நீர் (நாளொன்றுக்கு 1.5 லீற்றர் தொடக்கம் 2 லீற்றர் வரை) அருந்துதல், தினம்தோறும் உடற்பயிற்சி மற்றும் மலங்கழிக்க வேண்டிய உந்துதல் ஏற்படும் நேரத்தில் தாமதிக்காமல் மலங்கழித்தல் என்பவையாகும்.

நீண்டகால மலச்சிக்கல் காணப்படுமிடத்து அல்லது காய்ச்சல் மற்றும் வயிற்றுவலியுடன் ஏற்படுமிடத்து அல்லது மலத்துடன் குருதி கலந்து வெளியேறுமிடத்து வைத்திய ஆலோசனையை நாடுவது அவசியமாகும்.

# "போடுங்கள் – தள்ளி விடுகிறேன்"



தேவன்

**மு**ன்பெல்லாம் பத்திரிகைகளில் நிறைய எழுதிப் புகழ்பெற்ற பிரபல எழுத்தாளர்கள்கூட ஒரு புத்தகம்கூட வெளியிட முடியா நிலை இருந்தது. எழுத்தாளர் "தேவன்" அதற்கு உதாரணம். விகடனில்தான் அவரது படைப்புகள் எல்லாம் வெளியாகின. அவரது ஆயுள்காலம் வரை அவற்றின் உரிமை விகடனிடமே இருந்தது. அவர் காலமான பின்னரே உரிமையைப் பெற முடிந்தது. அவர் தன்னுடைய எழுத்து நூலானதைப் பார்க்காமலேயே இறந்து போனது பெரிய சோகம்.

டாக்டர் மு.வ.தான் தமது படைப்புகளை எந்தப் பத்திரிகையிலும் எழு-தாமல் நேரடியாகத் தன் நூல்களை வெளியிட்டுப் பிரபலமானவர். தம் எழுத்துக்களின் உரிமையை பிரசுரகர்த்தர்களிடம் சொற்பத் தொகைக்கு விற்றுவிடும் சூழ்நிலையே அப்போது இருந்த்து. டாக்டர் மு.வ. லட்சக்கணக்கில் விற்ற தனது திருக்குறள் தெளிவுரை நூல் உரிமையை அப்படி சொற்பத் தொகைக்கே விற்றார்.

என் நண்பர் ஒருவர் - நிறைய எழுதிப் பிரசுரமும் கண்டவர் - தன் படைப்புகளை நூலாக வெளியிட எந்தப் பதிப்பகமும் கிடைக்காமல் விற்பனை சிரமம் தெரிந்தும் மனைவியின் வளையல்களை அடகு வைத்துப் பணம் புரட்டிப் புத்தகம் போட்டார். இலவசப் பிரதிகள்தான் போயின. நூற்றுக் கணக்கில் வைக்க இடமில்லாமலும் வாடகை வீட்டில் பிரதிகள் சீரழிவதில் எரிச்சலுற்ற அவரது மனைவி "பேசாமல் ஆற்றில் கொண்டுபோய்ப் போடுங்கள்" என்றார். அதை என்னிடம் சொல்லி நண்பர் வருத்தப்பட்டபோது நான் சொன்னேன். "அதுவும்கூட சாத்தியமில்லை. ஆறு வறண்டு கிடக்கிறது!" ஓராண்டிற்குப் பிறகு எங்கள் ஆற்றில் வெள்ளம் வந்தபோது நான் நண்பரிடம் அவரது மனைவியின் யோசனையை நினைவூட்டினேன். அவர் "அதற்கு அவசியமில்லாமல் வேறொரு ஆற்றில் போட்டு விட்டேன்" என்றார். விவரம் கேட்டபோது ஒரு பிரபல விற்பனையாளரிடம் நூல்கள் தேங்கிக் கிடப்பது பற்றிப் புலம்பியபோது அவர், "இங்கே கொண்டுவந்து போடுங்கள். நான் தள்ளி விடுகிறேன்" என்று சொன்னதை நம்பி மூட்டை கட்டி அவரது கடைக்கு தனியார் வாகனம் ஒன்றை ஏற்பாடு செய்து அனுப்பி வைக்க அவரும் சொன்னபடி தள்ளி(!) விட்டிருக்கிறார். அதாவது தன் கடைக்கு வந்தவர் போனவருக்கெல்லாம் சினிமா நோட்டீஸ் போல இலவசமாக வாரி வழங்கிவிட்டார்! நண்பருக்கு அந்தப் புத்தகங்களை அச்சிட்ட செலவோடு வாகன செலவும் சேர்ந்ததுதான் மிச்சம்!

**('எனது இலக்கிய அனுபவங்கள்' நூலில் வே.சபாநாயகம்)**

# சினிமா சினிமா



விஜய் டி.வி சினிமா விருது விழாவில், அடுத்த சூப்பர் ஸ்டார் என்று அழைக்கப்பட விரும்புகிறீர்களா என்று கேட்கப்பட்டதற்று, நடிகர் விஜய் இளைய தளபதியாகவே இருக்க விருப்பப்படுவதாகப் பதிலளித்திருந்தார். இந்நிலையில், சமீபத்தில் ஒரு கருத்து கணிப்பில், "விஜய் தான் அடுத்த சூப்பர் ஸ்டார்..." என்று கூறப்பட்டது. அதனால், "பேஸ்புக்"கில் விஜய் -அஜித் ரசிகர்களுக்கிடையே கடும் மோதல் நடந்து கொண்டிருக்கிறது.

"விசில்", "துள்ளுவதோ இளமை" படங்களின் மூலம் கவனத்தை ஈர்த்த செரீன், திடீரென்று வாய்ப்புகள் இல்லாமல் போனார். பின்னர் "பீமா" படத்தில் விக்ரமுடன் இணைந்து ஒரு பாடலுக்கு நடனமாடினார். நீண்ட இடைவெளிக்குப்பின் தற்போது "திகில்" என்ற படத்தில் ஹீரோயினாக நடிக்கிறார். அறிமுகப்படமான "விசில்" படமும் த்ரில்லர் இப்போதைய "திகில்" படமும் அதே பாணிதான். அதனால் விட்ட இடம் கிடைக்கும் என்கிறார் செரீன்.

தங்களின் மனம் கவர்ந்த நட்சத்திரங்களின் பெயர்களை ரசிகர்கள் பச்சைக் குத்திக் கொள்வது போல, தங்களுக்குப் பிடித்த சின்னம், காதலர் பெயர்களை நடிகர்கள் குத்திக் கொள்வது தற்போதைய ஃபாஷன். த்ரிஷா, நயன்தாரா, குஷ்பூ, டாப்ஸி, எமி ஜாக்ஸன் உள்ளிட்ட கோலிவுட் நட்சத்திரங்களும், பிரியங்கா சோப்ரா, அசின், தீபிகா படுகோனே போன்ற பொலிவுட் நட்சத்திரங்களும் உடலின் பல பாகங்களில் எதாவது ஓர் உருவத்தையோ, பெயரையோ பச்சைக் குத்தி வைத்திருக்கின்றனர். இந்த வரிசையில் "கோச்சடையான்" படத்தை இயக்கிய ரஜினியின் இளைய மகள் சௌந்தர்யா, தனது இடது முழங்கையில் லதா ரஜினி என தனது தாய் மற்றும் தந்தையின் பெயரை பச்சை குத்தி இருக்கிறார்.

தமிழில், சூர்யாவுடன் அஞ்சான், விஜய்யுடன் கத்தி படங்களில் நடித்துள்ள சமந்தா, தெலுங்கில் தனது முதலிடத்தைக் கோட்டைவிட்டுள்ளார். சமீபத்தில் நடத்தப்பட்ட ஒரு வாக்கெடுப்பில், தென்னிந்திய நடிகைகளில், முதல் பத்து இடங்களில் முதலிடத்தை ஸ்ருதிஹாசன் கைப்பற்றியிருக்கிறார். அதற்கடுத்து காஜல் அகர்வால், ஸ்ரேயா, தமன்னா, அனுஷ்கா போன்ற நடிகைகள். கடந்த சில ஆண்டுகளாக முதலிடத்தை தக்க வைத்திருந்தனர் சமந்தாவோ, இந்த முறை, 12ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளார்.

கரிகாலன் என்ற படத்தின் கதை, இன்னொருவர் கதையின் கொப்பி என்று கூறப்பட்டதால், அப்படத்திலிருந்து வெளியேறினார் விக்ரம். இப்போது, கோலிசோடா படத்தின் இயக்குனருடன் ,அவர்











இணைந்துள்ள "பத்து எண்றதுக்குள்ள" என்ற படத்தின் கதையும், த ட்ரான்ஸ்போர்ட்டர் என்ற ஆங்கிலப் படத்தின் தழுவல் என பேச்சு எழுந்துள்ளது. டென்ஷனாகியுள்ள விக்ரம் தன் நண்பரும், இயக்குனருமான தரணியிடம் அடுத்த படத்திற்கு கதை கேட்டுள்ளார்.

கோலிவுட்டைப் பொறுத்தவரை, விஜய்சேதுபதி என்றாலே வித்தியாசம் என்றாகிவிட்டது. மற்ற கதாநாயகர்களை மாதிரி, வழக்கமான கதைகளில், அவர் நடிக்க மாட்டார் என்பதால், வித்தியாசமான கதைகளுடன், இயக்குனர்கள் முற்றுகையிட்டு வருகின்றனர். அப்படி தன்னிடம் வரும் கதைகளில் கிட்டதட்ட, 25 கதைகள் வரை கேட்ட பின், அதிலிருந்து ஒரு கதையை ஓ.கே., செய்கிறார். படங்களின் பெயர்களும் வித்தியாசம்தான். புறம்போக்கு, இடம் பொருள் ஏவல், மெல்லிசை, மற்றும் வசந்தகுமாரன் படங்களை அடுத்து, விஜய் சேதுபதி நடிக்கவிருக்கும் புதிய படம் எடக்கு.

நகைச்சுவை, குணச்சித்திரம், வில்லன் மற்றும். கதாநாயகனாகவும் பலவித பாத்திரங்களில் ஒளிர்ந்தவர் நாகேஷ். தமிழ் சினிமாவில் உச்சத்தில் இருந்த காலத்தில், தன் வாரிசாக மகன் ஆனந்த்பாபுவை களம் இறக்கினார். நடிப்பு, நடனம் என வேகமாக வளர்ந்து வந்த ஆனந்த்பாபு, திடீரென்று காணாமல் போனார். தற்போது ஆனந்த்பாபுவின் மகன் கஜேஷ் "கல்கண்டு" என்ற படத்தில் கதாநாயகனாக நடிக்கிறார்.

நடிகர் திலகம் முதன் முதலில் சினிமாவில் போட்டது பெண் வேடம். உப்பரிகையில் நின்று கொண்டு ராமனைப் பார்க்கும் சீதை வேடம்தான் சிவாஜி ஏற்ற முதல் பாத்திரம். 1952ஆம் ஆண்டு "பராசக்தி"யில் குணசேகரன் பாத்திரத்தில் சிவாஜியை கதாநாயகனாக்க தயாரிப்பாளர் பி.ஏ.பெருமாள் முடிவு செய்த போது, பலரும் எதிர்ப்பு தெரிவித்தார்கள். அந்த எதிர்ப்புகளையெல்லாம் மீறி சிவாஜியை ஹீரோவாக்கினார் பெருமாள். தமிழ் சினிமா உலகில் முதன் முதலாக பெரிய கட்-அவுட் வைக்கப்பட்டது சிவாஜிக்குத்தான். அந்தப் படம் "வணங்கா முடி". சிவாஜி நடித்த மொத்த படங்கள் 301. இதில் தமிழ்ப் படங்கள் மட்டும் 270. தெலுங்கில் 9, ஹிந்தி 2. மலையாளம் 1. கௌரவத் தோற்ற படங்கள் 19. அவரது நிறைவேறாத ஆசை தந்தை பெரியார் வேடத்தில் நடிப்பது. "தமிழ் சினிமாவில் எல்லோருக்கும் நீங்கள்தான் ரோல் மொடல்" என்று ஒரு முறை பிரபல தவில் கலைஞர் வலையப்பட்டி சொன்ன போது, "டி.எஸ்.பாலையா, எம்.ஆர். ராதா வரிசையில் நான் மூன்றாவதுதான்" என சிவாஜி சொல்லியது அவரின் தன்னடக்கத்துக்கு உதாரணம் என்பார்கள்.

பேஸ்புக்கில், நடிகை காஜல் அகர்வாலை, ஒரு கோடியே பதினைந்தாயிரத்து எண்ணூற்றி எழுபது பேர், பின் தொடர்கின்றனர்.

அனுஷ்கா, நயன்தாரா இருவரும், ஒரு படத்தில் நடிக்க மூன்று கோடி (இந்திய) ரூபா சம்பளம் வாங்குகின்றனர். காஜல் அகர்வாலுக்கு கதாநாயகர்கள் பிரத்தியேக சிபாரிசு செய்வதால் நான்கு கோடி.

அன்னக்கொடி படத்தில் ஆடு மேய்த்த கார்த்திகா, புறம்போக்கு படத்தில், ஒரு காட்சியில், ஒட்டகம் மேய்ப்பது போல் நடித்துள்ளார்.

ரோமியோ, ஜூலியட் படத்தில், சிக்ஸ்பேக் பயிற்சியாளராக நடிக்கும் ஜெயம் ரவியிடம், சிக்ஸ்பேக் வைப்பதற்கு, ஆலோசனை கேட்டுவரும் நடிகராக ஆர்யா நடித்துள்ளார்.

தாரை தப்பட்டை படத்திற்கு, தன்னை தேர்வு செய்து, பின் ஓரங்கட்டியதால், இயக்குனர் பாலா மீது, கோபத்தில் இருக்கிறார் ஸ்ரேயா.

விஜய் டி.வியின் மற்றுமொரு தொகுப்பாளர் மா.கா.பா.ஆனந்த் கதாநாயகனாக நடிக்கும் நகைச்சுவைப் படம் "அட்டி". கதாநாயகியாக அஷ்மிதா. நடிகர் ராம்கி முக்கிய வேடத்தில் நடிக்கிறார்.



# கிளிஞ்சல் தீவு

செனகல் நாட்டின் தென்கிழக்கே அட்லாண்டிக் கரையை ஒட்டி, ஜோல் படியோத் என ஒரு தீவு உள்ளது. இந்தத் தீவின் சிறப்பு இது முழுவதும் கிளிஞ்சல் மயமானது என்பதே!

இங்கு நதிநீரும் கடல் நீரும் கலந்து, இந்தப் பகுதி மக்களுக்கு மீன்களை வாரி வழங்குகிறது.

ஆக, இங்குள்ளவர்களுக்கு முக்கிய தொழில் மீன் பிடிப்புதான். 16 ஆம் நூற்றாண்டில் போர்த்துகீசியர்கள் இங்கு வந்து வியாபாரத் தலமாக ஆக்கிக் கொண்டு, இங்கிருந்தபடி மேற்கு ஆபிரிக்கா் போர்த்துக்கல் மற்றும் நெதர்லாந்து பகுதிகளில் வர்த்தகம் செய்தனர்.

1850-இல் இது பிரெஞ்ச் காலனியாயிற்று. செனகல் இஸ்லாமிய நாடு என்றாலும், இத்தீவில் 90 சதவிகிதம் கிறிஸ்தவர்கள்தான் குறிப்பாக மீனவர்கள்.

ஊரே... கிளிஞ்சல் மயமாக காட்சியளிப்பதால் இதனை பார்க்கவென்றே சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர்.

சாலைகள்.. மாடிப்படிகள். மலை ஏறும் பாதைகள் உட்பட அனைத்தும் இங்கு கிளிஞ்சலால் ஜொலிப்பதைக் காணலாம்.

# இடரினைத் தவிர்த்த பிடரி


அந்த வகுப்பறையில் ஆசிரியர் பாடம் நடாத்திக் கொண்டிருந்தார். இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன்னரான அந்நியர் ஆட்சிக்காலம் பற்றிய வரலாற்றுப்பாடம்.

இறுதி நேரத்தில் ஆசிரியர் ஒவ்வொரு மாணவனையும் பரீட்சித்துக் கொள்ளத் தொடங்கினார். அசமந்தனாகத் தோற்றிய மாணவனொருவனை விளித்து "இலங்கையின் அந்நியர் ஆட்சிக்காலத்து முதல் மகாதேசாதிபதி எவர்?" என வினவினார். விடை தெரியாமல் விழிகள் பிதுங்கித் தடுமாறலானான் அம் மாணவன். ஆசிரியர் திரும்பவும் கேட்க மௌனமே அவன் பதிலாயிற்று.

ஆத்திர ஆவேசத்துடன் அவனை அண்மித்த ஆசிரியர் கையோங்கவே, மாணவனின் தலை தன்னிச்சையாகத் தாழ்ந்தது. வசமான அறையொன்று அவன் பிடரியில் வந்து விழுந்தது. அம்மாணவன் பிடரியைத் தடவியபடியே இன்னுந்தான் வாய் திறவாமல் நின்று கொண்டிருந்தான்.

பொறுமையிழந்த ஆசிரியர், வாய்திறந்து பதிலைச் சொல்லும்படி அவனை உறுக்கினார். வேதனை எரிச்சல் மிகவே அம்மாணவன் -


"பிடரிக்கை நோகுது சேர்" - என முனகினான் அதனைச் சாவகாசமாகச் செவிமடுக்காத ஆசிரியரோ - "ஆ... அவரேதான்! சேர் பிரடரிக் நோத். சேர் பட்டம் முன்னால் வர வேண்டும். பார்த்தாயா, அடி விழுந்தவுடன் தான் சரியான பதில் வெளிப்படுகிறது" - என்றார் உற்சாகப் பெருமிதத்தோடு,



அந்த ஆசிரியரைப் பொறுத்தவரை தண்டத்தின் தயவால் தகுந்த பலன் ஆயிற்று.

அம்மாணவனைப் பொறுத்தவரை, கண்டம் ஒன்று எப்படியோ கடந்து போயிற்று.


- இடைக்காடு இளைய பண்டிதன்.




# தொல்லியல் வரலாற்றுப் பாரம்பரியம் கொண்ட நெடுந்தீவு

நெடுந்தீவு (Neduntheevu) இலங்கையின் வடபகுதியில் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குத் தென்மேற்கில் அமைந்துள்ள ஏழு தீவுகளுள் ஒன்று. ஒல்லாந்தர் இத்தீவை Delft என்று பெயரிட்டு அழைத்தார்கள். இன்றும் ஆங்கிலத்தில் இத்தீவு இப்பெயராலேயே குறிப்பிடப்படுகின்றது. நெடுந்தீவு தலைத்தீவு, பசுத்தீவு, பால்தீவு, அபிசேகத்தீவு, தயிர்தீவு முதலான பெயர்களால் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் அழைக்கப்பட்டு வந்துள்ளது. யாழ். குடாநாட்டில் இருந்து நெடுந்தொலைவில் இருப்பதனால் இத்தீவு நெடுந்தீவு என்று பெயர் பெற்றது.

தொல்லியல் வரலாற்றுப் பாரம்பரியம் கொண்ட இத்தீவு விவசாயம், கால்நடை, கடல் வளங்களுடன் உள்ளது. 1813ஆம்


பெருக்கு மரம்

ஆண்டு நெடுந்தீவு கடலில் இருந்து புறப்பட்ட ஹீர்த் டீ போலோ (hearth De Palo) எனும் ஐக்கிய அமெரிக்க இளைஞன் இத்தீவின அழகையும், வளங்களையும் மனதில் கொண்டு இது தனி ஒரு நாட்டுக்கு சொந்தமானதல்ல! இந்த பிரபஞ்சத்திற்கே சொந்தமானது என்கிறான்.நெடுந்தீவின் வளங்கள் வரலாற்று பெறுமதி மிக்கவை. நெல் சிறுதானிய பயிர்களும் சணல், பெருக்கு, பாலை, பனை, தென்னை, மூலிகை செடி கொடிகளுடன் கடலும் கடல் சார்நத இடமுமான இந்த நெய்தல் நிலத்தில் பாலும் மோரும் பாய்ந்தோடிய வரலாறுகள் பல. மருந்து மாமலை வனம் என இத்தீவினை போற்றிப்பெருமிதம் கொண்டார் மன்னன் செகராசசேகரன்.

போர்த்துக்கேயர் காலம் தொட்டு ஆங்கிலேயர் காலம் வரையான அன்னியர் ஆதிக்கத்திற்கு முன்னர் நெடுந்தீவு ஒரு சுதந்திர தனி இராசதானி நாடாகவே விளங்கியது. வெடியரசன் நெடுநதீவின் மேற்குப்பகுதியில் கோட்டைக்காடு என்னுமிடத்தில் கோட்டை கட்டி ஆண்டு வந்தான். அமைச்சர்கள், படைவீரர்களுடன் ஆட்சி புரிந்துள்ளான். வெடியரசனின் கோட்டை இன்றும் சிதைந்த நிலையில் கல்மேடாக நெடுந்தீவின் வடமேற்குக் கரையில் காணப்படுகிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து நெடுந்தீவு 45 கிலோமீற்றர் தூரம் ஆகும். ஆனால் இந்தியாவின் இராமேஸ்வரக கரையிலிருந்து இதன் தூரம் 38 கிலோமீற்றர் மட்டுமே. புங்குடுதீவில் இருந்து 10 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.நெடுந்தீவு வட்க்குத் தெற்காக 6 கிலோமீற்றர் அகலத்தையும், கிழக்கு மேற்காக 8 கிலோமீட்டர் நீளத்தையும் கொண்ட ஒரு சரிந்த இணைகர வடிவில் 30 கி.மீ. சுற்றளவையும், 48 சதுர கிலோமீற்றர் பரப்பளவையும் கொண்டுள்ளது.நெடுந்தீவு மக்கள் பண்டைய காலத்தில் தென்னிந்தியாவுக்குச் செல்வதற்கு பெரியதுறை என அழைக்கப்பட்ட துறைமுகத்தைப் பயன்படுத்தினர். இங்கிருந்து மக்கள் படகுகளில் யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, புங்குடுதீவு ஆகிய இடங்களுக்கும் பயணம் செய்தனர். இந்த பெரிய துறை நெடுந்தீவின் மேற்குக் கரையில் அமைந்துள்ளது. இதனைவிட மாவிலித் துறைமுகம், கிழக்கே கிழக்குத்துறை, வடக்கே தாளைத்துறை, குடுவிலித்துறை, தெற்கே குவிந்தாதுறை, வெல்லா துறை ஆகிய துறைமுகங்களும் உள்ளன. ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் பெரிய துறையிலிருந்து எவரும் இந்தியாவிற்கு செல்லாதபடி தடைவிதிக்கப் பட்டிருந்தது. இத்துறைமுகத்தை கைப்பற்றுவது தொடர்பாக வெடியரசனுக்கும், மீகாமனுக்கும் சண்டை நடந்ததாக வரலாறு கூறுகிறது.


வெடியரசன் கோட்டை


நெடுந்தீவு கட்டைக்குதிரைகளுக்குப் பேர் பெற்றது. இவை தன்னிச்சையாக நெடுந்தீவு வெளிகளில் மேய்ந்து திரிகின்றன. இங்குள்ள குதிரைகளும் கோவேறு கழுதைகளும் 1660ஆம் ஆண்டு முதல் 1675ஆம் ஆண்டு வரை வடபகுதியின் ஒல்லாந்து அரசாங்கத்தின் ஆளுநராக இருந்த ரிஜிக் லொஸ்வேன் கொஹென்ஸ் இந்தத் தீவில் தங்கியிருந்த போது கப்பல்கள் மூலம் இத்தீவுக்கு கொண்டு வந்து



கட்டைக்குதிரை


இறக்கப்பட்டன. 19ஆம் நூற்றாண்டில் இவை நோலான் என்ற பிரித்தானியரால் முறையாக வளர்க்கப் பட்டன. இத்தீவிலிருந்து இக்குதிரைகளை வெளியே கொண்டு செல்ல முடியாது என்ற ஒரு சட்டம் நெடுந்தீவில் வழக்கில் உள்ளது.

நெடுந்தீவில் உள்ள பெருக்கு மரம் வரலாற்றுப் புகழ்மிக்கது. இது நூற்றாண்டுகள் பழமையானது எனக் கூறப்படுகிறது. இம்மரத்தில் உள்ள துளை வழியே உள்ளே சென்றால் அங்கே குகை ஒன்று உள்ளது. இங்கு ஒரு குடும்பம் நிற்கக்கூடிய இட வசதி உள்ளது இதன் சிறப்பாகும்.

இப்படி வரலாற்றுச் சிறப்பும், இயற்கை அழகும், வளமும் மிக்க நெடுந்தீவுப் பகுதியில் நட்சத்திர அந்தஸ்திலான ஹோட்டல் ஒன்றினை அமைக்க இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவின் மகனும், இலங்கை தென் மாகாணத்தில் அமைந்துள்ள அம்பாந்தோட்டை மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஸ தயாராகியுள்ளார். இதற்கு சுமார் 450 மில்லியனை (இந்திய ரூபாய் மதிப்பு 45 கோடி) அவர் ஒதுக்கியிருக்கிறார். நீச்சல் குளம், திருமணமண்டபம் மற்றும் அனைத்து நவீன வசதிகளுடன் அந்த ஆடம்பர ஹோட்டல் கட்டப்படவுள்ளது. கடல்வழி தொடர்பு மட்டுமே கொண்ட நெடுந்தீவிற்கு சுற்றுலாப் பயணிகள் வந்து சேருவதற்கு சிறிய அளவிலான ஓடுபாதையுடன் விமான நிலையம் ஒன்று அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.அந்த ஹோட்டலைச் சுற்றி நூறு வீடுகளும் நிர்மாணிக்கப்பட உள்ளன. இதற்கான கட்டுமான பணிகள் விரைவில் ஆரம்பமாக உள்ளன. இக்கட்டுமானப் பணிகளை பிரபல ஒப்பந்த நிறுவனமான மகா நிறுவனம் மேற்கொள்ளுமென தெரிகின்றது.இத்திட்டங்களை முன்னெடுக்க இலங்கையின் முன்னணி கட்டடக்கலைஞர்கள் குழுவொன்று அண்மையில் இலங்கை விமானப்படை விமானம் மூலம் நெடுந்தீவினை சுற்றிப்பார்வையிட்டுள்ளனர். அத்துடன் கடற்படை அதிவேகப் படகுகளும், இப்பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.


கோவேறுகழுதை











# திணைக்களத்தின் செயற்பாடுகளால் பிரதேச சபை ஊழியர்கள் பாதிப்பு

வலிகாமம் கிழக்கு பிரதேச சபை ஊழியர்கள் வருடக்கணக்காக பிரதேச சபை உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம் மற்றும் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தின் செயற்பாடுகளால் பாதிப்படைந்துள்ளனர்.

மேற்படி விடயம் தொடர்பாக 30.11.2011 ஆம் ஆண்டு தவிசாளரினால் நியமனம் செய்யப்பட்டு பதவியுயர்வு, நிரந்தர நியமனம், பதிலீட்டுத் தொழிலாளர்களின் பிரச்சினை தொடர்பாக தவிசாளரின் பிறழ் முகாமைத்துவ விசாரணை ஒன்று என்ற பேரில் 2012 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தொடக்கம் ஜனவரி மாதம் வரை தவிசாளர் செயலாளர்சபை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலருடன் 40 பேருக்கு மேல் ஓய்வு பெற்ற நீதியரசினால் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அலுவலகத்தில் அவரது அனுசரணையில் விசாரணை நடைபெற்றதும் அது சம்பந்தமாக இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை ஊழியர்களின் குறித்த பதவிக்கு உரிய சம்பளத்தை ஒருவருடமாக வழங்கி விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய நிதிகள் ஊழியர் சேமலாப நிதிகளும் உரிய ஊழியர்களிடமிருந்து பெறப்பட்டு குறித்த திணைக்களங்களுக்கு செலுத்தப்பட்ட நிலையில் அவர்களது பதவிகள் நிறுத்தப்பட்டு சபை செயலாளரினால் கடிதம் வழங்கப்பட்ட நிலையில் குறித்த தொழிலாளர்கள் கடமையாற்றுகின்றனர்.

இது சம்பந்தமாக யாழ். மேல்நீதிமன்றத்தில் தவிசாளரினால் வழக்கு தொடரப்பட்டது.

அதன் முடிவும் எட்டப்படவில்லை என்பதுடன் குறித்த ஓய்வுபெற்ற நீதியரசின் விசாரணை அறிக்கை கிடைக்காத நிலையில் தமக்கான விமோசனம் கிடைக்க வாய்ப்பிருந்தும் தாம் பாதிக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை அரச பொதுஊழியர் சங்க பிரதிநிதிகளுடன் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலின் போது ஆதங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (140)

## கால்வாய் நோய்த்தாக்கம் அவதானமாக இருக்க அறிவுறுத்து

தென்மராட்சிப்பகுதியிலுள்ள மிருசுவில், குடமியன், இடைக்குறிச்சி எழுதுமட்டுவாள் வரையான பிரதேச மாடுகளுக்கு தற்போது கால்வாய் நோய்த் தாக்கம் ஏற்பட்டுள்ளது.

கொடிகாமத்தில் இருந்து வரணி வடக்கு வரையான பிரதான வீதியின் கிழக்கு பக்கம் நோய் பிரதேசமாக இனங்காணப்பட்டுள்ளது.

நோயின் அறிகுறிகளாக மாடுகளின் வாய்ப் பகுதியில் (முரசு நாக்கு, புண்கள் ஏற்பட்டு வ்நர் ஊற்றியடி காணபபடும் குழப்பில் புண்கள் ஏற்பட்டு நொண்டும். ஓரிரு நாட்கள் உணவின்றி (உண்ணாது) சோர்வுற்றுக்காணப்படும். சிறிய கன்றுகள் திடீர் என இறக்கும் எனவே கொடிகாமம் பருத்தித்துறை வீதிக்கு மேற்கே உள்ள மாட்டுப்பண்ணையாளர்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்து அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எக்காரணம் கொண்டும் பிரதான வீதிக்கு குறுக்காக கிழக்குப்பகுதிக்கு மாடுகள் கொண்டு செல்வதை தவிர்த்தல், கிழக்குப்பகுதியிலிருந்து யாராவது மாடுகளை உங்கள் பகுதிக்கு கொண்டு வந்தால் உங்கள் மாடுகளுக்கும் நோய் ஏற்படும். இவற்றைக் கண்காணிப்பதுடன் தேவை ஏற்படின் 0212270811 என்ற எண்ணுக்கு தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (150)

## சூழல் பாதுகாப்புக்கு பங்கம் 56 பேர் மீது வழக்கு

யாழ். பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடந்த மாதத்தில் சூழல் பாதுகாப்பில் பங்கம் விளைவித்த 56 பேர் மீது வழக்குத்தாக்கல் செய்யப்பட்டதாக யாழ். பொலிஸ் நிலைய சூழல் பாதுகாப்பு பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

டெங்கு நோய் ஏற்படுத்தும் நுளம்புகள் வளரக்கூடிய வகையில் காணிகளில் பற்றைகளை வளர்த்திருந்த 11பேர் மீதும் வீடுகளில் குப்பைகளைக் கொட்டி சூழலை மாசடையச்செய்த 5 பேர் மீதும் வீதியில் மணலை போட்டு போக்குவரத்துக்கு இடையூறு வழங்கிய 30 பேர் மீதும் வீதிகளில் உணவுப்பண்டங்களை விற்ற 5 பேர் மீதும் வீதியோரங்களில் நீர்தேங்கி நின்று சூழலில் மாசடைவை ஏற்படுத்தக்கூடிய வகையில் செயற்பட்ட 5 பேர் மீதும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாகவும் இவர்களுக்கு தண்டம் விதிக்கப்பட்டதாகவும் யாழ். பொலிஸார் தெரிவித்தனர். (இ,25)

## பதிவிருக்கப் பெட்டகம்

மோடி தலைமையிலான இந்தியா, அயல்நாடுகளுடன் இணக்கத்துடன் பயணிக்க முயல்வதாகவே தெரிகிறது. இந்த பின்புலத்தில் கொழும்புடன் நெருக்கமான ஒத்துழைப்பை இந்தியா எதிர்பார்க்கிறது. அதேவேளை, இலங்கை தற்போது சர்வதேச ரீதியாக எதிர்கொண்டிருக்கின்ற நெருக்கடிகளால் புதுடில்லியிலிருந்து விலகிச் சென்றுவிடக் கூடாது என்னும் கரிசனையும் இந்தியாவிடம் உண்டு போல் தெரிகிறது.

எனவே இவ்வாறான விடயங்கள் அனைத்தும் ஒரு புள்ளியில் சந்திக்கும்போது, இலங்கைத் தமிழர் விவகாரத்தில் புதிதாக எதனையும் செய்யக்கூடிய சூழல் இந்தியாவிற்கு இல்லை. இருப்பது முன்னர் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஒரு உடன்பாட்டின் கீழ் செயலாற்றுமாறு வலியுறுத்துவது ஒன்றே. இந்தியாவில் எவர் ஆட்சிக்கு வந்தாலும், அவர்கள் இலங்கைத் தமிழர் தொடர்பில் காட்டும் அக்கறையின் எல்லையானது, இந்திய – இலங்கை ஒப்பந்தத்திற்கு அமைவான மாகாணசபை முறைமைதான்.

எனவே மோடி இந்தியாவின் திட்டமிடலாளர்களின் கருத்துகள் மூலம் தமிழர் தரப்பிற்கு சொல்லப்படுகிறது, நீங்கள் இந்தியாவிடம் இருந்து 13 இற்கு மேல் எதிர்பார்க்காதீர்கள் என்பதே!

எனவே கூட்டமைப்பிற்கு முன்னால் இருக்கின்ற பணி, 13 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழுள்ள உரிமையை தமிழ் மக்கள் முழுமையாக அனுபவிப்பதற்குத் தடையாக இருக்கின்ற விடயங்களை இந்தியாவின் கவனத்திற்கு கொண்டுசெல்வதுதான். கூட்டமைப்பு மாகாணசபை விடயத்தில் அசமந்தப் போக்கோடு இருக்குமாயின், அரசாங்கத்திற்கு அது வாய்ப்பாகவே அமையும்.

**– யதீந்திரா**

பதின்மூன்றாவது திருத்தத்தின் கீழான மாகாண சபையை அரசியல் தீர்வின் ஆரம்பக் கட்டமாக ஏற்பதில் நடைமுறைச் சிக்கல்கள் எதுவும் இல்லை. மாகாணசபையின் குறைபாடுகள் இருக்கின்றன என்பதற்காக அதை முற்றாக நிராகரிக்காமல், உள்ள அதிகாரங்களுடன் ஏற்றுச் செயற்படுத்திக்கொண்டு மேலதிக அதிகாரங்களைப் பெறுவதற்கு முயற்சிப்பது சமஷ்டித் தீர்வை நோக்கிய நகர்வின் ஆரம்பமாக இருக்கும்.

**– சிவா சுப்பிரமணியம்**

"ஈழத்தமிழர்கள் இஸ்ரேலிடம் இருந்து பாடம் கற்றுக் கொள்ள வேண்டும்"(?) என்று, இஸ்ரேல் கொடுத்த ஆயுதங்களை பாவித்து நடந்த முள்ளிவாய்க்கால் படுகொலைகள் ஓய்ந்த பின்னர், நிராஜ் டேவிட் என்ற ஊடகவியலாளர் கூறி வந்தார். சுவிட்சர்லாந்தில் வாழும் இவர், லங்காஸ்ரீ (தமிழ்வின்) என்ற தமிழர்கள் மத்தியில் பிரபலமான இணையத்தளத்தில், இஸ்ரேலை புகழ்ந்து தொடர் கட்டுரைகள் எழுதி வந்தார்.

ஈழத் தமிழர்கள் இஸ்ரேலுக்கு விசுவாசமானவர்களாக இருந்தால், மேற்கத்திய நாடுகளின் ஆதரவைப் பெற்றுக் கொள்ளலாம் என்பது அவரது வாதம். GTV எனும் லண்டனில் இருந்து ஒளிபரப்பாகும் தமிழ் தொலைக்காட்சியில் இஸ்ரேலுக்கு ஆதரவான நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கி வந்தார். GTV, லங்காஸ்ரீ என்பன மிகத் தீவிரமான தமிழ்தேசிய ஊடகங்கள் என்பது சிறு குழந்தைக்கும் தெரியும். நிராஜ் டேவிட் கூட தன்னை தீவிரமான தமிழ் தேசியவாதியாக காட்டிக் கொள்ளும் ஒருவர் தான்.


லண்டனில் இருந்து ஒலிபரப்பாகும் IBC வானொலியும், மிகத் தீவிரமான தமிழ் தேசிய ஊடகம் தான். புலம்பெயர்ந்த நாடுகளில் வாழ்ந்த யூதர்கள், ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொள்ளும் பொழுது, "இஸ்ரேலில் சந்திப்போம்" என்று விடை பெறுவார்களாம். அதே மாதிரி, தமிழர்கள் எல்லோரும் "தமிழீழத்தில் சந்திப்போம்" என்று கூறிக் கொள்ள வேண்டும் என்று அடிக்கடி அறிவுறுத்தி வந்தது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், கட்சிக்குள்ளேயே மிகவும் தீவிரமான தமிழ் தேசியவாதி என்று, உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பெயரெடுத்தவர். அவர் ஒரு கூட்டத்தில் பேசும் பொழுது: "உலகிலேயே மூன்று புத்திசாலித்தனமான இனங்களின் பெயர்கள் J என்ற எழுத்தில் ஆரம்பிக்கிறது. அவை முறையே Jews, Japanese, Jaffna Tamils!" என்று கூறினார்.

மே 17 இயக்கம், அனைத்து தமிழ் தேசியவாதிகள் சார்பாக, தமிழ்நாட்டில் பாலஸ்தீன ஆதரவுக் கூட்டம் போடுகின்றதாம். இப்போது ஒரு கேள்வி எழுகின்றது. மே 17 இயக்கத்தினர் "அசல் தமிழ் தேசியவாதிகள்" என்றால், மேலே குறிப்பிடப்பட்டவர்கள் "போலித் தமிழ் தேசியவாதிகளா?" இவர்களில் யார் உண்மையான தமிழ் தேசியவாதி?

**– கலையரசன்**

## வெள்ளி நற்சிந்தனை...



## சிவனை அறிவதே அறிவாகும்

உலகம், இடமகன்றது, பேரிருள் படர்ந்தது. பரிதி எழுந்தாலே இருள் நீங்கும் எல்லா உலகும் பரிதியைப போற்றும்: அதுவே ஒளியும், சூடும், மழைமுகிலும் தந்து உலகைக்காப்பது. அதுவே பல நிறங்களைத தருவது: அதன் கதிரொளியின்றி காணொளி இல்லை. வேறெந்த ஒளியும் அதன் ஒளிக்கு ஈடாகாது அதனாலே தான் வேதம் அதை அருட்சோதியாகவும் அறிவொளியாகவும் வணங்குகின்றது. "எழுகின்ற ஞாயிற்றைப் போன்று நின்ற நின தன்மை" என்று மாணிக்கவாசகர் விளக்குகினறார்.

சூரியன் புற இருளையே போக்கும்; ஆன்மாக்களின் அக இருளைப் போக்குவது பெரும் பெயர்க் கடவுளே, கடவுள் எல்லாமாய், அல்லதுமாய் இருநதபடி இருப்பது, தனது அருட்சக்தியால் ஐந்தொழில புரிவது சாதி மத பேதமற்று பெயர் வழிவங்களைத தாண்டி எல்லையற்று விளங்கும் பரம்பொருளே, பரமசிவமே பெரும் பெயர்க்கடவுளாவார் நமச்சிவாய, சிவமயம் என்னும் மந்திரங்களால் அன்பர் அவனைப் போற்றுவர் அவனைக் கண்டாலே மனக் கணணின் இருள்தீரும்; பொய் அகலும் மெய் விளங்கும்.

மானிடப்பிறவி அரிது; பெரிது இந்த ஊன் குடில், கவலை, பிணி, மூப்பு, சாக்காடுள்ள அருந்துயர் குரம்பை: இது வெறும் சடம் இதிலே ஓர் ஆன்மா உள்ளது அதுவே கருவி காரணங்கள் மூலம் காண்பது, கேட்பது, சுவைப்பது. உணர்வது அதுவும் பசு: சிற்றறிவுள்ளது: பாசத்தால் உடலிற்கட்டுப்பட்டது: அழுக்கேறியது, குருட்டுக் குழந்தை போன்றது குருடனுக்கு கோல் கொடுத்தது போல், இறைவன் அதற்க தனு, கரண, புவன போகங்களைத் தருகின்றான்: அனுபவத்தால் நன்மை, தீமைகளை உணர்த்துகின்றான்: பிறவிகளால் வினை தீர்க்கின்றான்: அன்பை ஊக்கி அருளைக் காட்டி, அறிவை வளர்த்து ஆண்டு கொள்கிறான்: ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு குருலிங்க சங்கமாகக் காட்சியளிக்கிறான்: பக்குவம் பார்த்துச் சிவபோகமளிக்கிறான்.

இத்தகைய பரமசிவனை நன்றியுடன் அன்பு செய்தலே ஆன்மாவிற்கு இன்ப வழியாகும் சிவனை அறிவதே அறிவாகும் அந்த அறிவைப் போதிப்பதற்கு அரும் பொக்கிஷமாகத் திகழ்வது சிவஞான பேதமாகும்.

சிவஞானம், ஞானங்களில் மிக உயர்ந்தது சிவஞானபேதமும் திட்பநுட்பமான பன்னிரெண்டு சூத்திரங்களில் சகல ஞானத்தையும் விளக்கும் உயர்ந்த நூலாகும். இதைச் சிவபெருமானே நந்திதேவருக்கு உபதேசித்தார். திருநந்திதேவர், அந்த ஞானத்தை உணர்ந்து, சனத்குமாரருக்கு உபதேசித்தார். அவரிடம் பல முனிவர்கள் சிவஞானம் பெற்றனர் அம்முனிவர் சத்தியஞான தரிசி என்னும் தன் மாணவருக்கு அருளினார்: இவர் பரஞ்சோதி முனிவருக்கு அருளினார்

பரஞ்சோதி முனிவர், பெண்ணையாறு சூழ்ந்த வெண்ணெய் நல்லூர்ச் சுவேதனருக்குச் சிவஞான போதத்தைத் தந்து **"மெய் கண்டார்"** என்னும் திருப்பெயரும் சூட்டினார். மெய்கண்டார், பொய்யிருள் ஒலித்து மெய்ப்பொருள் கண்டவர்; வலிய பிறவிப் பகையை வென்றவர் தாமுனிவர் அடிபணியும் அறிவுத்தலைவர்: அவரே சிவஞான போதத்தைக் தமிழுலகிற்குத் தந்தார். சிவஞான போதம், ரௌரவாகமத்தில், பாவ விமோசனப் படலத்தில் உள்ளது: அது சித்தமலம் ஒழித்துச் சிவமாக்கவல்லது.


சிவஞானபோதம் கற்று ஆன்ம ஈடேற்றதுக்கான வழியைக் காண்போம்

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

# தொழிற்றுறை முன்னேற்றத்திற்கு சிறப்பான திட்டமிடல் அவசியம்

# இணக்கப்பாட்டுடன் செயற்படுவதன் மூலமே தேசிய பிரச்சினைக்கு தீர்வினைக்காணமுடியும்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு



திட்டமிடல்கள் விரைவாகவும் சிறப்பாகவும் முன்னெடுக்கப்படும் போது தான் அவைசார்ந்த தொழிற்றுறைகளும் முன்னேற்றத்தை எட்ட முடியுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆனையிறவு உப்பளத்தின் தொழிற்றுறை நடவடிக்கைகளை மீளவும் ஆரம்பிப்பது தொடர்பில் துறைசார்ந்தோருடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக இயங்காமல் இருந்த ஆனையிறவு உப்பளத்தை மீளவும் இயக்குவதன் ஊடாக வேலையற்றிருக்கும் பலருக்கு வேலைவாய்ப்பினை வழங்க முடியும்.

அந்தவகையில், அங்கு முன்னெடுக்கப்பட்டு வரும் ஆரம்ப கட்ட வேலைகள் சரியான திட்டமிடல்களுடன் விரைவாகவும் சிறப்பாகவும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அவ்வாறு முன்னெடுக்கப்படும் பட்சத்திலேயே உப்பளத்தின் பல்வேறு தொழிற்றுறைகளும் உரியமுறையில் இயங்க முடியுமென்பதுடன் அதனூடாக முன்னேற்றத்தையும் காணமுடியுமென்றும் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் உப்பளத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத் திட்டங்களை கட்டம் கட்டமாக நடைமுறைப்படுத்துவது, வளாகத்தினதும் இயந்திரங்களினதும் பராமரிப்பு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன் குடிநீர், மின்சாரம் உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் அமைச்சர் அவதானம் செலுத்தியிருந்தார்.

ஆனையிறவு உப்பளம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலுக்கு அமைவாக அவரது அமைச்சினால் மீளவும் இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



(யாழ்ப்பாணம்)

அரசுடன் பேசாமலோ இணக்கப்பாடு இல்லாமலோ தேசிய பிரச்சினைக்கு ஒருபோதும் உரிய தீர்வினைக் காணமுடியாது என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற யாழ்.மாவட்ட முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்க பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இச்சங்கத்தினரின் குடும்பநலன்களைப் பாதுகாக்கும் வகையில் ஓய்வூதியத் திட்டத்தை அமுல்படுத்துவதுடன் மேலதிக வருவாயைப் பெறும் நோக்கில் உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்பதை உங்களுக்கு நம்பிக்கையுடன் அறியத்தருகின்றேன்.

அதுமட்டுமன்றி மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாத்து பலப்படுத்தும் வகையிலும் நாம் ஏற்கனவே பல்வேறு செயற்றிட்டங்களை அரசின் கொள்கைத் திட்டங்களுக்கு ஏற்ப முன்னெடுத்துள்ளோம்.

எதிர்காலத்திலும் அவ்வாறே முன்னெடுப்பதற்கு தயாராகவிருக்கின்றோம் என்றும் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறான அபிவிருத்தி செயற்றிட்டங்களை முன்னெடுப்பதற்கு மக்கள் பொருத்தமானவர்களை தெரிவு செய்யும் பட்சத்திலேயே இது சாத்தியமாகும்.

இதன்மூலம் மக்களது வாழ்வாதாரத்தை மட்டுமல்லாது அவர்கள் சார்ந்து வாழும் பகுதிகளையும் அபிவிருத்தியால் கட்டியெழுப்ப முடியும்.

அரசுடன் பேசாமலோ இணக்கப்பாடு இல்லாமலோ எமது நாட்டின் தேசிய பிரச்சினைக்கு ஒருபோதும் உரிய தீர்வினை காணமுடியாது என தெரிவித்தார்.

# கண்டாவளைப்பிரதேசத்தில் 2649 புதியவீடுகள் நிர்மாணம்

கிளிநொச்சி மாவட்டம் கண்டாவளைப் பிரதேச செயலக பிரிவில் 2,649 வீடுகள் புதிதாக நிர்மாணித்து கொடுக்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலக புள்ளி விபரத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

கண்டாவளைப் பிரதேச செயலகப் பிரிவில் 2010 பெப்ரவரி மாதம் தொடக்கம் மீள் குடியேறுவதற்கு அனுமதியளிக்கப்பட்டது. இதனையடுத்து இப்பிரதேச செயலக பிரிவிலுள்ள 16 கிராம அலுவலர் பிரிவுகளிலும் 7,731 குடும்பங்களைச் சேர்ந்த 24,692 பேர் மீள்குடி யேறினார்கள்.

இவர்களுக்கான வீட்டுத் திட்டங்கள் 2010ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டு படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வந்தன.

அந்தவகையில், நேப் திட்டத்தின் கீழ் 1,169 வீடுகளும், யு.என். கபிரேட் நிறுவனத்தினூடாக 370 வீடுகளும், இந்திய வீட்டுத் திட்டத்தில் 961 வீடுகளும், இந்திய அரசின் மாதிரி வீட்டுத் திட்டத்தில் 61 வீடுகளும், ஓ.எம்.ஐ. நிறுவனத்தினூடாக 50 வீடுகளும், சுவிஸ அபிவிருத்திக்கான நிறுவனத்தினூடாக 38 வீடுகளும் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

இவற்றைவிட, பகுதித் திருத்தும் வேலையில் யு.என். கபிரேட் நிறுவனத்தினூடாக 672 வீடுகளும், சுவிஸ் அபிவிருத்திக்கான நிறுவனத்தினூடாக 47 வீடுகளும் திருத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாக அந்தத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

## முன்பள்ளி மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்



வவுனியா வடக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன.

பட்டிக்குடியிருப்பு, துவரங்குளம், கற்குளம், நெடுங்கேணி வடக்கு ஆகிய கிராமங்களில் உள்ள முன்பள்ளி மாணவர்களுக்கே இந்த உபகரணங்களை வவுனியா வடக்கு பிரதேச கல்வி கலாசார அபிவிருத்தி நம்பிக்கை நிதியம் வழங்கியிருந்தது.

இதன்போது வவுனியா வடக்கு பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகஸ்தர்கள் கலந்துகொண்டு உபகரணங்களை வழங்கியிருந்தனர்.

## கண்டாவளையில் விழிப்புணர்வு கால்நடைகளுக்குநோய் தொற்றுஇல்லை

(கண்டாவளை)

கண்டாவளை பிரதேசத்திலுள்ள கால்நடைகளுக்கு ஏற்பட்டுவந்த நோய்கள் முற்கூட்டிய நடவடிக்கைகளினால் கட்டுப்பாட்டினுள் கொண்டுவரப்பட்டதாக கண்டாவளை பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

இப்பிரதேசத்திலுள்ள சில கால்நடைகளுக்கு கால்வாய் நோய் உள்ளிட்ட நோய்கள் ஏற்பட்டிருந்தன. எனினும், வைத்திய அதிகாரி பணிமனை யா[illegible] மேற்கொள்ளப்பட்ட முற்கூட்டிய விழிப்புணர்வு நடவடிக்கை மற்றும் நடமாடும் சிகிச்சை முகாம்களின் மூலம் நோய்கள் கட்டுப்பாட்டினுள் கொண்டு வரப்பட்டதுடன், ஏனைய கால்நடைகளுக்கும் பரவாது தடுக்கப்பட்டது.

இதனால், கால்வாய் நோய் உள்ளிட்ட நோய்கள் கால்நடைகளுக்கு தொற்றாத பிரதேசமாக கண்டாவளை இருப்பதாகவும் அவர் கூறினார்.

## கொடிகாமம் வேவில் வீதியினை புனரமைத்து தருமாறு கோரிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட கொடிகாமம் வேவில் சுடலை வீதியினை புனரமைத்து தருமாறு அப்பகுதி பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வேவில் மயானத்தினை கொடிகாமம் வடக்கு, கொடிகாமம் மத்தி, தாவளை இயற்றலை, குடமியன் போன்ற நான்கு கிராமங்களைச் சேர்ந்து 700இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயன்படுத்தி வருகின்றன.

இம் மயானத்திற்கு செல்வதற்கு வேவில் வீதியே மிகவும் முக்கியமான வீதியாக உள்ளது. இவ்வீதியில் மழை காலங்களில் குளம்போல நீர்தேங்கி நிற்பதாக இப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே இப்பகுதி மக்களின் தேவை கருதி வேவில் வீதியினை திருத்தி தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(14)

## கொடிகாமம் ஆதாரவைத்தியசாலைக்கு வெளிநோயாளர் பிரிவுஅமைப்பு

கொடிகாமம் பிரதேச வைத்தியசாலைக்கு வெளிநோயாளர் பிரிவு புதிதாக பலமில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருகின்றது. தென்மராட்சி கிழக்கு பகுதியை சேர்ந்த 20 கிராம சேவையாளர் பிரிவுகளை சேர்ந்த 10,000 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இவ் வைத்தியசாலையைப் பயன்படுத்துகின்றனர்.


இதுவரை காலமும் வெளிநோயாளர் பிரிவு வசதிகளற்று சிறிய கட்டடத் தொகுதியிலே நடைபெற்று வருகின்றது. இவ் புதிய கட்டடத்தொகுதி அமைக்கப்பட்டால் நோயாளர்கள் பெரிதும் நன்மையடைவார்கள் என மக்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

(14)

## முன்னறிவித்தல் பெறவும்

சாவகச்சேரி பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் மதில்கள், கட்டடங்கள் கட்டுவதாயின் பிரதேசசபையின் முன்னறிவித்தல் பெற்றே கட்டடங்களை அமைக்குமாறும் அனுமதி பெறப்படாமல் அமைக்கப்படும் கட்டடங்கள் மதில்கள் அமைப்போர் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(150)

27)  உருவின் நிறந்திட்டப்பட்ட பகுதியை தசம எண்ணாக எழுதுக.
-----------------------------------

28) பயணத்தை ஆரம்பித்த போது பேருந்து ஒன்றின் மானியில் பின்வருமாறு பதியப்பட்டு இருந்தன.

| 0 | 3 | 3 | 9 | 9 | 0 | km |
|---|---|---|---|---|---|---|

வாகனம் மேலும் 11km சென்ற பின்னர் மானியில் பதிவாகும் இலக்கங்களை வெற்றுக் கூடுகளினுள்ளே எழுதுக.

| | | | | | | km |
|---|---|---|---|---|---|---|

29) கொழும்பிலிருந்து கண்டிக்கான தூரம் 110 கிலோமீற்றர் ஆகும். பேருந்தொன்று 10 கிலோமீற்றர் செல்வதற்கு 3 லீற்றர் டீசல் எரிகின்றது. அப்படியாயின் பேருந்து கொழும்பிலிருந்து கண்டிக்குச் சென்று மீண்டும் கொழும்புக்குத் திரும்புவதற்கு எத்தனை லீற்றர் டீசல் தேவைப்படும்?
-----------------------------------

30) 15 ரூபாவுக்கு 6 ரம்புட்டான்கள் வாங்க முடியும். 15 ரம்புட்டான்களை வாங்க எவ்வளவு பணம் தேவை? -----------------------------------

31) ஐம்பத்தொன்பது என்பதை உரோம இலக்கத்தில் எழுதுக.
-----------------------------------

32) அண்ணனின் தற்போதைய வயது அவனது தம்பியின் தற்போதைய வயதின் 3 மடங்காகும். 6 வருடங்களுக்கு முன் அண்ணனின் வயது 18 ஆயின் தம்பியின் தற்போதைய வயது என்ன? -----------------------------------

33) செவ்வகம் ஒன்றின் நீளம், அகலத்தின் மூன்று மடங்காகும். அதன் நீளம் 18cm ஆகும். அதன் சுற்றளவு யாது? -----------------------------------

34) $27 \div 3 \times 3 \times 2 \times 0 =$ -----------------------------------

35) வகுப்பறை ஒன்றிலுள்ள கதிரைகளில் எண்ணிக்கை 45 ஆகும். அங்குள்ள மேசைகளின் எண்ணிக்கையானது அங்குள்ள கதிரைகளின் எண்ணிக்கையை பார்க்கிலும் 5 குறைவாகும். இவ்வாறு மூன்று வகுப்பறைகளில் காணப்பட்டன எனின் அம்மூன்று வகுப்பறைகளிலும் உள்ள கதிரைகளினதும் மேசைகளினதும் மொத்த எண்ணிக்கை யாது? -----------------------------------

**இவ் வினாத்தாளுக்குரிய விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும்**



## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2014

பகுதி - I | 1 மணி 15 நிமி

# கல்வி முரசு

01. மாணவன் ஒருவன் 10 நிமிடங்களில் 4km தூரம் பயணஞ் செய்து முதலாம் இடத்தைப் பிடித்தான் அவன் 1 மணித்தியாலம் 15 நிமிடங்களில் செல்லக்கூடிய தூரம் என்ன? -----------------------------------

02. மாலா ஒரு நாளைக்கு 4 மணித்தியாலங்களுக்கு ஒரு தடவை இரண்டு தேக்கரண்டிகள் வீதம் மருந்து குடிப்பாள். ஒரு வாரத்தில் அவள் மருந்து எத்தனை தேக்கரண்டி. -----------------------------------

03. கழிக்குக. $\frac{6}{8} - \frac{1}{2} =$ -----------------------------------

04. ஒருபோத்தலில் நிரப்பப்படத்தக்க சோடாவின் கனவளவு 125 மில்லிலீற்றர் ஆகும். அத்தகைய 9 போத்தல்களைக் கொண்டு முற்றாக நிரப்பப்பட்ட பாத்திரத்தின் கனவளவு யாது? -----------------------------------

05. 300m நீளமான கம்பி ஒன் றில் 250cm இடைவெளிவிட்டு அலங்கார மின்விளக்குகள் தொங்க விடப்பட்டுள்ளன. தொங்கவிடப்பட்ட மின்விளக்கு எத்தனை? -----------------------------------

06. அண்ணனிடம் உள்ள பணம் தம்பியிடம் உள்ள பணத்திலும் ரூபா 15 குறைவாகும். இருவரிடமும் உள்ள பணத்தின் மொத்தத்தொகை ரூபா 95 ஆகும். அண்ணனிடம் உள்ள பணம் எவ்வளவு? -----------------------------------

07. மாலதியிடம் உள்ள பணத்தின் அரைப்பங்கு ஆகிய 450/= விமலாவிற்கு கொடுத்த போது அது அனுலாவிடம் உள்ள பணத்தைவிட 75/= கூடியது மூவரிடமும் உள்ள மொத்தப்பணம் எவ்வளவு? -----------------------------------

08. இன்னும் மூன்று வருடங்களில் புனிதாவின் வயது வனிதாவின் வயதின் மூன்று மடங்காகும் இப்பொழுது புனிதாவின் வய்து 15 எனின் வனதாவின் வயது யாது? -----------------------------------

09. ரூபா 15க்கு 20 கொய்யாப்பழங்கள் வாங்கலாம். 35 கொய்யாப்பழங்கள் வாங்குவதற்கு எவ்வளவு பணம் வேண்டும். -----------------------------------

10. செவ்வகத்தின் நீளம் அதன் அகலத்தைப் போன்று மும்மடங்காகும் செவ்வகத்தின்சுற்றளவுக்கு சமமான சதுரம் ஒன்று உள்ளது. செவ்வகத்தின் நீளம் 12cm எனின் சதுரத்தின் ஒரு பக்க அளவு என்ன? -----------------------------------

11. ஒரு பூனை இருக்கும் இடத்தில் இருந்து ஒரு மீற்றர் தூரத்தில் ஒரு எலி இருக்கிறது. பூனை ஒரு செக்கனில் 50cm ஓடும் எலி ஒரு செக்கனில் 15cm கொண்ட மூன்று பாய்ச்சல் பாயும், பூனை எலியைப் பிடிக்க எவ்வளவு நேரம் எடுக்கும். -----------------------------------

12) ஒரு உடைந்த கடிகாரம் 30 நிமிடங்களுக்கு ஒரு முறை மணிஅடிக்கும் முதலாவது தடவையாக மு.ப. 7.30க்கு மணி அடித்தது. அது 9ஆவதுதடவை மணி அடிக்கும் போது நேரம் யாது? ------------------------------

13) வீட்டில் இருந்து 1km தூரத்தில் உள்ள பாடசாலைக்குப் போய்வர 20 நிமிடம் எடுக்கும் எனின் 4km தூரத்தில் உள்ள புகையிரத நிலையத்துக்கு போவதற்கு எவ்வளவு நேரம் எடுக்கும்? ------------------------------

14) கடை ஒன்றில் இருந்த நல்ல முட்டைகளின் எண்ணிக்கை 113 ஆகும். அங்கிருந்த தேங்காய்களின் எண்ணிக்கையானது, முட்டைகளின் எண்ணிக்கையைப் பார்க்கிலும் 105 அதிகமாகும். அங்கிருந்த முட்டைகளில் பழுதடைந்த முட்டைகளின் எண்ணிக்கையானது, தேங்காய்களின் எண்ணிக்கையை பார்க்கிலும் 56 குறைவாகும். கடையில் உள்ள நல்ல முட்டைகளினதும் தேங்காய்களினதும் எண்ணிக்கை யாது? ------------------------------

15) 9m நீளமுள்ள ஒரு நாடாவில் இருந்து 30cm நீளமான 9 துண்டுகள் வெட்டப்பட்டால் எஞ்சியுள்ள நாடாவின் நீளம் யாது? ----------------------


16) பயணத்தை ஆரம்பித்த போது மோட்டார் வண்டி ஒன்றின் மானியில் பின்வருமாறு பதியப்பட்டிருந்தன.

| 0 | 1 | 2 | 8 | 9 | 0 | km |
|---|---|---|---|---|---|---|

மோட்டார் வண்டி மேலும் 111 கிலோமீற்றர் சென்ற பின்னர் மானியில் பதிவாகும் இலக்கங்களை வெற்றுக் கூடுகளினுள்ளே எழுதுக.


| | | | | | | km |
|---|---|---|---|---|---|---|

17) தரப்பட்டுள்ள அளவீடுகளுக்கு எற்ப இவ்வுருவின் சுற்றளவு யாது?




( ------------------------)

18)



i) இத்திண்மத்தின் பெயர் யாது? -------------
ii) இதன் விளிம்புகளின் எண்ணிக்கை யாது? ------

19) 90099 என்பதை எழுத்தில் எழுதுக .--------------------------

20)

| | |
|---|---|
| 102 | 409 |
| 106 | 535 |


காட்டப்பட்டுள்ள இலக்கங்களைப் பயன்படுத்தி கூட்டுத்தொகை 515 ஐத் தரும் இரண்டு எண்களையும் எழுதுக. --------------



21. ஒரு பூரணமற்ற விலைச்சிட்டை கீழே காணப்படுகின்றது. இதில் உள்ள நான்கு வெற்றிடங்களையும் நிரப்புக.


| பண்டம் | அளவு (kg) | 1kg இன் விலை | | பணம் | |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | ரூபா | சதம் |
| சீனி | $2\frac{1}{2}$ kg | 90 | 00 | 225 | 00 |
| i தேயிலை | 750g | -------- | ------- | 225 | 00 |
| ii பருப்பு | -------- | 72 | 00 | 72 | 00 |
| iii கடலை | 100g | -------- | -------- | 16 | 00 |
| | iv மொத்தம் | | | -------- | -------- |

22. அருகில் உள்ள முப்பரிமான உருவின் பெயர் யாது? --------------------




i. அதன் விளிம்புகள் எத்தனை? --------------------
ii. அதன் உச்சிகள் எத்தனை? --------------------
iii. அதன் முகங்கள் எத்தனை? --------------------

23. அருகில் உள்ள சாதாரன A கடிகாரமானது. 1.15 நிமிடங்கள் குறைவாக செல்கின்றது. எனின், தற்போதைய உண்மை நேரம் யாது என B என்ற கடிகார முகத்தில் குறித்துக் காட்டுக.




24. அருகில் உள்ள உருவின் சுற்றளவைக் காண்க.
--------------------------cm




25. நிறுவனம் ஒன்றிற்கு மசகு எண்ணெய் விநியோகம் மு.ப. 11.45 இற்கு ஆரம்பமானது. சுமார் 35 நிமிடங்கள் அவ்விநியோகத்திற்கு செலவிடப்பட்டதெனின், மசகு எண்ணெய் விநியோகம் முடிவடைந்த நேரத்தை காண்க.

26. ஒவ்வொன்றும் 850ml கொள்ளவுள்ள 10 போத்தல்களில் உள்ள பானம் வேறொரு பாத்திரத்தில் இடப்பட்டது. பாத்திரத்தில் உள்ள பானத்தின் மொத்த கனவளவு லீற்றரிலும் மில்லிலீற்றரிலும் யாது? -----------------------

# மாணவர்கள் வாய்ப்புக்களை சரியாகப் பயன்படுத்த வேண்டும்

## சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு



முப்பது வருடங்களாக எங்கள் பிள்ளைகள் நவீன வசதி வாய்ப்புக்களுடன் கூடிய கல்வியை பெறாதவர்களாகவே இருந்துள்ளனர். ஆனால் அந்த வாய்ப்பு தற்போது ஏற்படுத்திக்கொடுக்கப் பட்டுள்ளது.

அதன்மூலம் எங்கள் பிரதேச பிள்ளைகள் மேலும் பல வசதி வாய்ப்புக்களைப் பெற்று தங்கள் கல்வியில் முன்னேற்றமடைய வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலக பிரிவில் பிரமந்தனாறு பாடசாலையில் கொரிய அரசின் நிதி ஒதுக்கீட்டில் கொய்கா திட்டத்தின் கீழ் 45 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடத் தொகுதிகளை திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் பிரமந்தனாறு பாடசாலைக்கு ஆசிரியர் விடுதி திறப்பு விழா நிகழ்வுக்கு வருகை தந்த போது பாடசாலையில் அதிபராக இருந்த விக்கினராஜா பாடசாலைகளின் தேவைகள் தொடர்பில் நீண்ட பட்டியல் ஒன்றினை தந்திருந்தார். அப்போது நாம் இந்த தேவைகள் அனைத்தும் படிப் படியாக தீர்த்து வைக்கப்படும் என அவரிடம் தெரிவித்தோம் என்றார்.

அதனடிப்படையில் வடக்கு மாகாணத்திற்கு 21 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டிருந்தன. அதில் பிரமந்தனாறு பாடசாலையும் ஒன்று. இதன்மூலம் இந்தப் பாடசாலைக்கு பிரமாண்டமான வகுப்பறைக் கட்டடத் தொகுதி கிடைத்திருக்கிறது.

இது இந்தப் பாடசாலை மாணவர்களின் வகுப்பறை கட்டடத் தேவையினைப் பெருமளவுக்கு பூர்த்தி செய்துள்ளது.

எனவே கடந்த சில ஆண்டுகளுக்கு முன் இருந்ததனைவிட பிரமந்தனாறு பாடசாலையில் பல முன்னேற்றங்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த மாற்றம் இந்தப் பிரதேச பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியிலும் மாற்றத்தை ஏற்படுத்தும்.

எனவே இந்த நல்ல வாய்ப்புக்களை எமது பிள்ளைகளுக்கு ஏற்படுத்திக்கொடுத்த கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவுக்கும், கொரிய அரசுக்கும் எங்கள் மக்கள் சார்பாகவும் இந்த பிரதேச கல்விச் சமூகம் சார்பாகவும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன் எனத் தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன, கொரிய தூதுவர் லூங் வூன் சங், அமைச்சின் மேலதிக செயலாளர் சத்தியசீலன் மற்றும் வலயக்கல்விப் பணிப்பாளர் முருகவேல் ஏனைய பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.


பெயர் : ஐ.லக்ஷித்
முகவரி : இல. -11, ஆனந்தநகர், கிளிநொச்சி.
அகவை 1 இல்
பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்



பெயர் : ச.மேனகன்
முகவரி : 5 ஆம் வட்டாரம், நயினாதீவு.
அகவை 3 இல்
பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்



பெயர் : தி.றதுசன்
முகவரி : தாவடி வடக்கு, கொக்குவில்.
அகவை 8 இல்
பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்



வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..............................
முகவரி :- ..............................
பிறந்த ஆண்டு :- ..............................
கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................
பெற்றோர் கையொப்பம்


# அலங்கார உற்சவம்

கைதடி மேற்கு அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் திருவிழாக்கள் நடைபெறவுள்ளன.

இவ் உற்சவத்தில் தினமும் காலை அபிஷேகம் விசேட பூசை என்பனவும் மாலை 6.30 மணிக்கு சாயரட்சைப்பூசை, வசந்தமண்டபபூசை என்பன இடம்பெற்று சுவாமி வெளிவீதி எழுந்தருளி அருள்பாலிக்கும் காட்சியும் இடம்பெறவுள்ளது. (51)

# கல்லறைகள் அமைப்பு

வரணி வடக்கு முள்ளி மயானத்தில் வரணிப் பிரதேச மக்கள் தற்போது இறந்தவர்களின் ஞாபகார்த்தமாக நினைவுத் தூபிகள் அமைத்து வருகின்றனர்.

மேலும் தமது இறந்த உறவுகள் தினத்தில் மயானத்திற்கு சென்று மலர்தூவி அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

இம் மயானத்தில் முதலாவது கல்லறையை சிமிழ் கண்ணகை புரத்தைச் சேர்ந்த அமரரான ச.சர்மிளாவிற்கு அவரது குடும்பத்தினர் அமைத்திருந்தனர்.

அதன்பின் படிப்படியாக தற்போது மூன்று கல்லறைகள் அமைந்துள்ளன. இப்படிப்பட்ட மயானத்தை புனித இடமாக வைத திருக்க வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உண்டென சமூக நலன்விரும்பிகள் தெரிவிக்கின்றனர். (150)

# குளவித் தாக்கத்தால் அசௌகரியம்

(மானிப்பாய்)

மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கு முன்பாக உள்ள ஆலமரத்தில் இருந்த 4 கருங்குளவிக் கூடுகளும் நேற்று முன்தினம் இரவு அகற்றப்பட்டன.

குளவிக்கூடுகள் அகற்றப்பட்டமை நன்மையாக இருந்தபோதிலும் கருங்குளவிகள் மரத்தில் மொய்த்திருந்த நிலையில் நேற்றுக் காலை அவ்வீதியூடாக சென்றவர்கள் அக் குளவிகளால் பலத்த அசௌகரியத்துக்கு உள்ளானதாகவும் சிலருக்கு குளவிகள் கொட்டியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (66)

# விவரண சித்திரம் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை இந்துக்குருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் ஆலயந்தொழுவது சாலவும் நன்று என்னும் விபரணச் சித்திரம் வெளியீட்டுவிழா இன்று நல்லை ஆதீன மண்டபத்தில் முற்பகல் 11.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

# முரசின் இன்றைய பலன்



(01.08.2014 வெள்ளிக்கிழமை)

ஜய வருஷம் ஆடி மாதம் 16 ஆம் திகதி.
பஞ்சமி / அமிர்த சித்தம். நல்லூர்க் கந்த சுவாமி விரதம்.
அத்த நட்சத்திரம் பி.இ. 05.42 வரை. பின் சித்திரை.
இராகு காலம 10.33 - 12.03 வரை. சுபநேரம 06.03 - 07.33 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | கறைத்துறை மற்றும் விளையாட்டில் பணமும், கௌரவமும் பெற்று மகிழ்தல், கடன் பிணைக்கு கையொப்பமிட்ட அரச ஊழியர்கள் மனோநிலை பாதிக்கப்படல். |
| ரிஷபம் | ஆசிரிய மாணவ உறவு மேம்பாடடைவதினால் கற்றல் கற்பித்தல் பணி சிறக்கும், வட்டிக்கு எடுத்த பணத்தை முதலிட்டு தொடங்கிய வியாபாரம் பாரிய நஷ்டத்தை தந்த பழியினால் கவலையில் மூழ்குதல். |
| மிதுனம் | மிருகமொன்று குறுக்கிட்டவேளை சம்யோசித புத்தியினால் விபத்தினின்றும் தப்புதல், பாரச்சுமையோடு பள்ளிசென்றுவரும் மாணவர்கள் வலியினால் அவதிப்படல். |
| கடகம் | தரகுத்தொழிலாளர் மற்றும் புறோக்கர்கள் வாய்ச்சம் பிரதாயத்தினால் காரியத்தைச் சாதித்து விடுவர், கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான பிணக்குகள் சமரச முடிவின்றி இழுபடல். |
| சிம்மம் | பழைய பொருட்களை வாங்க வந்தவரின் செயலில் சந்தேகம் ஏற்பட்டதால் துரத்திவிடல், குடும்பத்தில் நல்லுறவு மேம்படுதலும் பிணக்குகள் சுமுகமாக தீர்வடைதலும் நிம்மதியை ஏற்படுத்தும். |
| கன்னி | அரசியல்வாதிகள் அவதானத்துடன் செயற்படுவதினால் மதிப்பும் பாராட்டும் ஏற்படும், நீண்டகாலமாக தொடர்வின்றி இருந்தவர் பற்றிய தகவல்கிட்டியதனால் மகிழ்ச்சி ஏற்படல். |
| துலாம் | நிர்வாகத்தில் நிலவும் சீர்கேடுகளைக்கேட்க முயன்றதால் ரகளை ஏற்படல், வங்கியில் பெற்ற கடனைக் கட்ட முடியாது தலைமறைவாகிவிடுதல். |
| விருச்சிகம் | ஏழரைச்சனி நடைபெறுவதினால் பொறுமை, சகிப்புத்தன்மையுடன் காரிய மாற்றமுறபடல், இராகுகேது நற்பயன் செய்யும் இடத்தில் நின்றதால் சொத்துச் சம்பந்தமான பிரச்சினை நல்ல முடிவினைத்தருதல். |
| தனுசு | வெளிநாட்டு மக்களுடன் முகம்பார்த்துக் கதைப்பதினால் நெஞ்சம் அமைதியில் ஆழ்தல், அரச ஊழியர்களுக்கு பதவி உயர்வுடன் சம்பள ஏற்றமும் உண்டாகி மகிழ்வினைத்தரும். |
| மகரம் | செய்நன்றி மறந்தவருடன் உறவினைக்கொள்ளாது கைகழுவி விடுதல், செய்தொழிலில் தேங்கிய பொருட்களை விற்பனை செய்ய விளம்பரப்படுத்துதல். |
| கும்பம் | பாலியல் துன்புறுத்தல் ஏற்படலாம் என்ற பயத்தில் தனித்துச் செல்வதைக் கைவிட்டு விடல், பேச்சுவார்த்தைகள் சுமுக நிலையை அடைந்ததினால் பிரச்சினை விலகிவிடல். |
| மீனம் | ஏற்பட்ட மரணத்தின் மர்மம் தெரியாது ஆறாத்துயரில் மூழ்குதல், அட்டமத்துச்சனி இருப்பதினால் பிறருக்கு கடன் கொடுக்க பின்னடைத்தல். |

# இஸ்ரேலின் குண்டு மழையால் தரைமட்டமாகிறது காஸா

## இதுவரை 1320 பேர் பலி



கடந்த 24 நாட்களாக காஸா பகுதி மீது இஸ்ரேல் நடாத்தி வரும தாக்குதல்களில் பலியான பலஸ்தீனியர்களின் எண்ணிக்கை 1320 ஆக உயர்ந்துள்ளது.

காஸா பள்ளத்தாக்கு மீது இஸ்ரேல் நடாத்தி வரும் மும்முனைத் தாக்குதல்களில் நேற்று முன்தினம் மட்டும் 90 பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர். 260இற்கும் அதிகமான மக்கள் படுகாயமடைந்தனர்.

வடக்கு காஸாவின் ஜபாலியா பகுதியில் ஐ.நா.சபை நடாத்தி வரும் பெண்கள் ஆரம்ப பாடசாலையில் சுமார் மூவாயிரம் பலஸ்தீனியர்கள் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர்


இந்தப்பாடசாலை மீது இஸ்ரேல் இராணுவத்தின் பீரங்கி தாங்கிய வாகனங்கள் நடத்திய ஈவிரக்கமற்ற தாக்குதலில் குழந்தைகள் உட்பட 20 பேர் உயிரிழந்ததுடன், 90இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்தனர்.

இந்த தாக்குதல்களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையும் சேர்த்து பலியானவர்கள் மற்றும் காயமடைந்த சுமார் 7 ஆயிரத்துக்கும் அதிகமான மக்களில் அப்பாவி குழந்தைகள் மற்றும் பெண்களின் எண்ணிக்கை பன்மடங்கு அதிகம் என மனித உரிமை ஆர்வலர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதேவேளை முன்னறிவிப்பு இன்றி பாடசாலை மீது நடாத்தப்பட்ட கொடூர தாக்குதலுக்கு ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கி மூன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இந்த மோதலுக்கான அடிப்படைக்காரணம் ஏற்கனவே கண்டறியப்பட்டுள்ள நிலையில், பேச்சு வார்த்தை மூலம் அவற்றுக்கு தீர்வு காண இரு தரப்பினரும் முன்வர வேண்டும் என பான் கி மூன் தெரிவித்துள்ளார்.

# குடியேற்ற விதிகளை தளர்த்தியது சீனா



(பீஜிங்)

சீன நகரங்களில் குடியேற பொதுமக்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை, சற்றே தளர்த்த, சீன அரசு முன்வந்துள்ளது. நம் நாட்டில், நாம் இஷ்டப்பட்ட ஊரகளில் குடியேறுவது போல், சீனாவில் செய்ய முடியாது. ஒரு நகரம் என்றால் எவ்வளவு பேர் வசிக்கலாம், யார் யார் வசிக்கலாம் என்ற வரையறை உண்டு. அதை மீறி, அங்கே எதுவும் செய்ய முடியாது.

இதனால், பெருநகரங்களில் வேலை பார்ப்பவர்களால், தங்கள் குடும்பத்தினருடன், சேர்ந்து இருக்க முடிவதில்லை. இதனால், தொழிலாளர்களின் உற்பத்தித்திறன் குறைவதாகவும், போக்குவரத்திற்கு அதிக செலவாவதாகவும் கூறப்படுகிறது. அதையடுத்து, இந்த முறையில் மாற்றம் கொண்டு வர, சீன அரசு முடிவு செய்துள்ளது. முக்கிய நகரங்களான பீஜிங், ஹாங்காய் தவிர்த்து பிற நகரங்களில், அதிகபட்ச மக்கள் தொகை அளவை, சற்றே உயர்த்திக் கொள்ள முன்வந்துள்ளது. இதனால், கூடுதலாக சில இல்ட்சம் பேர், அந்த ஊர்களில் குடியேற வாய்ப்பு கிடைததுள்ளது.

# ரஷ்யா மீது பொருளாதார தடை அமெரிக்காவின் அதிரடி நடவடிக்கை


(வொஷிங்டன்)

உக்ரைன் நாட்டின் பிரிவினைவாதிகளுக்கு ஆதரவாக தொடர்ந்து செயற்படுவதாக கூறி, ரஷ்யா மீது அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய யூனியன் நாடுகள், நேற்று முன்தினம் மீணடும், கடினமான பொருளாதார தடைகளை விதித்தன. இதனால், இராணுவம், எரிசக்தி, நிதி போன்ற துறைகளில், அந்நாடுகளுடன், ரஷ்யா இணைந்து செயல்பட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் ரஷ்யா மீது கூடுதல் மற்றும் முக்கிய பொருளாதார தடைகள் விதிக்க முன்வந்த, ரஷ்யாவின் போட்டி நாடான அமெரிக்காவின் அதிபர், பராக் ஒபாமா, நேற்று முன்தினம், தன் நட்பு நாடுகள் மற்றும் 28 நாடுகளைக் கொண்ட, ஐரோப்பிய யூனியனின் முக்கிய நாடுகளின் தலைவர்களுடன் ஆலோசனை நடாத்தினார்.


வொஷிங்டன் நகரில் இருந்தபடி, பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி மற்றும் இத்தாலி ஆகியநாடுகளின் தலைவர்களுடன், "வீடியோ கான்பரன்சிங்" முறை மூலம் ஆலோசனை நடாத்திய அதிபர் ஒபாமா, நேற்றுமுன்தினம் "ரஷ்யா மீது கடுமையான பொருளாதார தடைகள் விதிக்கப்படுகிறது" என அறிவித்தார்.

இந்நிலையில் தங்கள் நாடு மீது பொருளாதார தடை விதித்த அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய யூனியன் நாடுகளின் செயலால் கொஞ்சம் கூட அலட்டிக் கொள்ளாத ரஷ்யா, அந்நாடுகளுக்கு பதிலடி கொடுக்க



தயாராகி விட்டது.தடையை முன் கூட்டியே அறிந்த ரஷ்யா, கடந்த வாரமே அதற்கான நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளது.

# புனே அருகே பாரிய நிலச்சரிவு இதுவரை 28பேர் பலியாகியுள்ளனர்




மகாராஷ்டிர மாநிலம் புனே அருகே நேற்றுமுன்தினம் புதன்கிழமை அதிகாலை நேரிட்ட கடுமையான நிலச்சரிவில் சிக்கி 28 பேர் உயிரிழந்தனர். மேலும், 200இற்கும் மேற்பட்டோர் இடிபாடுகளில் சிக்கியுள்ளனர். இதனையடுத்து, சம்பவ இடத்தில் மீட்புப் படையினர் முகாமிட்டு, அவர்களை மீட்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

புனே மாவட்டம், அம்பேகான் வட்டத்தில் உள்ளது மாலின் கிராமம். அந்தக் கிராமம், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து பெய்துவரும் பலத்த மழை காரணமாக நேற்று முன்தினம் புதன்கிழமை அதிகாலை 5 மணியளவில் திடீரென கடுமையான நிலச்சரிவு ஏற்பட்டது.

மாலின் கிராமத்திலுள்ள பிரம்மாண்ட மலையின் ஒரு பகுதி முழுவதும் பெயர்ந்தது. இதில் மலையில் இருந்து கற்பாறைகள், சகதி போன்றவை உருண்டோடி, மலையையொட்டி இருந்த வீடுகள் மீது விழுந்து மூடின. இதில், அங்கிருந்த 70 வீடுகளில், 46 வீடுகள் புதையுண்டன. எனினும் இந்த நிலச்சரிவில் பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் பழங்குடியின மக்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஸ்டாலின் மீது அவதூறு வழக்கு

(சென்னை)



தி.மு.க., பொருளாளர் ஸ்டாலின் மீது, சென்னை முதன்மை செஷன்ஸ் நீதிமன்றத்தில், அவதூறு வழக்குத் தொடரப்பட்டுள்ளது. கடந்த, 22ஆம் திகதி, சட்டசபையில் இருந்து, தி.மு.க., - எம்.எல்.ஏ.,க்கள் வெளியேற்றப்பட்டனர். சபைக்கு வெளியில், நிருபர்களுக்கு, ஸ்டாலின் பேட்டியளித்தார். அதில், "நாங்கள் சபைக்கு வருவது, அமைச்சர்களுக்கும், முதல்வருக்கும், சபாநாயகருக்கும் பிடிக்கவில்லை. திட்டமிட்டே, எங்களை வெளியேற்றுகின்றனர்.

சபாநாயகர் சர்வாதிகாரமாகச் செயற்படுகிறார்" என, ஸ்டாலின் கூறியதாக, செய்தி வெளியானது. இதையடுத்து, ஸ்டாலினுக்கு எதிராக, சென்னை முதன்மை செஷன்ஸ் நீதிமன்றத்தில், முதல்வர் சார்பில், அவதூறு வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

அதில், "ஸ்டாலின் கூறியது, முதல்வரின் நற்பெயருக்கும், புகழுக்கும் களங்கம் விளைவிப்பதாக உள்ளது. எனவே, சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்" என, கூறப்பட்டுள்ளது.

உலகச் செய்திகள்

# 2040இல் உலகம் முழுவதும் குடிநீருக்கு தட்டுப்பாடு ஏற்படும்

## எச்சரிக்கிறது ஆய்வு

இப்போது உள்ள எரிசக்தி மற்றும் மின்சார உற்பத்தி முறையை மாற்றி அமைக்காவிட்டால் 2040ஆம் ஆண்டில் உலகம் முழுவதும் குடிநீர் பற்றாக்குறை ஏற்படும் என ஓர் ஆய்வு முடிவு தெரிவிக்கிறது. டென்மார்க் நாட்டின் ஆர்ஹஸ் பல்கலைக்கழகம், அமெரிக்காவின் வெர்மண்ட் சட்ட பள்ளி மற்றும் சி.என்.ஏ. (கடற்படை பகுப்பாய்வு மையம்) கார்ப்பரேஷன் ஆகியவற்றின் ஆராய்ச்சியாளர்கள் ஓர் ஆய்வை மேற்கொண்டனர்.

இவர்கள் பிரான்ஸ், அமெரிக்கா, சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் 4 வெவ்வேறு வகையான பகுப்பாய்வுகளை மேற்கொண்டனர். இந்த ஆய்வின் முடிவு அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது. இதுகுறித்து ஆர்ஹஸ் பல்கலைக்கழக பேராசிரியர் பெஞ்சமின் சொவகூல் கூறியதாவது:


குடிநீர் மற்றும் எரிசக்தி தேவைக்கு நடுவே கடுமையான போட்டி நிலவுகிறது. பெரும்பாலான நாடுகளில் மின் உற்பத்திக்கு மிக முக்கிய மூலப்பொருளாக தண்ணீர் பயன்படுத்தப்படுகிறது. மின் உற்பத்தி நிலையங்கள் செயற்படுவதற்கு கூலர்கள் தேவைப்படுவதே இதற்கு முக்கிய காரணம்.

பருவநிலை மாற்றம் காரணமாக தண்ணீர் வளம் குறைந்து வரும் நிலையில் மின் உற்பத்தித் துறையினர் பெரும் பகுதி தண்ணீரை எடுத்துக்கொண்டால், 2020இல் உலகில் உள்ள 30 முதல் 40 சதவீத நாடுகளில் சுத்தமாக குடிநீர் கிடைக்காது. இந்த நிலை நீடித்தால் வரும் 2040ஆம் ஆண்டு அளவில் உலகம் முழுவதும் குடிநீர் பற்றாக்குறைஏற்படும். என ஆய்வு எச்சரித்துள்ளது.

# விண்வெளி ஆய்வில் 33 நாடுகள் பங்கேற்பு

(புதுடில்லி)

இந்தியாவின் விண்வெளி ஆராய்ச்சி மற்றும் செயற்கை கோள் ஏவுதல் போன்ற பல்வேறு பணிகளில் உலகின் 33 நாடுகள் பங்கேற்று உள்ளதாக விண்வெளித்துறை அமைச்சர் ஜிதேந்திரா சிங் தெரிவித்துள்ளார்.



இதன்படி ரஷ்யா, இங்கிலாந்து, அமெரிக்கா, எகிப்து, பிரான்ஸ், ஜேர்மனி ஹங்கேரி, இந்தோனேஷியா, இஸ்ரேல், இத்தாலி ஜப்பான், கஜகஸ்தான், மொரிஷியஸ், மங்கோலியா, மியான்மர், கொரியா, சவுதி அரேபியா, சிரியா, ஸ்பெயின், ஸ்வீடன், தாய்லாந்து, நோர்வே, பெரு, நெதர்லாந்து, உக்ரைன், ஆர்ஜென்டைனா, அவுஸ்ரேலியா, பிரேசில், புருனே, பல்கேரியா, கனடா, சிலி, வெனிசுலா ஆகிய நாடுகளின் பங்கேற்க உள்ளதாக தெரிவித்துள்ளார்.

# காசா மீதான தாக்குதலுக்கு கண்டனம்

# யாழ். மாநகர சபையில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

காசாமீது இஸ்ரேல் மேற்கொண்டுவரும் தாக்குதலிற்கு இஸ்ரேல் நாட்டிற்கு எதிரான கண்டனத் தீர்மானம் ஒன்றை யாழ்.மாநகர சபையில் நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபையின் 7ஆவது மாதாந்தப் பொதுக்கூட்டம் நேற்று யாழ். மாநகரசபை முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் ஆரம்பமாகியது. இதன்போது யாழ். மாநகரசபை உறுப்பினர் எம்.எம். எஸ். முஸ்தபா, பலஸ்தீன நாட்டிலே இஸ்ரேல் நாட்டினால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் சுமார் 200வரையான சிறார்கள், பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இந்தத் தாக்குதலுக்கு உலக நாடுகள் பல கண்டனம் தெரிவித்துவருவதுடன் போராட்டங்களும் நடைபெற்றுவருகின்றது. எனவே இஸ்ரேல் நாட்டின் போர் விமானங்களினால் மேற்கொள்ளப்படும் குண்டு வீச்சுக்களை உடன் நிறுத்தவும் இராணுவம் ஆக்கிரமித்த நிலப் பகுதியை விட்டு வெளியேறவேண்டும் என்றும் கோரியே இந்தக்கண்டனத்தீர்மானம் கொண்டு வரப்பட்டு அனைத்து உறுப்பினர்கள் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது.

# இந்த மாதம் இடம்பெறும் பரீட்சைகள் பற்றிய விபரம்

(யாழ்பப்பாணம்)

இலங்கைப்பரீட்சைத்திணைக்களத்தினால் இந்த மாதத்தில் நடாத்தப்படவுள்ள திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைகள் நடைபெறும் திகதிகள் பற்றிய விபரம் வருமாறு,

| தொடர் இல. | பரீட்சையின் பெயர் | பரீட்சைத் தினம் / தினங்கள் | பரீட்சை நடைபெறும் இடங்கள் |
|---|---|---|---|
| 01 | இலங்கை நில அளவையாளர் சேவையின் வகுப்பு II தரம் II உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறனைகாண் தடைப்பரீட்சை - 2014 | 02 | கொழும்பு |
| 02 | இலங்கை புகையிரத திணைக்களத்தின் சன்டர், பெட்டி பரிசோதகர் மற்றும் கனிஷ்ட தரங்களின் சேவையாளர்களை இலங்கைத் தொழில்நுட்ப சேவையின் புகையிரத பாதுகாவலர் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2013(2014) | 02 | கொழும்பு |
| 03 | மக்கள் வங்கியின் முகாமையாளர் தரம் (III : 1) இற்கு பதவியேற்றலுக்கான எழுத்துமூலப் போட்டிப் பரீட்சை - 2014 | 24 | கொழும்பு |
| 04 | இலங்கை வெளிநாட்டு சேவையிலுள்ள அலுவலகர்களுக்கான 1 ஆம் 2 ஆம் வினைத்திறன் தடைகாண் பரீட்சை மற்றும் இரண்டாம் மொழிப் பரீட்சைகள் - 2012 (2014) | 25, 26, 27, 28, 29, 30, 31 | கொழும்பு மற்றும் உரிய வெளிநாட்டு தூதரகங்களில் |
| 05 | இலங்கை விவசாயக் கல்லூரிகளில் அனுமதி பெறுவதற்கான போட்டிப் பரீட்சை - 2014 (விவசாய உற்பத்தி தொழில்நுட்பம் தொடர்பான தேசிய டிப்ளோமா கற்கைநெறி - 2015/2017) | 30 | நாடு முழுவதும் |

### இலங்கைக்கான...

யின் அடிப்படையிலேயே நாம் செயலாற்றுகிறோம்.

தென் சூடானிலும், இலங்கையிலும் எமது தலையீடுகள் தொடர்பாகவே நான் குறிப்பிடுகிறேன்.

அமைதியையும், உறுதிப்பாட்டையும் ஏற்படுத்துவதற்காக நாம் தென்சூடானில் பல்வேறு தரப்புகளுடன் தொடர்ந்தும் பேச்சுக்களை நடத்தி வருகிறோம்.

ஆபிரிக்க ஒன்றியம், ஐ.நா. அமைதி முயற்சிகளுக்குத் துணையாக இதனை நாம் செய்கிறோம்.

இலங்கையில் எமது வெற்றிகரமான பயணத்தை முடித்துக் கொண்டு இப்போது தான் திரும்பியுள்ளோம்.

உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவின் அனுபவங்கள், மற்றும் அரசியலமைப்பைக் கட்டியெழுப்பும் செயல்முறைகள் குறித்து தமது நாட்டு மக்களுடன் பகிர்ந்து கொள்ளுமாறு தென்னாபிரிக்காவுக்கு இலங்கையிடம் இருந்து அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

எமது குழு, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அவரது அரசாங்க உறுப்பினர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை உள்ளிட்ட எதிர்க்கட்சித் தலைவர்களை சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியிருந்தது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### அமெரிக்காவின்..

பயிற்சிகளை வழங்குவதன் உள்நோக்கம் என்ன என்றும் வெளிவிவகார அமைச்சு கேள்வி எழுப்பி உள்ளது.

அமெரிக்க அதிகாரிகள், இல்ங்கை அதிகாரிகளை இது தொடர்பாக சந்தித்து உரையாடிய வேளை இலங்கை அரசாங்கம் அளித்த பதிலை அமெரிக்கத் தூதரகம் தனது அறிக்கையில் சுட்டிக் காட்டவில்லை என்றும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. குறிப்பிட்ட செயலமர்வு இரத்து செய்யப்பட்டதற்கு காரணம் அதற்கு எதிராக இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் என அமெரிக்கத் தூதரகம் கருதுவது போல தென்படுகிறது. அமெரிக்கத் தூதரகம் அதனைக் கண்டித்தும் உள்ளது, ஆர்ப்பாட்டம் செய்வதற்கும், ஒன்றுகூடுவதற்கும், கருத்து தெரிவிப்பதற்குமான உரிமையை இந்த விடயத்தில் அமெரிக்கத் தூதரகம் பொருத்தமற்ற விதத்தில் கேள்வி கேட்டுள்ளது, அதே அறிக்கையில் இந்த விடயங்களை வேறொரு இடத்தில் சுட்டிக்காட்டும் தூதரகம் இலங்கையில் இந்த கொள்கைகள் மீறப்படுகின்றன எனவும் தெரிவிக்கிறது. இலங்கை தொடர்பான அடிப்படைக் கொள்கைகளில் அமெரிக்க தூதரகம் மிகவும் தெரிவு செய்யப்பட்ட விதத்தில் செயற்படுவதாகத் தோன்றுகிறது. நாடு தேசிய உணர்ச்சிபூர்வமான, தேசிய நல்லிணக்கத்தை நோக்கி செயற்பட்டுக்கொண்டிருக்கையில் ஓர் இனக்குழுவை அல்லது பிரதேசத்தை மாத்திரம் .இலக்குவைத்து செயற்படுவது நம்பிக்கையீனத்தை உருவாக்கி தேசிய நல்லிணக்கத்தை பாதிக்கலாம் எனவும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

### நல்லூர்...

25 தினங்களும் தடையற்ற மின் விநியோகம் மேற்கொள்ள 500கிலோ வற் வலுவுள்ள பாரிய மின்பிறப்பாக்கி கனரகவாகனம் மூலம் பெறப்பட்டு ஆலய சூழலில் பொருத்தப்பட்டுள்ளதுடன் இன்று முதல் 25 தினங்களும் மின்விநியோக சேவையில் இந்த மின்பிறப்பாக்கி பயன்படுத்தப்படவுள்ளது. (இ)

### மனைவியை...

வேணி ஆகியோரை கோடரியால் வெட்டிய நிலையில் அவர் தலைமறைவாகியுள்ளார்.

இதனையடுத்து அயலவர்கள் மனைவி மற்றும் மனைவியின் தந்தை தாயை வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர்.

எனினும் சந்தேக நபரின் மனைவி இறந்த நிலையில் ஏனைய இருவருக்கும் வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை நேற்றுக் காலை காத்தார் சின்னக்குளம் கிராம சேவகர் பிரிவில் உள்ள வீடொன்றின் பின்புறமுள்ள மாமரத்தில் சந்தேக நபரான செ. இராசேந்திரன் தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளார்.

மேற்படி குடும்பத்தாருக்கு ஐந்து பிள்ளைகள் எனவும் அவர்களில் இரண்டு பிள்ளைகளுக்கு திருமணமானதாகவும் விசாரணைகளின்போது தெரிய வந்துள்ளது.இச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (70)

# நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை அமுல்படுத்த தவறிவிட்டது இலங்கை

## நவிபிள்ளை குற்றச்சாட்டு

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை முழுமையாக அமுல்படுத்துவதற்கு இலங்கை அரசு தவறிவிட்டதாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவி.பிள்ளை தெரிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பாக கடந்த வருடம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் தான் சமர்ப்பித்த அறிக்கை குறித்து இன்னமும் தான் உறுதியாக இருப்பதாக தெரிவித்துள்ள மனித உரிமை ஆணையாளர் அது பிரசாரம் என தெரிவிக்கப்படுவதையும் நிராகரித்துள்ளார்.

இலங்கை தன்னை புனர்நிர்மாணம் செய்து கொண்டு முன்னோக்கி நகர முயல்வது உண்மை, ஆனால் பாதிக்கப்பட்டவர்களின் கேள்விகளுக்கு தீர்வு காண வேண்டும்.ஆகவே இது பிரசாரம் என்பதை நான் நிராகரிப்பேன்,என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐ. நா. செயலாளர் நாயகத்தின் நிபுணர் குழுவின் அறிக்கையிலும், தன்னுடைய அறிக்கையிலும் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையிலும் காணப்படுவதை ஏற்றுக்கொண்டுள்ள நவிபிள்ளை நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை முழுமையாக அமுல்படுத்துமாறு அரசாங்கத்தை கேட்டோம் அரசு அதனையும் செய்யத் தவறிவிட்டது என நவி பிள்ளை தெரிவித்துள்ளார்.

# பாங்கேற்கார் ஜனாதிபதி

பாதுகாப்பு விவகாரம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களை முன்வைத்து ஸ்கொட்லாந்தின் கிளாஸ்கோவில் நடைபெற்று வரும் பொதுநலவாய விளையாட்டுப் போட்டி நிகழ்வுகளில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பங்குபற்ற மாட்டார் என அமைச்சரவைப் பேச்சாளரும் தகவல் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுப்பிற்பகல் அமைச்சில் நடைபெற்றபோது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

### ஒக்ரோபர்...

இலங்கை எல் நினோவின் பாதிப்பை சந்திக்க நேரிட்டால் நிலைமை மோசமடையும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஏப்ரல் தொடக்கம் ஒக்ரோபர் வரை வறட்சியான காலநிலை நிலவுவது வழக்கம் தான்.

விவசாயிகள் இந்த நிலைமை குறித்து நன்கு அறிவார்கள்.

வளிமண்டலவியல் திணைக்களம் இந்த வறட்சி குறித்து முன்னரே எச்சரித்திருந்தது என்றும் தெரிவித்துள்ளார்.

# தும்பளையில் இன்று சுனாமி ஒத்திகை

பருத்தித்துறை பிரதேச செயலகப்பிரிவில் உள்ள தும்பளை ஜே/405 கிராம உத்தியோகத்தர் பிரிவில் இன்று பி.ப. 3.00 மணிக்கு அனர்த்த முகாமைத்துவ பிரிவினரால் சுனாமி முன்னெச்சரிக்கை விழிப்புணர்வும் ஒத்திகைப் பயிற்சி செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படும் இது தொடர்பில் பொது மக்களை அமைதியாக இருக்குமாறும் இது ஒரு ஒத்திகைச் செயற்பாடு என்பதால் எவரும் குழப்பமடையத் தேவையில்லை எனவும் பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### கிளி. வலய...

தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் .அத்தோடு சாரதியும் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பூநகரியில் இருந்து கிளிநொச்சிக்கு தனது அலுவலகம் நோக்கி பயணித்துக்கொண்டிருந்த போது பரந்தன் -பூநகரி வீதியில் குடமுருட்டி பாலத்திற்கு அருகில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. வேகமாக பயணித்துக்கொண்டிருந்த வாகனத்தின் பின் சில்லு காற்றுப் போன காரணத்தினால் குறித்த வாகனம் மூன்று தடவைகளுக்கு மேல் தலை கீழாக தடம் புரண்டே விபத்து ஏற்பட்டுள்ளது. வாகனம் முற்றாக சேதமடைந்து காணப்படுகிறது. (29)

### ஊடக...

னர்.

இதில் வடக்கு,தெற்கு ஊடக கூட்டமைப்பு, சுதந்திர ஊடக இயக்கம், யாழ். ஊடக அமையம் என ஊடக சங்கங்கள் கலந்து கொண்டு கோசங்களை எழுப்பியவாறு ஊடக அடக்கு முறைக்கு எதிராக குரல்கொடுத்தன.

ஊடகத்தை நசுக்காதே, ஊடகபடுகொலைக்கு நீதிவேண்டும், வடக்கின் ஊடகவியலாளர்கள் பயங்கரவாதிகளா? ஜனநாயகத்தின் 4ஆவது தூண் உடைக்கப்படுகின்றது" "ஊடக பயிற்சி அரசை கவிழ்ப்பதற்காக அல்ல" "கருத்துகளுக்கு மரணம் தான் தீர்ப்பா" "உண்மைக்கு பரிசு கஞ்சா பொதிகளா" என்ற கோசங்கள் தாங்கிய பேரணியாக பஸ்நிலையத்திலிருந்து யாழ். போதனாவைத்தியசாலை, பழைய வெளிநோயாளர் பிரிவுவரை சென்று எதிர்ப்பை வெளியிட்டதுடன் இச் சதிச் சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் கலந்து கொண்ட சங்கங்களின் பிரதிநிதிகள் உரை நிகழ்த்தியதுடன் கண்டன அறிக்கை ஒன்றினையும் யாழ்.ஊடக அமையம் வெளியிட்டது.

இப்போராட்டத்தால் அப்பகுதியில் சிறிதுநேரம் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

இதில் ஸ்ரீதரன் எம்.பி., மாவைசோனாதிராசா எம்.பி. சுரேஷ்பிரேமச்சந்திரன் எம்.பி., விவசாய அமைச்சர் ஐங்கரநேசன், அனந்தி சசிதரன் உப்பட பல மாகாணசபை உறுப்பினர்களும் கலந்து கொண்டு ஊடக அடக்கு முறைக்கு எதிராக தமது எதிர்ப்பை வெளியிட்டனர். (இ,25)

# மன அழுத்தத்துடன் அவுஸி. புகலிடதாரிகள்

(கொழும்பு)

ஒரு மாத காலமாக நடுக்கடலில் தடுத்து வைக்கப்பட்டிருந்து தற்போது அவுஸ்ரேலிய கேர்ட்டின் தடுப்பு முகாமில் வைக்கப்பட்டுள்ள 157 இலங்கைத் தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்களில் 80 வீதமானவர்கள் மன அழுத்தத்திற்கு உட்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

கிறீன் கட்சியின் செனெட்டர் சரா யங் இதனை உறுதி செய்துள்ளார். மனநல மருத்துவர்கள் தாங்கள் மதிப்பீடு செய்த 5 புகலிடக்கோரிக்கையாளர்களில் நால்வருக்கு மன அழுத்தங்களும் உடற் காயங்களும் காணப்பட்டதாக தெரிவித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

உடனடியாக இவர்களின் பிரச்சினைக்கு ஒரு சுமூகமான தீர்வினை மொரிசன் வழங்க வேண்டும் இல்லை என்றால் இவர்களின் நிலைமை மிகவும் பாதிப்படையலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

கேர்ட்டின் முகாம், சிறுவர்களுக்கு உகந்ததல்ல அத்துடன் அங்கு போதிய வசதிகளும் இல்லை அதனால் அவர்களுக்கு உரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது அரசின் கடமை எனவும் தெரிவித்துள்ளார்.

இந்த எண்ணிக்கை அதிகமாக இருக்கலாம் என அவுஸ்ரேலிய ஊடகமொன்று நம்பத்தகுந்த வட்டாரங்களை மேற்கோள் காட்டி செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை கிறீன் கட்சியின் செனெட்டர் சரா யங் புகலிடக் கோரிக்கையாளர்களை சென்று பார்ப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## மாற்று ஆற்றலுடையோர் மாவட்ட சுய உதவிக் குழுவிற்கு பயிற்சிப்பட்டறை



(கிளிநொச்சி)

சமூக சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மாற்று ஆற்றலுடையோர் மாவட்ட சுய உதவிக்குழுவினருக்கான பயிற்சிப்பட்டறை நேற்றைய தினம் யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இப்பயிற்சிப்பட்டறையில் சமூக சேவைகள் மற்றும் அபிவிருத்தி திட்டங்களின் முன்னேற்றங்கள், மாவட்ட சுய உதவிக்குழுக்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள், தலைமைத்துவம், நேரமுகாமைத்துவம், தொடர்புத்திறன், சுய உதவிக் குழுக்களின் சீர்திருத்தம், போன்ற தலைப்புக்களில் கலந்துரையாடல்கள் மற்றும் பயிற்சிகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் சமூக சேவைகள் திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் ருமேˮ, யாழ். மாவட்ட சுய உதவிக்குழு அமைப்பின் செயலாளர் சுஷெர, தேசிய ஒருங்கிணைப்பாளர் சாந்தகுமார், மாகாண உதவியாளர் சுரேஷ்குமார், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## பிரமந்தனாறு குளத்தில் மீன்பிடித்தவர் மாயம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி பிரமந்தனாறுக் குளத்தில் மீன் பிடித்துக்கொண்டிருந்த தர்மபுரத்தைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தந்தையான பழனி பன்னீர்ச்செல்வம் (வயது 42) என்பவர் நேற்று முன்தினம் காணாமற் போயுள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் உறவினர்கள் தங்களுக்கு தகவல் வழங்கியதை அடுத்து, அக்குளத்தில் இவரைத் தேடி வருவதாகவும் பொலிஸார் கூறினர்.

இவரை முதலை இழுத்துச் சென்றிருக்கலாமென்று சந்தேகிப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## யாழ்.மத்திய கல்லூரியில் கைத்தொழில் கண்காட்சி



(யாழ்ப்பாணம்)

வடமாகாண கைத்தொழில் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மாகாணக் கைத்தொழில் கண்காட்சி நேற்றுக் காலை 9.30 மணியளவில் யாழ்.மத்திய கல்லூரியில் ஆரம்பமானது. இந்தக் கண்காட்சியை வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் நாடாவை வெட்டி ஆரம்பித்து வைத்தார். இந்த நிகழ்வில் கைத்தறி நெசவு உற்பத்திப் பொருட்கள், மட்பாண்ட உற்பத்திப் பொருட்கள், சிற்பியிலான • கைப்பணிப் பொருட்கள், பனை தெங்கு சார் உற்பத்திப் பொருட்கள் என்பன காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. இக்கண்காட்சி இன்றைய தினமும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிகழ்வில் மாகாண பிரதம செயலாளர் விஜயலட்சுமி, வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சத்தியசீலன் மற்றும் கைத்தொழில் திணைக்கள அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

## காரைநகர் சிறுமி துஷ்பிரயோகம்; வழக்கு விசாரணை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் ஊரி பகுதியில் இரண்டு சிறுமிகள் கடற்படை சிப்பாய்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை தொடர்பிலான வழக்கு விசாரணையினை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 04 ஆம் திகதி வரை யாழ். சிறுவர் நீதிமன்ற நீதிபதி க.ஜிவராணி ஒத்திவைத்துள்ளார்.

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் காரைநகர் ஊரி பிரதேசத்தில் இரு சிறுமிகளை பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்ட சந்தேகத்தின் பேரில் 7 கடற்படைச் சிப்பாய்கள் கைது செய்யப்பட்டு கடந்த 21 ஆம் திகதி முதல் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

மேற்படி வழக்கு விசாரணை கடந்த 21 ஆம் திகதி சிறுவர் நீதிமன்றில் நீதிபதி க.ஜீவராணி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, 7 நபர்களையும் பிணையில் விடுதலை செய்ய அனுமதித்ததுடன், வழக்கு விசாரணையினை நேற்றுவரை ஒத்திவைத்துள்ளார்.

அதனடிப்படையில், நேற்று வியாழக்கிழமை மேற்படி வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்ட போது, வழக்கினை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 04 ஆம் திகதி வரை யாழ். சிறுவர் நீதிமன்ற நீதிபதி ஒத்திவைத்துள்ளார். (25)

## எழுவருக்கு மரணதண்டனை

(யாழ்ப்பாணம்)

நபரொருவர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் குற்றம் சாட்டப்பட்ட எழுவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பாணந்துறை மேல் நீதி மன்றத்தால் நேற்று இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## மீசாலையில் வீதி விபத்து




(யாழ்ப்பாணம்)

மீசாலை சந்தியில் நேற்றுப் பகல் நடைபெற்ற கன்ரர் விபத்தில் வீட்டு மதிலை உடைத்துக்கொண்டு கன்ரர் உட்புகுந்தது. நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கன்ரர் வாகனத்தை யாழ்ப்பாணத்திலிருந்து வந்து கொண்டிருந்த கன்ரர் வாகனமே மோதியது. நின்றிருந்த கனரர் வாகனத்தின் பின்னால் வந்த வாகனம் மோதியதில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனம் வீட்டு மதிலையும் மின்சாரத் தூணையும் உடைத்துக்கொண்டு வளவினுள் உட்புகுந்தது. (11,25)

## அமைச்சரவையின் ஒப்புதலின்றி அமைதிப்படை அனுப்பிய ராஜீவ்

### காலம் கடந்து நட்வர்சிங் விளக்கம்

(கொழும்பு)

இலங்கைக்கு மத்திய அமைச்சரவையின் ஒப்புதலின்றி முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அமைதிப்படையை அனுப்பி வைத்தார் என்று இந்தியாவின் முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர் நட்வர்சிங் தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போது, இலங்கை தொடர்பாக அவர் கருத்து வெளியிட்டார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தன, தமக்கு எதிராக ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சி நடப்பதாகவும், இதனால் இந்திய அமைதிப்படையை அனுப்பி வைக்குமாறும் ராஜீவ் காந்தியிடம் கோரிக்கை விடுத்தார்.

இதனையடுத்து, ராஜீவ் காந்தியும் அமைதிப்படையை அனுப்ப ஒப்புக்கொண்டார்.

ராஜீவ் காந்தியும் சரி.. அவரது அமைச்சரவை சகாக்களும் சரி யாழ்ப்பாணத்தில் உணவுப் பொட்டலம் போடும் முன்பாக ஜெயவர்த்தனவிடமும் ஐ.நா.வில் உள்ள இந்தியப் பிரதிநிதியிடமும் தெரிவிக்கவில்லையே என்பதைப் பற்றியெல்லாம் உணரவில்லை.

சர்வசாதாரணமாக உணவுப் பொட்டலங்களை யாழ்ப்பாணத்தில் போட்டனர்.

ராஜீவ் காலத்தில் இலங்கை பிரச்சினைதொடக்கம் முதலே தவறாக கையாளப்பட்டது. கடைசியில் அது தோல்வியைத்தான் சந்தித்தது என்றார்.

## விசேட தேவையுடைய யுவதியைக் காணவில்லை



வவுனியா, நாவற்குளம் ஓமந்தைப் பகுதியில் வசித்து வரும் விசேட தேவையுடைய யுவதியை கடந்த 5 நாட்களாக காணவில்லை என யுவதியின் தந்தை கடந்த புதன்கிழமை வவுனியா பிரதேச செயலக சிறுவர் பெண்கள் பிரிவில் முறைப்பாடு செய்துள்ளார்.

சிவலிங்கம் சிவதர்சினி என்ற 21 வயது யுவதியே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

இவர் கடந்த ஞயிற்றுக்கிழமை காணாமற்போனதாகவும் இது தொடர்பில் வவுனியா பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்துள்தாகவும் யுவதியின் தந்தை மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஆகஸ்ட் 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.